பக்கங்கள்: 20 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 18, ஞாயிற்றுக்கிழமை 02.07.2017 | கதிர் 238

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## தீர்வுக்கான திட்டங்களும் அடங்கிய
# புதிய அரசமைப்புக்காக மட்டுமே அரசுக்கு கூட்டமைப்பின் ஆதரவு



### சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தகவல்

(எஸ்.நிதர்சன்)

**"புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்திற்காகவே நாம் அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அரசு மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. அதனால் எமது ஆதரவை விலக்கி அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபடமாட்டோம்."**


**-இவ்வாறு யாழ்ப்பாணத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.**

புதிய அரசமைப்பு உருவாக்கப்படாது என்ற ஒரு நிலைவருமாக இருந்தால் நாம் உடனடியாகவே அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்வோம். ஆனால், அப்படியான ஒரு நிலை இப்போது ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எமது எதிர்பார்ப்பிற்கு ஏற்றாற்போல் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பணிகள் தற்போது வேகமாக இடம்பெற்றுவருகின்றன. இதில் சில தாதமங்கள் இருந்தா

பக்கம் 03

## ஜனாதிபதியின் புதிய செயலாளராக ஒஸ்ரின் பெர்னான்டோ நியமனம்



கொழும்பு, ஜூலை 02

நீண்ட கால சிவில் சேவை அதிகாரியான ஒஸ்ரின் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமனம் பெறுகின்றார்.

பக்கம் 22

## இராணுவத் தளபதியாக மகேஷ் சேனநாயக்கா?



புதிய இராணுவத் தளபதியாக ஜெனரல் மகேஷ் சேன நாயக்காவே நியமிக்கப்படுவார் என நேற்றிரவு கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் புதிய செயலாளராக ஒஸ்ரின் பெர்னாண்டோ நாளை பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர் பதவியேற்றதும் ஜெனரல் மகேஷ் சேன நாயக்கவை இராணுவத் தளபதியாக நியமிக்கும் கடிதத்தை அவர் உத்தியோக பூர்வமாகத் தயாரிப்பார் எனக் கூறப்பட்டது. (முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## கூட்டமைப்பின் முதலமைச்சராகவே விக்கி பதவியில் தொடரவேண்டும்

### சுமந்திரன் கூறுகிறார்

(எஸ்.நிதர்ஷன்)

"வடக்கின் முதலமைச்சராக சி.வீ.விக்கினேஸ்வரனேதவிவிக்கவேண்டும். ஏனெனில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர். கூட்டமைப்பின் ஐந்து கட்சிகளும் சேர்ந்து அழைத்து வந்த மையால்தான் அவர் முதலமைச்சராக வந்தார்."

-இவ்வாறுதெரிவித்தார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

சி.வீ.விக்கினேஸ்வரன் கூட்டமைப்பின்முதலமைச்சராகவேபதவியைத்தொடர வேண்டும்.கூட்டமைப்பிற்கு எதிரான ஒருவராக அவர் முதலமைச்சர் பதவியை வகிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

நேற்று யாழ்ப்பாணத்தி

பக்கம் 22

★உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம்
★மழவலை தொழிலுக்குத் தடை விதிக்கும் சட்டம்
★காணாமலாக்குதலைக் குற்றமாக்கும் சட்டம்

## முக்கிய 3 சட்டமூலங்கள் அடுத்து வரும் நாள்களில்

கொழும்பு, ஜூலை 02

மூன்று முக்கிய சட்ட மூலங்கள் அடுத்து வரும் நாள்களில் நாடாளுமன்றுக்கு வரவிருக்கின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சீர்திருத்தச் சட்ட மூலம்இரண்டாவதுவாசிப்புக்காக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றுக்குவருகின்றது. இந்தச் சட்ட மூலத் துக்கு ஏற்கனவேஅமைச்சரவை அங்கீகாரம் அளித்துவிட்டதுஎனக்கூறப்படுகின்றது.

இந்தச்சட்டமூலம்நிறைவேற்றப்பட்டு சபாநாயகரால் அது தொடர்பான ஒப்பமிடப்படுமானால் அதிலிருந்து அடுத்த 75 நாள்களுக்குள் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், கடலில் அடித்தளத்தோடு மீன்வளத்தை வாரி அள்ளும் மடிவலைத்தொழிலுக்குத்

பக்கம் 22

## ஆளும் தரப்பின் முக்கிய கூட்டம் நாளை

கொழும்பு, ஜூலை 02

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கான விசேட சந்திப்பு ஒன்று நாளை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில்நடைபெறவுள்ளது. பிரதமர், அமைச்சர்கள்,

பக்கம் 22

## சிறைக் கைதி தாக்கப்பட்டமைக்கு சுமந்திரன் எம்.பி. கடும் கண்டனம்

(எஸ்.நிதர்ஷன்)

தம்மைக்கொலைசெய்ய முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் சிறைச்சாலையில்தாக்கப்பட்டமையை நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - என்னைக் கொலை செய்ய முயன்றனர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவர்கள் பயங்கரவாதத்தடைச்சட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டபோது நான் அதற்குக் கடும் எதிர்ப்

பக்கம் 22

## அரசமைப்பு உருவாக்கச் செயற்பாட்டை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுங்கள்!

### ஜெனீவா மனித உரிமைகள் கவுன்சில் வற்புறுத்தல்

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன்மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அது தொடர்பில் பொது மக்களுக்குவிளக்கமளிக்கப்பட வேண்டும் எனவும் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்சில் அரசுக்குஅறிவித்துள்ளது.

அத்துடன் அரசமைப்புத்திருத்தத்தின் ஊடாக அதிகாரத்தைப் பரவலாக்கும் முறை மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும்என்பதுடன், அரசமைப்பு சட்டவாக்க சபையின் செயற்பாடுகள் அரசியல் ரீதியாக இருக்கக்கூடாது எனவும் மனித உரிமைகள் கவுன்சிலில் கூறியுள்ளது.

இதனைத் தவிர புதிய

பக்கம் 22

## சுமந்திரன் எம்.பி. பதவியை விட்டு விலகி வந்து மாகாணத் தேர்தலில் போட்டியிடத் தயாரா?

### பதில் சவால் விடுக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் சுமந்திரன், முடிந்தால் தனது பதவியை இராஜினாமா செய்து விட்டு மாகாண சபைத் தேர்தலிலேயோ அல்லது வேறு தேர்தலிலேயோ போட்டியிட்டு வெற்றி கொள்ளட்டும்" - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன்சவால்விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையைக்கலைத்துவிட்டுத்தேர்தலில் இறங்கித் தனது பக்கப்பலத்தை நீதியரசர் விக்

பக்கம் 22




## இலங்கையில் விமானத்தைக் கடத்தி அமெ. தூதரகத்தைத் தாக்க முயற்சி?

இலங்கையில்விமானம் ஒன்றைக் கடத்தி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர் என அமெரிக்கப்பாதுகாப்புப்பிரிவினருக்குத்தகவல் கிடைத்துள்ளது எனவும், இது தொடர்பாக தாங்கள் இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர் எனவும் சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பக்கம் 22

# காணாமற்போனோருக்கு என்ன நடந்தது என கண்டறிந்து கூற வேண்டியது அரசின் பொறுப்பு!

## ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வல் பரணகம தெரிவிக்கிறார்



கொழும்பு, ஜூலை 02

காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து கூற வேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும் அதிலிருந்து விலகிச்செல்ல முடியாது என காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்திய முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வல்பரணகமதெரிவித்துள்ளார்.

காணாமற் போனோரின் உறவினர்கள் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்ற நிலைமையில் அதுதொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமற் போனோரின் உறவினர்களைப் பொறுத்தவரையில் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை உள்ளது. அந்த உரிமையை யாரும் மறுக்க முடியாது. எனவே காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து கூறவேண்டியது அரசின் கடமையும் பொறுப்புமாகும் அதிலிருந்து விலகிச் செல்ல முடியாது.

காணாமற்போனோர் தொடர்பாகக் கண்டறிவதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்கி அதனூடாக உண்மையைக் கண்டறியவேண்டியது அரசின் கடமை. அதனை தட்டிக் கழிக்கமுடியாது. உண்மையைக் கண்டறிய முடியுமா, முடியாதா என்பது வேறுகதை ஆனால் அதற்கான முயற்சியை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

காணாமற்போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நான் இதுவரை முழுமையாக ஆராயவில்லை.

எவ்வாறிருப்பினும் காணாமற் போனோர் விவகாரத்தில் அரசு விரைவாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். இந்த விவகாரத்தில் வெளிநாட்டு நிபுணர்களின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் கண்காணிப்பாளர்களும் இருக்கலாம். எமது ஆணைக்குழு ஆயிரக்கணக்கான எழுத்துமூல முறைப்பாடுகளை காணமற்போனோர் தொடர்பில் பெற்றுக்கொண்டது.

அத்துடன் சுமார் 6 ஆயிரம் பாதிக்கப்பட்ட மக்களை நாங்கள் சந்தித்து கலந்துரையாடினோம். அதன் பின்னர் அந்த ஆணைக்குழு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது.

அந்த விசாரணைக்குழு பாதிக்கப்பட்டோரைச் சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொண்டது. இந்த செயற்பாடு ஒரு தொடர் நடவடிக்கையாக அமைந்தது. இவ்வாறான நிலையில் எமது காணாமற் போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை முடிவுக்கு வந்தது. அதனால் எமது செயற்பாடுகளைத் தொடரமுடியாது போனது.

எனினும் ஒருசில விடயங்களை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். அதாவது தமது அன்புக்குரியவர்கள் காணாமற் போன நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு முதலில் தமது வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஐந்து லட்சம் ரூபா பணத்தை வழங்க வேண்டும். இந்த விடயத்தில் தாமதம் இருக்கக்கூடாது.

அதனூடாக பாதிக்கப்பட்ட மக்கள் தமது பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும். அதேபோன்று வீடுகள்இல்லாமல் இருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

காணாமற் போனவர்களின் உறவினர்களின் காணிகள் அபகரிக்கப்பட்டிருப்பின் அவை விரைவாக மீளளிக்கப்படவேண்டும். இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும். காணாமற் போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட மக்களுக்கே இருக்கிறது.

அந்தப் பொறுப்பை யாரும் தட்டிக்கழிக்க முடியாது. குறிப்பாக இது தொடர்பான கடமையை அரசு தட்டிக்கழிக்க முடியாது.

இது தொடர்பில் அரசுக்கு பெரியதொரு பொறுப்புக் காணப்படுகின்றது. அதாவது காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க அரசு ஒரு பொறிமுறையைத் தயாரித்து அதனூடாக உண்மையைக் கண்டறியவேண்டும். - என்றார்.

கொழும்பில் வெளிநாட்டு பெண்களுக்கு ஆபத்து

## அமெ.தூதரகத்தின் கருத்துக்கு ஓட்டோ சாரதிகள் எதிர்ப்பு!



கொழும்பு, ஜூலை 02

கொழும்பு நகரில் செயற்படும்முச்சக்கரவண்டி(ஓட்டோ) சாரதிகள் தொடர்பில் அமெரிக்க தூதரகத்தால் வெளியிடப்பட்ட கருத்திற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய ஒருகிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் பணியாளர்கள் சங்கம் இணைந்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இலங்கையில் சுற்றுலா பயணத்தில் ஈடுபடும் வெளிநாட்டு பெண்கள் மீது அவசியமற்ற பாலியல் சேட்டைகள் மேற்கொள்ளப்படுகின்றன என அமெரிக்க தூதரகத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

கொழும்பு முச்சக்கரவண்டி சாரதிகள் இவ்வாறான அங்க சேட்டையில் ஈடுபடுகின்றனர் என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனால், கொழும்பு நகரில் முச்சக்கரவண்டிகளில் தனியாக பயணிக்க வேண்டாம் என இலங்கை சென்றுள்ள அமெரிக்க பெண்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி துறையை வீழ்ச்சியடையச் செய்யும் நடவடிக்கையாக இது பார்க்கப்படுகின்றதென அந்தச் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் முச்சக்கரவண்டி துறை கட்டுப்பாடுகளுக்காக எவ்வித வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப் படவில்லை என இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகளின் தொழிற்சங்க தலைவர் லலித் தரம்சேகர தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அவ்வாறான சம்பவங்கள் இடம் பெறக் கூடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுற்றாடல் பாதிப்புக்களை தடுக்க அனைவருமே பாடுபட வேண்டும்!

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

இரத்தினபுரி மாவட்டம் தற்போது காணப்படும் நிலையை மேலும் 25 வருடங்களுக்கு அப்பாலும் பேணவேண்டுமாயின் அங்கு நடைபெறும் சுற்றாடல் பாதிப்புக்களை உடனடியாக தடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பொது மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் பலவற்றையும் திறந்துவைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரத்தினக்கல் கைத் தொழிலை மேம்படுத்தல் அவசியமானது இருப்பினும் தமது எதிர்கால சந்ததியினரும் இப்பிரதேசத்தில் வாழும் உரிமையை உறுதி செய்து அங்கு இடம்பெறும் சுற்றாடல் பாதிப்புக்களை தடுப்பதற்கான தமது பொறுப்புக்களை வர்த்தக சமூகத்தினரைப் போன்றே ஏனையோரும் நிறை வேற்ற வேண்டும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு நிலைமைகள் தொடர்பாக தேசிய கட்டடங்கள் ஆய்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுள் அனுமதியற்ற முறையில் மேற்கொள்ளப்படும் இரத்தினக் கல் அகழ்வு காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்புக்களே முதன்மையான காரணமாகும்.

காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களால் பூகோள வெப்ப மடைதல் காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றங்களை இன்று உலக நாடுகள் அனைத்துமே எதிர்நோக்க நேர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச நன்கொடையாளர்கள் மற்றும் அமெரிக்க பிரஜையான லுவிஸ் எலனினால் தனிப்பட்ட அன்பளிப்பில் இந்த புதிய கட்டடத்தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அமெரிக்க பிரஜையான லுவிஸ் எலனுக்கு நினைவுப்பரிசொன்றும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

**பன்னங்கண்டி மேட்டுக்காணி விற்பனைக்குண்டு**

பரந்தன், பூங்காவனம் சந்தியிலிருந்து
கென்னடிறோட் மூன்றாம் வாய்க்கால்
பன்னங்கண்டி கிராம
உத்தியோகத்தர் அலுவலகம் எதிரே
தண்ணிவாய்க்கால் ஓரமாக
அரை (1/2) ஏக்கர் மேட்டுக் குடியிருப்பு
நிலம் விற்பனைக்குண்டு.

077 935 2274 / 077 512 4361

# புதிய அரசமைப்புக்காக மட்டுமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லும்முன்னோக்கிநகர்கின்றோம். அதற்காகஅரசுடன்தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கின்றோம் எனவும் சுமந்திரன் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய அரசமைப்பு தொடர்பாக விரிவாக அவர் விளக்கமளித்தார். மேலும் அரசுக்கான ஆதரவு குறித்தும் அவர் கருத்துக்களைக் கூறினார்.

அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

### உபகுழுக்கள் உருவாக்கம்

புதிய அரசமைப்பு தயாரிப்பு தொடர்பாக நாம் ஏற்கனவே மக்களுக்கு விளக்கமளித்திருக்கின்றோம். கடந்த வருடம் ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் அரசமைப்புப் பேரவையும் 6 உப குழுக்களும் உருவாக்கப்பட்டு பேச்சுக்கள் நடைபெற்றன.

அந்த 6 உப குழுக்களுக்கும் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டு சென்ற வருட இறுதியில் அவற்றின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை அரசமைப்புப் பேரவைக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதேகாலத்தில் மேலும் 6 விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைக் குழு பேசி கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இடைக்கால அறிக்கையின் வரைவு மேற்படி குழுவில் உள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டது.

அந்த வரைவு கடந்த வருட இறுதியில் அல்லது இவ்வருட ஆரம்பத்தில் வெளிவரும் என நம்பப்பட்ட நிலையில் சில கட்சிகள் தங்களுக்குள் பேசவேண்டும் எனக் கேட்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் மாறுபட்ட கருத்துக்கள் உருவாகின. இதனால் தாமதம் ஏற்பட்டது. அதையடுத்து சகல கட்சிகளுக்கிடையிலும் பேச்சுக்கள் நடைபெற்றன.

குறிப்பாக ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் 4 சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன. அதன்போது புதிய அரசமைப்பில் பூரணமான அதிகாரப்பகிர்வுமுறைவரவேண்டும் எனக் கூறிய அவர்கள் நிறைவேற்று அதிகார முறை ஒழிக்கப்படவேண்டும் என்றனர். அவ்வாறு வந்தால் மட்டுமே தாங்கள் ஆதரிப்பர் எனவும் கூறினர்.

### பின்னடைவு

அக்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் குழப்பம் ஏற்பட்டது. மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் ஆதரவானவர்களால் இந்த நிலை ஏற்பட்டது.

மைத்திரிபால சிறிசேன பொது எதிரணி வேட்பாளராக இறங்கியபோது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என முதலாவது வாக்குறுதி கொடுத்தார். அதை மஹிந்த எதிர்த்தார். இப்போது அவர்கள் எதிர்க்கிறார்கள். இதனால் சில பின்னடைவுகள் உருவாகின.

சு.க. ஒருகுழுவைஉருவாக்கி தங்கள் நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் என மத்திய செயற்குழு கேட்டிருந்தது. அந்தக் குழு ஐக்கிய தேசியக் கட்சியுடனும் எங்களுடனும் பேசியது.

அதன்விளைவுஎன்னவென்றால் – அதிகாரப் பகிர்வு தொடர்பான இடைக்கால அறிக்கையில் உள்ள அனைத்துவிடயங்களுக்கும் நாங்கள் இணங்கியுள்ளோம்.

நிறைவேற்று அதிகாரம் என்ற சொற்றொடர் பாவிக்கப்படாமல் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் போதுமானதாக இருக்கின்றன எனக் கூறினார்கள்.

எதிர்வரும் 4, 5 ஆம் திகதிகளில் நடவடிக்கைக் குழு கூடவுள்ளது. இதில்சு.கவின் நிலைப்பாடும் அறிவிக்கப்பட்டு இடைக்கால அறிக்கை வெளிவரும் என நாம் நம்புகிறோம். காலம் தாழ்த்தாமல் அரசு இதை வெளிக்கொண்டு வரவேண்டும் என நாங்கள் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இடைக்கால அறிக்கையாக இருந்தாலும், இதில் முக்கியமான அடிப்படை கோட்பாடுகளில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளமை தெரியவரும். அது நாடு முழுவதுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும். விசேடமாக பல சந்தேகங்களுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களுக்கு இது ஒரு வெளிச்சத்தை கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. – என்றார்.

### ஒற்றையாட்சியா? சமஷ்டியா?

மேலும், ஒற்றையாட்சியா? சமஷ்டியா? என்ற பெயர்ப் பலகை தொடர்பாகவும் சுமந்திரன் இங்கு கருத்துரைத்தார்.

இந்த பெயர்ப் பலகை சம்பந்தமாக ஆரம்பத்திலிருந்தே நாம் எமது நிலைப்பாட்டைக் கூறி வருகின்றோம். யாழ்.முகாமையாளர் அமையத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் நடந்த விவாதத்தின்போது, 'பெயர்ப் பலகை இருக்காது. ஆனால் சமஷ்டியின் இரு அம்சங்கள் கொண்டதாக அரசமைப்பு வரும். இந்த இரு விடயங்களும் இருப்பது அறிக்கை வெளியான பின்னர் தெரியவரும்' எனக் கூறியிருந்தேன்.

இது சம்பந்தமாக இலங்கைச் சட்டத்தரணிகள் கலந்துகொண்ட செயலமர்வு ஒன்றில் குருபரனும் என்னுடன் பங்குகொண்டிருந்தார். அப்போது சமஷ்டி என்றால் என்ன? அதில் இருக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை? என்பன தொடர்பாகவும்கூறியிருந்தேன். அதற்கு குருபரனும் இணங்கியிருந்தார். அவர் அப்போது மறுப்பும் தெரிவிக்கவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் சமஷ்டி என்பது, 'மாகாணங்களுக்கு கொடுக்கப்படும் அதிகாரங்களில் மத்திய அரசு அதிகாரம் செலுத்தக் கூடாது. அது முழுமையானதாக இருக்க வேண்டும்' என்பது முதலாவது அம்சம்.

இரண்டாவது அம்சம் – "கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீள பெறப்பட முடியாதவையாக இருக்கவேண்டும்'. இவை இரண்டும் இருந்தால் அது சமஷ்டி. அதற்காகசமஷ்டிஎன்றுபெயர்ப் பலகை இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

### வரைவிலக்கணம்

புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை வரைபிலே மாற்று வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அதிலே ஒன்று 'ஒற்றையாட்சி' என்கின்ற தமிழ்ச்சொல் ஆட்சி முறையைக் குறிக்கின்ற காரணத்தினாலே அது பொருத்தமற்ற சொல். அது உபயோகிக்கப்பட முடியாது என்கின்ற எங்களது நிலைப்பாட்டிற்கு இணங்கியுள்ளார்கள்.

ஆனால் 'எக்கிய' என்ற சிங்களச் சொல் ஆட்சி முறையைக் குறிப்பதல்ல. அது 'ஒன்றுபட்ட' என்பதை மட்டும்தான் குறிக்கிறது. இதன் உண்மையான அர்த்தமும் அது என்றுதான் சொல்லப்படுகிறது. அது சரி.

ஆனால் அந்தச் சொல்லும் இலங்கை அரசமைப்புச் சட்டத்திலே இதுவரை ஒற்றையாட்சிக்கான வரைவிலக்கணமாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அதைச் சரியான விளக்கத்திற்காக உபயோகிக்கப்படலாம். ஆனால், அதன் வரைவிலக்கணத்துடன் சேர்த்துத்தான் உபயோகிக்கவேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கு மாற்று வழியாக சொல்லப்பட்டிருக்கின்ற விடயமென்னவென்றால் 'எக்கிய இராச்சிய', (ஒருமித்த நாடு) என்ற சொற்றொடரை 3 மொழிகளிலும் எழுதுவது. அது ஆட்சி முறையைக் குறிப்பதாக இல்லாமல் பிளவுபடாத ஒரு நாடு என்பதைக் குறிக்கிறது என்ற வரைவிலக்கணத்தை எழுதுவது என மாற்றுவழி முன்வைக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தால் அது ஒருவரையும் தவறாக வழிநடத்தாது.

### சு.க. இணக்கம்

சு.க. இவ்வாறான யோசனைக்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. எம்மோடு நடத்தப்பட்ட பேச்சுகளிலேயே இந்த இணக்கம் ஏற்பட்டது. அதை நாம் ஒரு முன்னேற்றகரமான விடயமென நினைக்கிறோம்.

இந்த இணக்கப் பேச்சு நடைபெற்ற மறுநாள் ஒற்றையாட்சி என்கின்ற பதம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என இணக்கம் காணப்பட்டிருக்கின்றது எனக் கூறியிருந்தேன். அப்போது சு.கவின் இரு அமைச்சர்கள் அவ்வாறு மாற்றப்படாது இருக்கும் எனக் கூறினார்கள்.

நான் கூறியதும் சரி. அவர்கள் கூறியதும் சரி. அதாவது, நான் கூறியது வரை விலக்கணம் மாற்றப்படும் என. அவர்கள் கூறியது 'ஏக்கிய ராச்சிய' இருக்கும் என. 'ஏக்கிய ராச்சிய' என்பது ஒற்றையாட்சியைக் குறிக்காது. அதற்கு வேறு வரைவிலக்கணம் கொடுக்கப்படும். இப்படியான சொற்றொடர்கள் அல்லது சொற்களே பிரிவினையை உருவாக்குகின்றன.

### முரண்பாடுகளை ஏற்படுத்துவோம்

13 ஆம் திருத்தம் என்று கூறப்பட்டவுடனேயே அதில் மாறுபட்ட கருத்துக்கள் வருகின்றன. அதனால்தான் இடைக்கால அறிக்கையில் 13 ஆம் திருத்தம்பற்றி எதுவும் எழுதப்படவில்லை. பெயர்ப் பலகைகளைப் போட்டு, பிரிவினையை எதிர்பார்த்து, முரண்பாடுகளைத் தேற்றுவிக்கின்ற அணுகுமுறையை நாங்கள் கடைப்பிடிக்கவில்லை. ஆனால், சிலர் வேண்டுமென்றே அப்படியான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றனர்.

வடக்கு – கிழக்கு இணைப்பு மாகாணசபை அதிகாரப் பகிர்வின் அடிப்படை அலகு என்று அனைவராலும் இணங்கப்படுகின்றது. அது இடைக்கால அறிக்கையில் வரும். அதனுடன் சேர்த்து "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு சேர்ந்த ஒரு அலகாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது" என்றும் எழுதப்பட்டுள்ளது.

மாகாணம் அதிகாரப் பகிர்வின் அலகு என்பதே எல்லோருடைய நிலைப்பாடும் ஆகும். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, "வடக்கு கிழக்கு ஒரு அலகாக இருக்க வேண்டும்" என்பதாகும். இது இறுதியில் எப்படிஅமையும்என்றுஇப்போது சொல்ல முடியாது.

### தனிப்பட்ட கருத்து

ஆனால் ஒவ்வொரு மாகாணமும் இணங்கினால்தான் அந்த மாகாணங்கள் இணையக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது கூட்டமைப்பின் கருத்து. என்னுடைய நிலைப்பாடும்அதுதான். ஆனால், இந்த இணைப்பு உடனடியாகச் சாத்தியம் இல்லை என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து.

தற்போது அந்த இணைப்பு சாத்தியம் இல்லை என்று கூறுவதற்கு காரணம், தற்போது கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஆனால், எப்போதும் இந்த நிலைப்பாட்டில்தான் முஸ்லிம் மக்கள் இருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கத் தேவை இல்லை. அந்த நிலைமை மாறும். மாற்றப்பட வேண்டும். முஸ்லிம்களும் சேர்ந்து வடக்கு – கிழக்கு இணைப்பைக் கோருகின்றபோது அவர்களுடன் எமது இணைப்புப் புதுப்பிக்கப்படும்.

யுத்தத்தால் இரு இனங்களுக்கும் இடையில் பாரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. அந்தவிரிசல்ஒரு இரவில் மறைந்துவிடாது. இணைப்பு வேண்டுமென்று கோருகின்ற நாங்கள் அவர்களுடனான – இணைப்புக்கான – உறவைப் புதுப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அதைவிடுத்துவடக்கு–கிழக்கு இணைப்பை ஒரு கோசமாகக் கூறிக்கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. 13 ஆம் திருத்தம் பிரயோசனமற்றது, வட, கிழக்கு – இணைப்பு தேவை என்றுகோசமாகக்கூறிக்கொண்டிருந்தால் அது நடமுறைக்கு வராது.

இருப்பினும் 13 ஆம் திருத்தத்தில்தான் வரலாற்றில் முதல் முறையாக மாகாணங்கள் பகிரப்பட்டது. தற்காலிகமாகவேனும் வட, கிழக்கு இணைப்புப் பற்றிக் கூறப்பட்டது.

எமக்குவேண்டும்எனக்கோசம் எழுப்பக்கூடியசிலவிடயங்கள்13 ஆம் திருத்தத்தில் இருக்கின்றன. ஆனால், இதுவும் வேண்டாம், அதுவும் வேண்டாம் எனக் கூறி பெயர்ப் பலகையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு உள்ளடக்கத்தைப் பார்க்காமல் இருப்பது தவறு, இதுமக்களைப்பயம்காட்டி –மக்களைத்திசைதிருப்பி–வரும் தீர்வைக்குழப்பநினைப்பதாகும்.

ஒவ்வொரு நாளும் வேண்டுமென்றே 13 இற்குள் தீர்வு வரப் போகிறது, ஒற்றையாட்சிக்குள் தீரவு வரப்போகிறது என்று மக்களுக்குப் பயம் காட்டி, மக்களைக் குழப்பித்தீர்வை இல்லாமல்செய்கின்றநோக்கத்துடன்சிலர்செயற்படுகின்றனர். அதனாலேயே இவைகளை வெளிப்படையாகக் கூறுகின்றேன்.

மேலும், வடகிழக்கு இணைப்பு தொடர்பாக நாம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸூடன் பேசிக்கொண்டிருக்கின்றோம். அதற்கு காரணம்முஸ்லிம்காங்கிரஸூடன் தான் அப்போதிருந்த இணக்கப்பாடுஎட்டப்பட்டிருந்தது. அதற்குப் பல காரணங்களும் இருக்கின்றன. அந்த அடிப்படையிலேயே நாங்கள் தற்போதும் செயற்பட்டு வருகின்றோம்.

கிழக்கில் த.தே.கூ – மு.கா. இணைந்து கூட்டாட்சியை நடத்தி வருகின்றன. அதில்எங்களுக்குப் பெரும்பான்மை இருந்தும் இணக்கஅடிப்படையில்நாங்கள் அவர்களுடன்இணைந்துசெயற்படுகிறோம். எங்களுக்கு இணைப்பு முக்கியம். அதற்காகவே அவர்களுடன் இணைந்து பயணிக்கிறோம்.

### மனோவின் கருத்து

புதிய அரசமைப்பின் வழிநடத்தல் குழுவில் மனோ கணேசனும் ஓர் உறுப்பினர். அவர் இடையிடையே மாறுபட்ட கருத்துகளைக் கூறிவருகின்றார். சிங்களத்தலைவர்களின் மனநிலை குறித்தே தாம் பேசுகின்றார் என அவர் கூறுகின்றார்.

அவரிடம் இடைக்கால வரையும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் 'வடக்கு – கிழக்கு இணைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்மைப்பு கோருகின்றது' என உள்ளது. அதைத் தன்னுடைய முகத்திற்கு முன்னால் வைத்துக்கொண்டு 'கூட்டமைப்பு வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டுவிட்டது'எனக்கூறுகின்றார். அவர் எதற்காகஅப்படிச்சொல்கின்றார் என்பதுஎனக்குத்தெரியவில்லை.

இங்கு, வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது கூட்டமைப்பின் கருத்து மட்டும்தான். மனோ கணேசனோ, டக்ளஸ் தேவானந்தாவோ அந்த இணைப்புத்தொடர்பாகக் கருத்துச் சொல்லவே இல்லை. அல்லது அதற்கு ஆதரவோ தெரிவிக்கவில்லை. கூட்டமைப்பு மட்டும் வடக்கு – கிழக்கு இணைப்பைக் கோரியதாகவே அந்தவரைவில்எழுதப்பட்டுஉள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகவே புதிய அரசமைப்புச் சட்டம் வரும். தீர்வு இல்லாத சட்டம் என்றால், அதற்குக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்காது.

### தவற விடப்பட்ட சந்தர்ப்பங்கள்

கடந்தகாலங்களில்தமிழ்மக்களுக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைத்தவறவிட்டிருக்கின்றோம். தற்போது வேண்டுமென்று கேட்பதை அப்போது வேண்டாம் எனப் புறக்கணித்து, புறக்கணித்து வந்திருக்கிறோம். எனவேதான், இப்போதாவது வருகின்ற சமஷ்டி அடிப்படையிலானதீர்வைநாம்பொறுப்போடு ஏற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து வெற்றுக் கோசங்கள் எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்து 80 ஆண்டுகளுக்கு மேலாக விட்ட தவறை திரும்பவும் நாங்கள் விடுவதற்கு எமது மக்கள் இடமளிக்கக்கூடாது.

புதியஅரசமைப்புஉருவாக்கத்திற்காக மட்டுமே நாம் அரசுக்கு ஆதரவுகொடுக்கின்றோம். ஆட்சி மாற்றத்திற்கு நாம் ஆதரவளித்தோம். அந்த மாற்றத்தைக் கொண்டு வந்த பின்னரும் இப்போது ஒன்றும் நடக்கவில்லை எனச் சிலர் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் பல விடயங்கள் நடைபெற்றுள்ளன. தற்போதும்நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பயனற்ற வெறும் கோஷங்கள்

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற தீர்வு முயற்சிகள் தொடர்பில் சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

அதற்குப் பதில் தரும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார் கூட்டமைப்பின் பேச்சாளரும், தீர்வை ஒட்டிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருபவருமான எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளைத் தமிழினம் கண்டே வந்திருக்கின்றது.

சரியோ, பிழையோ இலங்கைத் தீவின் பூர்வீக மக்களான தமிழர்கள் - தேசிய இனமான தமிழினம் - எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாகவும், மற்றொரு தேசிய இன மக்கள் குழுமமான சிங்களவர்கள் தமிழர்களைப் போல ஆறு, ஏழு மடங்கு எண்ணிக்கையில் அதிகம் உள்ளவர்களாகவும் இங்கு வசிக்கின்றனர்.

இதுவே யதார்த்தம். உண்மையான புறநிலை இதுதான்.

ஜனநாயகத்தின் அச்சாணியில் நாடுகள் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உலகமும், சர்வதேச சமூகமும், எண்ணிக்கையில் அதிகமான தரப்பின் கருத்தே - முடிவே - தீர்ப்பு என்ற ஜனநாயகக் கேலிக் கூத்துப் போக்கைத்தான் முன்னிறுத்தித் தூக்கிப் பிடித்து நிற்கின்றன.

இவ்வாறு, பெரும்பான்மையினரின் தீர்மானமே முடிவாகும் என்ற 'ஜனநாயக மாண்புகளின்' கீழ், தங்களுக்கு இந்தத் தீவில் நீதி கிட்டாது - எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் மேலாதிக்கச் சிந்தனை அழுத்தமே எப்போதும் தமிழினத்தின் மீது திணிக்கப்படும் - என்ற வரலாற்றுப் பாடமும், உண்மையும் தமிழினத்துக்கு விளங்கியமையாலேயே, வேறு வழியின்றி, நீதி தேடி, ஆயுத வழியை நாடினார்கள் தமிழர்கள்.

ஆயுத வழியில் அவர்கள் போராடிய போது - துப்பாக்கிக் குண்டுகளும், பீரங்கி வேட்டுக்களும் வெடித்துச் சிதறிக் கனன்ற போது - அந்தச் சத்தங்களுக்கு மத்தியில் ஈழத் தமிழரின் நியாயக் குரல் சர்வதேச சமூகத்திற்கும் கேட்டது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற ஈடுபாடும், அவாவும் மிக்கனவாக இந்த விவகாரத்துக்குள் அவை மூக்கை நுழைத்தன. பல்வேறு முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

ஆனால், கனன்ற துப்பாக்கிகள் இப்போது குளிர்ந்து விட்டன. பீரங்கிக் குண்டுகளின் அதிர்வு அடங்கி விட்டது. தமிழர்களின் ஆயுதம் தாங்கிய உரிமைப் போர் சிங்களத்தின் மேலாதிக்கத்தினால் அடியோடு நசுக்கப்பட்டு முறியடிக்கப்பட்டு விட்டது. யுத்தத்தின் சத்தம் ஓய்ந்து விட்டதால், உருவான செயற்கை அமைதியில் - யுத்தமில்லாத, சமாதானப் புறச் சூழலில் - இலங்கைத் தமிழர்களின் நீதிக்கான அவலக் குரல் சர்வதேசத்தின் காதில் கேட்கவில்லை.

யுத்த சத்தத்துக்கு மத்தியில் உலகின் காதில் விழுந்த தமிழர்களின் நியாயக் குரல், இப்போது கேட்பதாகவில்லை.

அதனால், மீண்டும் பெரும்பான்மையினரின் தீர்மானமே தீர்ப்பு என்ற ஜனநாயக மாண்புகளின் காலில் விழுந்து தீர்வைத் தேடும் அவலம் தமிழர்களுக்கு.

இந்தப் புறச் சூழலில்தான், இன்னும் ஆயுத வலிமையோடு பேரம் பேசப் புறப்பட்ட நமது விடுதலைப் போராளிகள் போல உறுமுகின்றனர் நமது சில தலைவர்கள்.

உரிய காலத்தில் உரிய வாய்ப்புகளைத் தவறவிட்டுவிட்டு இப்போது '(மரத்தில்) அணில் ஏற விட்ட நாய் போல' கீழே நின்று சும்மா குரைத்துக் கொண்டிருக்கின்றோம். அதைத்தானா இனியும் செய்யப் போகின்றோம் என்பதுதான் நம் முன் உள்ள பெரும் கேள்வி.

நமக்கு உட்பலமாக இருந்த ஆயுதப் போராட்ட வலிமையை இழந்து நீண்ட காலமாகிவிட்டது. அதற்கு முன்னரே புறப்பலமாக நின்ற இந்தியாவையும் இழந்து விட்டோம். இப்போது இருப்பது கொஞ்ச நஞ்ச சர்வதேச ஆதரவு மட்டுமே.

அதையும், ஜனநாயக ரீதியில் ஒன்றுபட்டு நிற்கும் எமது வலிமையையும் மட்டுமே முன்னிறுத்தி ஏதேனும் ஒரு தீர்வை நோக்கி நகர வேண்டிய இக்கட்டு தமிழருக்கு.

தமிழரிடம் இப்போது இருக்கின்ற பலம் பேச்சு மேசையில் பேரம் பேசும் வலிமையைச் சற்றேனும் தராது - தரவில்லை - என்பது வெள்ளிடைமலை.

இவற்றுக்கு இடையில்தான் தந்திரோபாயமாக - சாணக்கியமாக - காய் நகர்த்தி, எதையாவது பெற்றுக் கொள்ள வழி செய்வது சம்பந்தரின் இலக்கு.

தென்னிலங்கைச் சிங்களத்தின் பிளவைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்த விடயத்தை நகர்த்தி ஒப்பேற்ற வேண்டும்.

தன்வலு, மாற்றான் வலு அறிந்து காரியத்தை நகர்த்துவது அவசியம். வெறும் அரசியல் கெக்கரிப்புகள் மேலும் மேலும் அழிவையே தரும்.

விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் உச்சப் பலத்தில் இருந்த போது தான் 'உள்ளக சுயநிர்ணய உரிமை' என்ற கோட்பாட்டை முன்வைத்து யதார்த்தத் தீர்வு ஒன்றுக்குக் காய் நகர்த்தினார் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம். அதுவே 'ஒஸ்லோ அறிவிப்பு' ஆக வெளிவந்தது.

ஆனால், நடந்தது என்ன? அந்த இணக்கத்தின் மூலம் தலைவர் பிரபாகரனின் 'தமிழீழமே முடிந்த முடிவு' என்ற கொள்கைக் கோட்பாட்டுக்கு வேட்டு வைத்துவிட்டார் என்று கோஷமிட்டனர் நம்மில் சிலர். விளைவு...? சரித்திரம் கூறும் விடயம். அதற்குள் அதிகம் இறங்கி விவாதிக்க நாம் விரும்பவில்லை. அத்தகைய போக்கு மீண்டும் வேண்டாம்.

கனிந்து வரும் சூழலை அரசியல் கெக்கரிப்புக்கள் மூலம் அழித்து விட முயல்வோர் மாற்றுத் திட்டம், அதை அடையும் வழிமுறை பற்றியெல்லாம் விஸ்தாரமாக விளக்குவது அவசியம்.

# பல்கலைக்கழக மாணவர்களிடையே நள்ளிரவில் மோதல்; மூவர் காயம்!

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவ குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக மூவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மற்றும் சில மாணவர்களுக்கு இடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் காயமடைந்த 3 மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பிரித் நிகழ்வில் இடையிலேயே இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

# மஹிந்தவின் குடும்பத்துக்குள் பதுக்கப்பட்ட 82 வாகனங்கள்!

## விசாரணையில் அம்பலம்



இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்காக கொண்டு வரப்பட்ட மோட்டார் வாகனங்களால் அரசுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகி உள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மாநாட்டுக்காக கொண்டு வரப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் போது அரசுக்கு 40 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்காக 82 மோட்டார் வாகனங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு அரச தலைவர்களின் பயன்பாட்டிற்கு எனத் தெரிவித்துக் கடந்த அரசால் கொண்டு வரப்பட்ட மோட்டார் வாகனங்கள், மஹிந்தவின் மகன் நாமல் ராஜபக்ஷ, இளைஞருக்கான ஹெட்டக் அமைப்பு மற்றும் நீலப்படை அணியின் முக்கியஸ்தர்களின் பயன்பாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

540 லட்சம் ரூபா வரை பெறுமதியிலான இந்த மோட்டார் வாகனங்கள் இவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மாநாடு முடிந்த பின்னர் இவை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படும் என அப்போது கூறப்பட்டது.

எனினும், இவற்றில் எத்தனை வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டன என்று இதுவரை தகவல் வெளியாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டு ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்; பொலிஸ் தரப்பிலிருந்து மீளவும் விசாரணை!

கொழும்பு, ஜூலை 02

மதுபானசாலை தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த நல்லதம்பி நித்தியானந்தன் மற்றும் புண்ணியமூர்த்தி சசிதரன் ஆகிய இரு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் மீண்டும் பொலிஸ் விசாரணை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கல்குடா பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசாரணையில் திருப்தி இல்லாத காரணத்தினாலும் பொலிஸ் மா அதிபருக்கு விசாரணை தொடர்பான நம்பகத் தன்மையில்லை என்பதாலும் கடந்த வியாழக்கிழமை வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு இரு ஊடகவியலாளர்களும் அழைக்கப்பட்டு மீள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கல்குடா எத்தனோல் உற்பத்தித் தொழிற்சாலை தொடர்பில் செய்தி சேகரிப்புக்குச் சென்ற பிராந்தியச் செய்தியாளர் நல்லதம்பி நித்தியானந்தன், சுதந்திர ஊடகவியலாளரான புண்ணியமூர்த்தி சசிகரன் ஆகியோர் மீது கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசார ணைகள் இடம்பெற்று வருகின்றன. ஜூலை மாதம் 10 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (உ)

# சக்தியான அடித்தளம் அவசியம் சரத் பொன்சேகா கூறுகிறார்!

நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சக்தி வாய்ந்த அடித்தளம் அவசியம் என அமைச்சர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பேலிகொடை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதனிடையே சரியான முறையில் நாட்டின் கல்வி நிறுவனங்களைக் கட்டியெழுப்பினால், இலங்கைக்கு அந்நியச் செலாவணி வரும் பிரதான வழியாக கல்வியை மாற்றிக் கொள்ள முடியும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹங்குராங்கொத்த பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

**உயரத்திற்கு ஏற்ப உடல் நிறையைப் பேணிடுவோம்**



ஆண்கள் இடுப்பு சுற்றளவை 90 cm (36") க்கு குறைவாகவும், பெண்களின் இடுப்புச் சுற்றளவை 80 cm (32") க்கு குறைவாகவும் பேணுதல் நன்று. இடுப்புச் சுற்றளவானது, வயிற்றை லேசாக வைத்துள்ள நிலையில் தொப்புள் இருக்கும் இடத்தில் இருந்து வயிற்றைச் சுற்றி அளத்தலாகும்.

உரிய உயரமும் நிறையும் உங்கள் தோற்றத்தை மெருகேற்றும்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

03.07.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : சுவாதி பி.இ. 5.40 வரை
திதி : தசமி பி.இ. 01.15 வரை

சுபநேரம் : 11.57 – 1.27 வரை
இராகுகாலம் : 7.27 –8.57 வரை

# அரசமைப்பை உருவாக்கும் சகல நடவடிக்கைகளும் இறுதிக் கட்டத்தில்!



## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 02

புதிய அரசமைப்பை உருவாக்கும் சகல நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன. பிரதான கட்சிகள் மத்தியில் உள்ளக கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்ற நிலையில் விரைவில் அரசமைப்பின்இறுதித்திட்டவரைவு கொண்டுவரப்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை உருவாக்குவது கடினமான ஒரு காரியம் அல்ல. ஆனால், அதை உருவாக்குவது அரசியல் தலைமைகளின் கைகளில் மாத்திரமே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், பண்டாரநாயக்க வெளிநாட்டுகற்கைகளுக்கான நிலையம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய சமாதானத்தைக் கட்டியெழுப்பும் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. நாட்டின் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் என்ற பாதையில் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இப்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த மாற்றம் மிகவும் அவசியமான மாற்றமாகும். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்தும் எந்தவொரு மாற்றமும் இடம்பெறாது நல்லிணக்கத்துக்கான பாதை மூடப்பட்டிருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் மூலம் இன முரண்பாடுகளில் இருந்து விடுபடும் நோக்கம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கான அரசியல் தலைமைத்துவம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஆட்சி மாற்றத்தின் மூலமாக நாட்டின் பாதையை மாற்றவே பிரதான இரண்டு கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளன.

பொது உடன்படிக்கை ஒன்றின் மூலமாக இந்தப் பயணம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயணத்தில் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளும், சிவில் அமைப்புகளும் இணைந்து அரசின் பயணத்தில் அங்கம் வகித்து வருகின்றன. இந்தப் பயணத்தில் பல்வேறு அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதில் எதனை முதலில் மேற்கொள்வது என்ற கேள்வி உள்ளது.

இப்போதிருக்கும் நிலைமையில் அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியமாகும். அரசமைப்பின் மூலமாக மக்களின் உரிமைகள், சுதந்திரம், அரசியல் நகர்வுகள் அதிகாரங்கள் என்ற அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

இந்த நாடு பௌத்த மத பிணைப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நாடாகும். எமது கலாசாரம், அரசியல் அனைத்தும் பௌத்த சிங்கள தன்மையில் இணைந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஆகவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் புதிய அரசமைப்பு பௌத்த சிங்கள தன்மைக்கு அப்பால் சென்று உருவாக்கப்படப் போவதில்லை.

ஏனைய மதங்களும் தமது உரிமைகளைப் பாதுகாத்து சுதந்திரமாகச் செயற்பட அனுமதியும் வழங்கப்பட வேண்டும். இன்றும் சிறுபான்மை மக்கள் மீதான அழுத்தங்கள் மற்றும் தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஒரு காலத்தில் யுத்தம் முடிவுக்கு வரும் வரையில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை காணப்பட்டது.

ஆனால், அது இன்று முடிவுக்கு வந்துள்ளபோதிலும் முஸ்லிம் மக்கள் மீதான அடக்குமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து முஸ்லிம் மக்கள் இலக்குவைக்கப்பட்டு வருகின்றனர். பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றமை மற்றும் முஸ்லிம் இனத்தவர் மீதான இலக்கு வைக்கப்பட்ட அடாவடி குறை நடவடிக்கைகள் என்பன சுட்டிக்காட்டத்தக்கன. அரசு இந்த நடவடிக்கைகளைக் தடுக்க வேண்டும்.

ஆகவே, புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கத்தில் நாம் அனைவரும் செயற்பட்டு வருகின்றோம். நாடாளுமன்றத்தில் அரசமைப்பு சபையின் மூலமாகவும் அதேபோல் மக்களின் கருத்துக்களை வினவியும் சிவில் சமூகங்களின் ஒத்துழைப்புகளை பெற்றும் மிகவும் தகுதியானதும் தரமானதுமான அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகளில் சகலரதும் பங்களிப்பை உள்வாங்கிச் செயற்படுவதே பிரதான விடயமாகும். இப்போது புதிய அரசமைப்பு உருவாக்கும் சகல நடவடிக்கைகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

பிரதான கட்சிகள் மத்தியில் உள்ளக கலந்து ரையாடல் இடம்பெற்று வருகின்றது. விரைவில் அரசமைப்பின் இறுதி திட்ட வரைபைக் கொண்டுவர முடியும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சுகளுக்கு தீவிர பாதுகாப்பு!

கொழும்பு, ஜூலை 02

கொழும்பிலுள்ள அமைச்சுக்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

சமகால அரசுக்கு எதிர்ப்பு வெளியிடும் ஆர்ப்பாட்டக்காரர்களால் பாதிப்பு ஏற்படுத்தக்கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ள அமைச்சுகளுக்கு இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் சுகாதார அமைச்சுக்குள் புகுந்து சொத்துக்களை கடுமையாக சேதப்படுத்தியிருந்தனர்.

இந்த விடயம் மற்றும் புலனாய்வுப் பிரிவு வழங்கியுள்ள அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சுகாதார அமைச்சு, உயர்கல்வி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு உட்பட சில அமைச்சுக்குக் கடும் பாதுகாப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுகளின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# கீதா குமாரசிங்க மட்டுமே இரட்டைக் குடியுரிமை உடையவர்!



கொழும்பு, ஜூலை 02

இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க மட்டுமே ஆவார் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ளனர் என இது வரையில் தெரியவரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க சுவிற்ஸர்லாந்து குடியுரிமையையும் பெற்றுக் கொண்டுள்ளார் என குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

19ஆம்திருத்தச்சட்டத்துக்கு அமைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நபர்கள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

# தாஜுதீனின் தடயங்களை மறைத்த டாக்டரின் பதவி நிலை பறிபோகிறது!

கொழும்பு, ஜூலை 02

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் எலும்புகள் காணாமற் போனமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவந்த விசாரணைகளில் கொழும்பு முன்னாள் உயர் நீதிமன்ற வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர குற்றவாளியாவார் என இலங்கை வைத்திய சபை தீர்மானம் எடுத்துள்ளது.

இதன்படி, அவரின் மருத்துவ சான்றிதழ் 6 மாத காலத்துக்கு தடை செய்யப்படுவதாகவும் இலங்கை மருத்துவ சபை தீர்மானித்துள்ளார்.

வைத்திய சபை மேற்கொண்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

# எல்லை தாண்டினால் தமிழக படகு உரிமையாளர்களுக்கு 20 லட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, ஜூலை 02

எல்லை தாண்டி மீன் பிடித்தால், தமிழக படகு உரிமையாளர்களுக்கு 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம் என்று இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை தமிழக ஊடகம் வெளியிட்டுள்ளது. அந்த ஊடகச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை நாடாளுமன்றத்தில் மீன்வளத்துறை தொடர்பான விவாதம் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற உள்ளது. இதில் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள், குறைகள் ஆகியவை விவாதிக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கையின் தென்பகுதியான திருகோணமலை, மட்டக்களப்பு உட்படசில பகுதிகளில் உள்ள மீனவர்களின் குறைகள், பிரச்சினைகள் குறித்து அவர்களிடம் ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனை முடித்த பின்னர், மீன்வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மட்டக்களப்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கை கடற்பகுதியில் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்களின் 162 படகுகள் இலங்கை வசம் இருக்கின்றன. முதற்கட்டமாக தமிழக மீனவர்களின் படகுகளில் 40 முதல் 80 படகுகள் விடுவிக்கப்படலாம் .

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க வந்து சிறை பிடிக்கப்பட்டால், அவர்கள் விடுதலை செய்யப்பட்டு, அவர்கள் வந்த படகு உரிமையாளர்களுக்கு 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படலாம், அதுதொடர்பான சட்டத்தை எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இயற்றுவதற்கு வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.




# வேதனைகளின் ஆரம்பம்

*சமீபத்தில் இணையத்தளம் ஒன்றில் வெளியான விடயமொன்றை அவதானிக்க முடிந்தது.*

*அதாவது -*

*எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பூமி அழியப்போவதாக ஒரு செய்தி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.*

*முன்பும் ஒரு தடவை இவ்விடயம் குறித்து, ஆண்டு, மாதம், திகதி அனைத்தும் குறிக்கப்பட்டு, சந்திக்குச் சந்தி மூலைக்குமூலை விளம்பரப் பதாகைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.*

*உலகம் அழிவதற்கான குறிப்பிட்ட அந்த நாளும் வந்தது.*

*வழக்கம்போல அன்றைய பொழுதும் புலர்ந்து கொண்டது. எழுவான் திசையில் கதிரவனும் எழுந்தான். மக்களும் தமக்கான வாழ்வியக்கத்துக்குள் தம்மைப் புகுத்திக் கொண்டார்கள். அன்று உலகம் அழியவில்லை. பொய்மையாய் புனையப்பட்ட, உண்மைக்கு மாறான கருத்துக்கள் அன்று அந்திப் பொழுதினில் அப்படியே பொசுங்கிப் போயின.*

*கடந்த 21.12.2012 இல் உலகம் அழியும் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் ஏற்பட்டிருந்தது. காரணம் - 'மாயன் கலண்டர்' எனும் ஒருநாள் காட்டி குறிப்பிட்ட ஒரு திகதியுடன் முடிவடைவதால், நிச்சயமாக உலகம் அழியப் போகிறது என்றே பலரும் நம்பினார்கள்.*

*உலகம் அழியும் என்பது உண்மையா? அப்படியாயின் அது எப்போது நிகழும்?*

*இக்கேள்விக்கு மதமும் அந்த மதம் சார்ந்த அறிஞர்களிடமிருந்தும் அவர்களின் அறிவு சார்ந்த தேடலின் அளவுகோலுக்கு அமைவாக விடைகள் வெளிவரலாம். ஆனால், கிறிஸ்தவத்தின் 'பரிசுத்த வேதாகமம்' உலக அழிவு குறித்து மிகத் தெளிவாகக் கூறுகின்றது.*

*உலகம் அழியப் போவதற்கான முதற் காரணி என்ன?*

*பூமியில் பாவமான காரியங்கள் பல்கிப் பெருகும் போது, அதனால் பாதிக்கப்படுபவர்களின் அவலக் கூக்குரல்களின் நியாயத் தீர்ப்பே உலக அழிவுக்கான தொடக்கமாகின்றது.*

*ஆயினும், உலகம் முற்றாக அழிந்து விடாது. ஆங்காங்கே சிறுசிறு நிகழ்வுகள் (நெருப்பு, நீர், வளி, இயற்கையின் மாறுதல், மூலம் பூமியில் உள்ள ஒரு பகுதி அழிக்கப்படும்.*

*இதற்கு பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாட்டில் உள்ள நோவா என்பவருடைய காலத்தை இங்கே உதாரணமாகக் கொள்ள முடியும்.*

*விஞ்ஞானிகள், ஆன்மீகவாதிகள் மற்றும் சாஸ்திர நிபுணர்கள் பலரும் தங்களது ஆராய்ச்சியின் அறிவுக்குத் தக்கபடி உலகம் அழிவதற்கான நாளையும், அதற்கான நிகழ்வுகளையும் வரையறுத்துக் கூற முற்பட்டாலும் -*

*இவர்கள் கூறியதை; இனிக் கூறப்போவதைவிட, இயேசு வானவர் உலகம் அழிவதற்கு முன் நிகழ வேண்டிய காரியங்கள் எவை? அது எப்படி நிகழும் என்பதை தனது சீடர்களுக்கு ஏற்கனவே கூறியிருக்கின்றார்.*

*''யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்.*

*ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்ஜியத்துக்கு விரோதமாய் ராஜ்ஜியமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் ,பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் நிகழும். இவைகள் எல்லாம் சம்பவிக்க வேண்டியவையே. ஆனால் முடிவு உடனே வராது. இது வேதனைகளின் ஆரம்பம். (மத்தேயு - 24:6,7)''*

*தற்போது உலகத்தில் நிகழும் நடப்பியலை உற்று அவதானிக்கும் போது, இயேசு கூறிய ஒவ்வொரு வார்த்தைகளின் உண்மைத் தன்மையைப் பட்டெனப் புரிந்துகொள்ள முடியும்.*

*வடகொரியா - அமெரிக்கா - சிரியா - பாகிஸ்தான் - சீனா... போன்ற நாடுகளின் செயற்பாடுகள் இயேசு கூறிய இராஜ்ஜியத்துக்கு விரோதமான இராஜ்ஜியங்களே ஆகும்.*

*கொள்ளை நோய்கள்: எலிக்காய்ச்சல், பறவைக் காய்ச்சல், எபோலா போன்றவை.*

*பூமியதிர்ச்சிகள்: இவை பிலிப்பைன்ஸ் இந்தோனேஷியா, ஜப்பான், சுமாத்திரா போன்ற நாடுகளில் அடிக்கடி நிகழ்பவை.*

*யுத்தங்களின் செய்திகள்: சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு எதிரான அமெரிக்க யுத்தம். தென் கொரியாவுக்கு எதிரான வடகொரியாவின் யுத்த முனைப்பு. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான பகைமையுணர்வு; பனிப்போர்!*

*எனவே, இயேசு குறிப்பிட்டுள்ளதைப் போன்று இவைகள் உலகம் அழிவதற்கான ஆரம்ப சமிக்ஞைகளே ஒழிய, இவைகளால் உலகம் முற்றாக அழிந்து விடப் போவதில்லை. சம காலத்தில் நிகழ்ந்தகொண்டிக்கும் இந்தச் செயற்பாடுகள் இயேசு கூறுவது போன்று; வேதனைகளின் ஆரம்பமே; ஒழிய முடிவல்ல.*

*ஆகவே, உலகமானது இப்போது வேதனைகளின் ஆரம்பத்திலே கிடந்து உழல்வதால், உலகத்துக்கு இப்போது அழிவு இல்லை, இது உபத்திரவங்களின் தொடர்ச்சி... என்பதை நம்பலாம்.*

-குருவிக்குஞ்சு.






# மடுகன்னி மேரி அன்னையின் ஆடி மாதத் திருவிழா இன்று!

மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா திருப் பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு தமிழ்,சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப் படவுள்ளது.

மன்னார் மாவட்டம் மடுவில் கன்னி மேரி யின் தேவாலயம் அமைந்துள்ளது. 400 ஆண்டுகள் பழைமையான இந்தத் தேவாலயம் இலங்கைத் தமிழ் மற்றும் சிங்கள கத்தோலிக்கரின் புனித வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது.

பிரசித்தமான மடு மாதா தேவாலயம். பல்லின மக்களாலும் வணங்கப்படுகின்ற புனிதத் தலம் ஆகும். இந்துக்களும் பௌத்தர்களும் கூட மிகவும் நம்பிக்கையுடன் இந்தத் தேவாலயத்துக்குச் சென்று வணங்குகின்றனர்.

மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு தமிழ்,சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் வண.யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்பக் கொடுக்கவுள்ளனர்.

மடுத்திருத்தலத்தின் ஆடி மாதத்திருவிழாவை முன்னிட்டு கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மடு ஆலயத்தில் மடு ஆலய பரிபாலகர் அருட்தந்தை வண.எஸ்.எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் தலைமையில் பாப்பரசரின் கொடியும் மடு அன்னையின் கொடியும் ஏற்றிவைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து கடந்த ஒன்பது தினங்கள் மாலையில் திருச்செபமாலையுடன் நவநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மடுத் திருவிழாவுக்கு நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரட்டைக்குடியுரிமையுடைய எம்.பிக்களின் விவரம் இம்மாத இறுதியில் வெளியாகும்

## 'பவ்ரல்' நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 02

நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இது தொடர்பான தகவல்களை வழங்குமாறு குடிவரவு, குடி யகல்வு திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 3 வாரங்களில் இந்தத் தகவல்களை வழங்க முடியும் என்று, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் எமக்குத் தெரியப்படுத்தி உள் ளது. 19 ஆம் திருத்தச் சட்டத் தின் கீழ் இரட்டைக் குடியுரிமை யைக் கொண்டவர்கள் நாடாளு மன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிக்கமுடியாது.




இந்த நிலையில், இரட்டைக் குடியுரிமை உடைய கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப் பினர் பதவி தொடர்பில் அண்மையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இதனை அடுத்து, ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பிலும் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமல் தொடர்ந்தும் காலதாமதமானதால் அதற்கானபொறுப்பை அரசு ஏற்க வேண் டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றமே முடிவெடுக்க வேண்டும்.

இந்தத் தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்படுமானால் அது தொடர்பான நாள்காட்டியைத் தயாரிக்க நேரிடும்.

இல்லையெனின், தேர்தல் தொடர்பான விடயங்களுக்கான நீதி கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.- என்றார். (எ)

# ராணுவ தளபதி வாய்ப்பை இழக்கும் நிலையில் மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க!



கொழும்பு, ஜுலை 02

கூட்டுப்படைகளின் தள பதியாக பதவி உயர்த்தப் பட்டுள்ளபோதிலும், ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இன்னமும் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் ரொஷான் சென விரத்ன தெரிவித்துள்ளார்.

ராவய வாரஇதழுக்கு வழங் கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.


இலங்கை இராணுவத் தள பதி பதவியில் இருந்து, ஜென ரல் கிரிசாந்த டி சில்வா விலகிக் கொள்ளாததால், அவர் எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரை அந்தப் பதவியில் நீடிப்பார் என்றும், ராவய தெரி வித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வரை, ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இராணுவத் தளபதி பதவியில் நீடிப்பாரேயானால், தற்போது, இராணுவத்தலைமை அதிகாரியாக இருக்கும், மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, அடுத்த இராணுவத் தளபதி யாகநியமிக்கப்படும் வாய்ப்பை இழக்கக் கூடும் என்றும் ராவய சுட்டிக்காட்டியுள்ளது.

மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, 55 வயதை எட்டுவதால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி யுடன் ஓய்வுபெற வேண் டியிருக்கும் என்பதே அதற் கான காரணம் என்றும் ராவய செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, கூட்டுப் படைத்தளபதி நியமனத்துடன் புதிய இராணுவத் தளபதியின் நியமனமும் இடம்பெறும் என்று கடந்தவாரம் எதிர்பார்க் கப்பட்ட போதும், ஜனாதிபதியி டமிருந்து அதற்கான எந்த அறிவிப்பும் வெளியாக வில்லை. (க)

# நாளை திருகோணமலையில் மஹிந்த அணியின் பேரணி!



கொழும்பு, ஜுலை 02

சீனக்குடாவில் உள்ள எண் ணெய்க் குதங்களை இந்தியன் ஓயில் நிறுவனத்துக்கு வழங் கும் இலங்கை அரசின் திட் டத்துக்கு எதிராக, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் நாளை திருகோணமலையில் ஆர்ப் பாட்டப் பேரணியை நடத்த வுள்ளனர்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய செய்தி யாளர் சந்திப்பில் இது தொடர்பாக தகவல் வெளியிட் ட கூட்டு எதிரணி நாடா ளுமன்ற உறுப் பினர் டலஸ் அழகப்பெரும,

நாட்டின் சொத்துக்களை விற்கும் அரசின் முடிவை மீளாய்வு செய்வதற்கு அர சுக்கு எதிரான சக்திகள் அனைத் தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனக் குடா எண்ணெய்க் குதங்களுடன், திருகோண மலைத் துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நிலங் களையும், இந்தியன் ஓயில் நிறுவனத்துக்கு விற்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத் தின் செயற்பாடுகளால் பாதிக் கப்பட்ட அனைவரும் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த ஒன்றிணைய வேண் டும். என்றும் அவர் தெரிவித் துள்ளார். (க)

# அம்பாந்தோட்டை சீனாவுக்கு; அகன்றது முட்டுக்கட்டை!



கொழும்பு, ஜுலை 02

அம்பாந்தோட்டைத் துறை முகத்தையும் அதனுடன் இணைந்த 15 ஆயிரம் ஏக்கர் காணியில் கைத்தொழில் பூங்காவையும் அமைப்பதற்கு, இலங்கை அரசு இரண்டு சீன நிறுவனங்களுடன் உடன் பாடு செய்து கொள்வதற்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சீன நிறுவனங்களுடன், கட்டமைப்பு உடன்பாட்டுக்கு செல்வதற்குத் தடை விதிக் குமாறு கோரி, கூட்டு எதிரணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

சட்டமா அதிபர் திணைக் களத்தின் வாதத்தை அடுத்து, இந்த மனு தள்ளுபடி செய்யப் பட்டது.

இதையடுத்து, அம்பாந் தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கைய ளிப்பது தொடர்பாக இலங்கை அரசுக்கு இருந்து வந்த சட்ட ரீதியான முட்டுக்கட்டை அகற்றப்பட்டுள்ளது. (க)

# இலங்கைக்கு உதவுவதில் இந்தியா உறுதி - தூதுவர்!





கொழும்பு, ஜுலை 02

இலங்கை மக்களின் நலன் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக தொடர்ந்தும் செயற்படுவதில் இந்தியா உறுதிபூண்டுள்ளது என்று இலங்கைக்கான இந்திய தூது வர் தரன்ஜித் சிங் சந்து தெரி வித்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நக ரில் அமைந்துள்ள, யாழ். பல் கலைக்கழக பொறியியல் மற் றும் விவசாய பீடங்களுக்கான புதிய கட்டடத் தொகுதி யைத் திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவின் 60 கோடி ரூபா உதவியின் கீழ் கட்டப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி களை இலங்கையின் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, மற்றும் வட மாகாண ஆளுநர் ரெஜி னோல்ட் குரே ஆகியோருடன் இணைந்து, இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இந்திய தூதுவர், பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத் துறையும் பொறியியல் துறை யும் மிக முக்கியமானவை என்றும் குறிப்பிட்டார். (க)

# பொத்துவில், புத்தளத்தில் ராடர்கள்; ஜப்பான் நிதியுதவி வழங்குகிறது!



கொழும்பு, ஜுலை 02

இலங்கையில் காலநிலை பற்றிய தகவல்களை தரக்கூடிய ராடார் வலையமைப்பை நிறுவு வதற்கு, ஜப்பான் நிதியுதவியை வழங்கவுள்ளது. இதற்கான உடன்பாடு நேற்று முன்தினம் கொழும்பில் கையெழுத் திடப்பட்டது.

நிதியமைச்சில் நேற்று முன் தினம் நடந்த நிகழ்வில், ஜப் பானிய தூதுவர் கெனிச்சி சுக நுமாவும், நிதியமைச்சின் செயலரும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இந்த உதவியின் கீழ் பொத்து விலிலும், புத்தளத்திலும் இரண்டு ராடார் நிலையங்கள் அமைக்கப்படும்.

இங்கு டொப்ளர் ராடர்கள் பொருத்தப்பட்டு துல்லியமான காலநிலைத் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த ராடர் நிலை யங்களுக்கும், வளிமண்டல வியல் திணைக்களத்துக்கும் தேவையான தொழில்நுட்ப உதவியும், ஜப்பானின் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வுள்ளது. (க)

# நேற்று முதல் பஸ் கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜுலை 02

தனியார் மற்றும் அரச போக்குவரத்து பஸ்களுக்கான கட்டண அதிகரிப்பு நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

6.28 வீத அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, ஆகக் குறைந்த பஸ் கட்டணமாக காணப்பட்ட 9 ரூபா இந்தப் புதிய அதி கரிப்புடன் 10.00 ரூபாவாக மாற்றமடைந்துள்ளது. ஏனைய கட்டணங்கள் 6.28 வீதத் தினால் அதிகரிப்பதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள் ளது. (க)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



2017 ஆம் ஆண்டு ஏ விளம்பி வருடம் ஆனித் திங்கள் 18ஆம் நாள் நவமித் திதி இரவு 8.19 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம் – சித்திரை இரவு 11.59 மணி வரை. பின்னர் சுவாதி. சித்தயோகம் முழுவதும். பிறந்த நட்சத்திர வழிபாடு:– புனர்பூசம்.

**ராகுகாலம்:-** மாலை 4.58 மணி முதல் 6.33 மணி வரை.

**சுபநேரம்:-** காலை 8.59 மணி முதல் 10.29 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி:-** ஆனி மாத வளர்பிறை நவமி.

**சந்திராட்டமநாள்:-** பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற் கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

## 02.07.2017 இல் இருந்து 08.07.2017 வரை

### மேஷம்

இனிமையான வாரம் ஆகும். பணம் சரளமாகப் புரளும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். எண்ணிய காரியங்கள் யாவும் நிறைவேறும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். செய்யும் தொழில் விருத்தி அடையும். நண்பர்கள், உறவினர்கள் பக்க பலமாக இருப்பார்கள். வேலை தேடுவோருக்குத் திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும். சுயதொழில் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர் களின் கோரிக்கைகள் ஈடேறும். பெண்கள் விரும்பியபடி மண வாழ்க்கை அமை யும். தொழிலாளர்- முதலாளி நல்லுறவு விருத்தியடையும். மாணவர்கள் கல்வி யில் மேன்மை அடைவார்கள்.

### ரிஷபம்

சுபீட்சமான வாரம் ஆகும். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். சிலர் வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்கு குடிபோவார்கள். நண்பர் கள், உறவினர்களின் சகாயம் கிடைக்கும். பெண்கள் விரும்பிய ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வார்கள். உறவினர் வீட்டுச் சுப நிகழ்விகளில் கலந்து கொள்ள நேரும். கலைஞர்களுக்கு அரச விருதுகள், பணம், பரிசுப் பொருள்கள் என்பன கிடைக்கும். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் போதியளவு கிடைக்கும்.

### மிதுனம்

யோசனையான வாரம் ஆகும். வருமானம் குறைவடையும். குடும்பச் செலவுகள் குறைவடையும். குடும்பச் செலவுகளைச் சமா ளிக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். இன சனங்களுக்குள் விரோதம் பகைமை என்பன காணப்படும். நண்பர்கள் கூட பகைவர்களாக மாறுவார்கள். மறைமுக எதிர்ப்புகளைப் பற்றிய அவதானம் தேவை. மாணவர்களுக்குக் கல்வித் துறையில் பாதிப்புகள் உண்டாகும். திருமணமாகாதவர்களுக்கு மங்கல கருமம் கை கூடுவதில் தாமதம், சிக்கல் என்பன ஏற்படும். தொழிலாளர்களுக்குள் மனஸ்தாபம், போட்டி மனப்பான்மை, ஊதியக் குறைவு என்பன உண்டாகும்.

### கடகம்

சமபலன்கள் உள்ள வாரமாகும். வரவில் பார்க்க மிதமிஞ்சிய செலவுகள் உண்டாகும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். உத் தியோகத்தர்கள் தொழிலில் கவனக் குறைவால் அதிகாரிகளின் வெறுப்பைத் தேடிக் கொள்ள நேரும். தொழிலதிபர்களுக்குத் தொழி லாளர்களின் ஒத்துழைப்புக் குறையும். திருமணத்தை எதிர்நோக் கியிருப்பவர்கள் தாமதபலன்களைக் காண்பார்கள். வங்கி நிலையில் இடையிடையே போதாக்குறைகள் இருந்து கொண்டிருக்கும். தொடங் கிய கருமங்களைச் செவ்வனே ஆற்றுவதில் தாமதங்கள் ஏற்படும்.

### சிம்மம்

உயர்வான வாரம் ஆகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய நற்கருமங்கள் நடைபெறும். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். வங்கி நிலை சீராக இருக்கும். தொழில் பார்க்கும் இடங்களில் நன்மதிப்புக் கிடைக்கும். சமூக அந்தஸ்து உயர்வடையும். அந்நிய தேசத் தொடர்புகளும், உதவிகளும் கிட்டும். சகோதர உறவும் பலப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்தி பெருகும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளும், முதலாளிமாரின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

### கன்னி

அதிஷ்டமான வாரம் ஆகும். பண பலம், மன பலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வசதியான இடமாற்றமும் சம்பள உயர்வுகளையும் பெற வாய்ப்புக் கிட்டும். சகோதர வழியால் லாபம் பெறுவார்கள். வியாபாரத்தில் போதிய அபிவிருத்தி காணப்படும். மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தையும், பரீட்சைகளில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். குடும்ப நலம் அபிவிருத்தியடையும். புத்திரர்கள் உதவிகளும் கிட்டும். தாய் வழிச் சொத்துகள் வந்து சேரும்.

### துலாம்

கவலையான வாரம் ஆகும். தனவரவு குறையும். குடும்பத்தில் பிணக்குகள் தோன்றும். வீண் விரயச் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வுக்குப் பதிலாக பதவியிறக்கம் அல்லது பதவி இழப்புகள் ஏற்படலாம். வேலைப் பொறுப்புகளும், செலவுகளும் அதிகரிக்கும். மன அமைதி குன்றும். தொழிலா ளர்களுக்கு முதலாளிமாரின் கெடுபிடிகள் அதிகமாகும். மாணவர் கல்வி ஊக்கம் குறைவடையும். பெண்களுக்கு விவாகப் பிரச்சி னைகள் கவலை தரும். குடும்பப் பெண்களுக்கு வேலை செய்யும் பெண்களுக்கும் நாவடக்கம் நன்மை தரும்.

### விருச்சிகம்

மகிழ்ச்சியான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெரியவர்கள் மூதாதையர்களின் சொத்து வந்து சேரும். காணி, தோட்டத்தால் அதிக லாபம் கிடைக்கும். இவர்களின் திட்டங்களை நிறைவேற்ற நண்பர்கள் உதவி செய்வார்கள். அரசாங்க உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறுவார்கள் கலைத்துறையில் உயர்வும், புகழும் வரும். வாகன வசதிகள் பெருகும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பியபடி உயர்வுகள் கிடைக்கும்.

### தனுசு

மத்திமமான வாரம் ஆகும். வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது. குடும்ப சுகம் சீராக இருக்கும். வர்த்தகர்களுக்கு லாபம் குறைந்து நிதி நெருக்கடிகள் சத்துரு தொல்லைகள் என்பன ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு அதிக பொறுப்புகளும், அலைச்சல்களும் அதிகரிக்கும். தொழி லாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். தொழிலாளர்களுக்குள் கருத்துமோதல்கள் உண்டாகும். மாணவர்களுக்கு அக்கறையின்மை, மறதி முதலியவற்றால் கல்வியூக்கம் குறையும். விவாகப் பேச்சுகளில் தடை, தாமதம் ஏற்படும்.

### மகரம்

இன்பமான வாரம் ஆகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் இனிமை பூத்துக் குலுங்கும். நினைப்பவை நிறைவேறும். உறவினர்களுடன் நல்லெண்ணம் வளருதல் ஆறுதல் தரும். வர்த்தகர்களுக்கு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் மன நிறைவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும், ஆதரவும் கிட்டும். மாணவர்களுக்கு பரீட்சைத் தேர்ச்சிகள் திருப்தி தரும். பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் அதிகமாக அமையும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் சுற்றுலா செல்வார்கள்.

### கும்பம்

துன்பமான வாரம் ஆகும். பணவரவு குறையும். மன அமைதியின்றி அலைச்சல், பிரயாசை கூடுதலாக இருக்கும். தொழில் முயற்சிகளில் பலவித கஷ்டங்களும் நஷ்டமும் உண்டாகும். சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரும். வாகனம் பாவிப்போர் எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றத்தால் சிறு தடைகள் ஏற்படும். குடும்பத்தில் நிம்மதி குறையும் மகிழ்ச்சியின்மை யும் காணப்படும். விவசாயிகள் பயிர்பலிதமின்மை, அதிக செலவு மிதமிஞ்சிய பிரயாசை முதலிய பலன்களைக் காண்பார்கள்.

### மீனம்

மத்திமமான வாரம் ஆகும். வருமானம் சுமாராக இருக்கும் தேக சுகம் பாதிப்புறும். தொழிலாளர்களுக்கு கடும் முயற்சியின் மேல் தொழில் விருத்தி உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் தாமதமாகும். மாணவர்களுக்கு அவசர புத்தியால் பரீட்சையில் தவறுகள் ஏற்படும். வியாபாரிகள் சுமாரான லாபம் பெறுவார்கள். பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் தடைப்படும். பயணத்தின் போது அவதானம் தேவை. கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

# ஆரோக்கிய உணவகமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்

வைத்தியர் பொ.ஜெசிதரன்
*சுகாதார வைத்திய அதிகாரி*
மாநகரசபை, யாழ்ப்பாணம்.



ஒரு பாடசாலை அறிவானதும் ஆரோக்கியமானதுமான மாணவ இலக்கை அடைய வேண்டுமானால் ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தை ஆரம்பித்தல் வேண்டும். இதன் மூலமே மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தையும் பாடசாலை இலக்கையும் அடைய முடியும். இவ்வாறான ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் பல.

போஷாக்கான சுத்தமான உணவு கிடைக்க வழிவகுக்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல், ஆரோக்கியமான போஷாக்கு நிலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், தொற்றா நோய்களின் தாக்கத்தைக் குறைத்தல், ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் தொடர்பான தகவல்களை வீட்டிற்கும் சமூகத்துக்கும் பரம்பலுறச் செய்தல், கல்வி இலக்கு- அடைவு மட்டத்தை உயர்த்துதல் போன்றவை ஆரோக்கியமான உணவகத்தால் கிடைக்கும் நன்மைகளில் சிலவாகும்.

ஆரோக்கியமான உணவு வழங்கல் மூலம் சரியான உணவுப் பழக்கத்தை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் அறிவுள்ள சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை ஏற்படுத்தி, பிரதேசத்தின் அபிவிருத்தியிலுள்ள முன்னேற்றத்திலும் காத்திரமான பங்களிப்பை ஒவ்வொரு பாடசாலைகளும் பெற்றுக் கொடுக்க முடியும்.

தவறான உணவுப் பழக்கங்கள் எதிர்கால சந்ததியின் உடல், உளவிருத்தியில் பல பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.

> **மாணவர்கள், எதிர்காலச் செல்வங்கள், அவர்கள் நோயற்ற நிலையை பாதுகாப்பதோடு, எப்போதும் அவர்களின் ஆரோக்கிய வளர்ச்சி பற்றிக் கருத்திலெடுத்து உணவகத்தை நடத்திச் செல்லும் வழி காட்டல் அவசியம்.**

ஓர் ஆரோக்கியமான பாடசாலை உணவகத்தால் வழங்கப்பட வேண்டிய சேவைகளாக எதிர்பார்க்கப்படுபவை வருமாறு:-

★சரியான போஷணைப் பழக்கத்தை ஏற்படுத்துதல்

★அறிவூட்டுதல்- ஆரோக்கியமற்ற உணவுகளை உள்ளெடுப்பதனால் ஏற்படும் பாதிப்புகளைக் காட்சிப் படுத்துதல்.

★ ஆரோக்கியமான உணவுகளை தாராளமாகப் பெற்றுத் தருதல்.

★உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.

★பாடசாலை விழாக்களிலும், வைபவங்களிலும் ஆரோக்கியமான உணவு வழங்கலை ஏற்படுத்துதல்.

மாணவர்கள், எதிர்காலச் செல்வங்கள், அவர்கள் நோயற்ற நிலையை பாதுகாப்பதோடு, எப்போதும் அவர்களின் ஆரோக்கிய வளர்ச்சி பற்றிக் கருத்திலெடுத்து உணவகத்தை நடத்திச் செல்லும் வழிகாட்டல் அவசியம். சரியான முகாமைத்துவம் மூலம் ஆரோக்கிய உணவுச் சூழலை ஏற்படுத்தி, ஆரோக்கியமான உணவைத் தெரிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துதல் அவசிய வாழ்க்கைக்கான ஆரோக்கிய உணவுத் தகவல்களை வழங்கும் நிலையமாக பாடசாலை உணவகத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவற்றை நிறைவேற்றிக் கொள்ள பாடசாலை அதிபர் தலைமையில், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS) சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். இதற்கென பாடசாலை உணவுக்குழு எனும் உப குழுவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். உணவகம் தொடர்பான மதிப்பீடு மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்ளுதலே இதன் பிரதான பணியாகும்.

இதில் அதிபர், சுகாதார மேம்பாட்டு பொறுப்பதிகாரி, ஆசிரியர் ஒருவர், பொது சுகாதாரப் பரிசோதகர், சிறுவர் சுகாதார கழக அங்கத்தவர்கள், சுற்றாடல் கழக உறுப்பினர் ஒருவர், பழைய மாணவர் சங்க உறுப்பினர் ஒருவர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர், மாணவ தலைவன், தலைவி பாடசாலை நுகர்வோர் வட்டத்தின் உறுப்பினர் என ஆறுபேர் அல்லது பன்னிரண்டு பேர் கொண்ட குழுவாக இது அமையலாம்.

பாடசாலை உணவுக்குழு மாதாந்தம் ஒன்று கூடி தவணைக்கொரு முறை பாடசாலை உணவகம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துக் கோட்டக் கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும், வலயக் கல்வி அலுவலக சுகாதார மேம்பாட்டு குழுவுக்கும் அனுப்பி வைத்தல் நன்று.

இதனைக் கண்காணிக்க வேண்டியது வலயக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும். அது தொடர்பின் தொடராய்வு அறிக்கை, பாடசாலை உணவுக் குழுவுக்கு வழங்குதல் வேண்டும். அவசியமான நடவடிக்கைகளை பாடசாலை உணவுக் குழுவே எடுக்கும்.

உணவுப் பொருள்களின் விலை தீர்மானித்தலும் விலை மாற்றங்களும் பாடசாலை உணவுக் குழுவின் அனுமதியுடன் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் விலைப் பட்டியலும் உணவகத்தில் காட்சிப்படுத்தல் நன்று.

மாணவர்களின் ஆரோக்கியம், போஷாக்கு என்பவற்றை மேம்படுத்தும் வகையில், பாடசாலை உணவுக் குழுவால் திட்டமிடப்படல் வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்தை காட்டிலும் மாணவர்களின் நலனே முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும்.

இதனை ஒரு நலன்புரி சேவையாக கருதி, மேற்பார்வை செய்து உணவு வழங்கலை உறுதி செய்தல் வேண்டும். வலயக்கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து. அதன் பிரதியை உணவகத்தில் காட்சிப்படுத்தலாம்.

இவ் உலகத்தில் அதிக சீனி, அதிக உப்பு, அதிக எண்ணெய் சேர்ந்த உணவு வகைகளை விற்பனை செய்யாதிருத்தல், உடன் உணவு (Fast Foods) காபனேற்றப்பட்ட பானங்கள், சோடாக்கள் என்பனவற்றை விற்பனை செய்யாது விலக்குதல் வேண்டும். இதன் மூலம் ஒரு நாளின் ஆறு மணித்தியாலங்கள் வரை பாடசாலைகளிலேயே செலவிடும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் பேணப்படும்.

உணவகத்தை நடத்துவோரை தெரிவு செய்யும் போது சில நிபந்தனைகளுக்கு அமைவாக தெரிவு செய்திடலாம். அதாவது, எதிர்கால சமுதாய நலனைப் பிரதானப்படுத்தி எமது பாரம்பரிய இயற்கையாகக் கிடைக்கின்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்



களைக் கொண்டு உணவு தயாரித்தல், மாணவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் பலவிதமான, பல வகையான உணவு தயாரித்தல். இதற்கு அவர்களுக்கு ஆரோக்கிய உணவு சம்பந்தமான தேடல் இருத்தல் வேண்டும்.

அல்லாது விடின் ஆரோக்கிய உணவு சம்பந்தமான விழிப்பூட்டல் மற்றும் தெளிவுபடுத்தல் வழங்கப்படல் வேண்டும். இதற்காக கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ துறையின் உணவு சம்பந்தமான அலகின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, ஆரோக்கிய உணவகத்தின் தேவை உணர்ந்து ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இந்த முயற்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்கி நேர் வழி நோக்கி பயணிக்க உதவிடலாம்.★






பொன்.வேணு கிருஷ்ணா

### இருந்து கவனம் திசை திருப்பப்படுமோ?

டைம்ஸ் செய்தியின்படி, ''தேசிய பாதுகாப்பு முகமையின் தலைமையகத்திலிருந்து அரசு தலை நகரங்கள் வரையில் அவற்றின் வாக்காளர்-பதிவு அமைப்புகளுக்குள் ரஷ்யர்கள் நுழைந்திருப்பதை அவை கண்டறிந்துள்ளன, ரஷ்யா கடந்த ஆண்டு அமெரிக்க ஜனநாயகத்தை எவ்வாறு தகர்த்தது, அவ்வாறு மீண்டும் ஏற்படாமல் எவ்வாறு தடுப்பது என்பதை எடுத்துக் காட்டுவதில் இருந்து கவனம் திசை திருப்பப்படுமோ என்பது தான் கவலையாக உள்ளது.''

அக்கட்டுரை எந்தவித நிஜமான ஆதாரமும் இல்லாமல் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகளின் சந்தேகங்களை மட்டுமே மேற்கோளிட்டு, ரஷ்ய அரசு ஊடுருவல்காரர்கள் வாக்களிப்பு முறைக்கான மென்பொருள் வழங்கும் நிறுவனங்களிலும், மின் சக்தி பகிர்மான வலைப்பின்னல் மற்றும் ஏனைய அத்தியாவசிய உள்கட்டமைப்பிற்குள்ளும் ஊடுருவி இருப்பதாக அறிவுறுத்தும் அளவிற்கு சென்றது. அது, ''தீவிரப்பட்ட இணையவழி போர்முறை'' எச்சரிக்கை குறித்த கோமி இன் கருத்துக்களை விரிவாக்கிய ''வல்லுநர்களின்'' பல தொடர்ச்சியான ரஷ்ய-விரோதக் கருத்துக்களை மேற்கோளிட்டது.

''கோமி ஐ விடுங்கள். அமெரிக்கா மீதான ரஷ்யாவின் போர் தான் நிஜமான செய்தி'' என்ற தலைப்பின் கீழ் Politico.com இல் பிரசுரிக்கப்பட்ட ஒரு கருத்துரை இன்னும் அதிகளவில் கடுமையாக இருந்தது. அக்கட்டுரையின் ஆசிரியர், ஜோர்ஜியா மற்றும் மால் டோவாவின் ரஷ்ய-விரோத அரசாங்கங்களுக்கான ஒரு முன்னாள் அமெரிக்க ஆலோசகரான Molly K. McKew ஆவர்.

''அமெரிக்க ஜனநாயகம் மீது நீண்டகால, ஆழ்ந்து செல்லும், நன்கு செயற்படுத்தப்பட்ட மற்றும் நடைமுறையளவில் பீதியூட்டும் ரஷ்ய தாக்குதல் குறித்து அக்கறையின்றி இருப்பதற்காக'' அந்தப் பெண்மணி ஜனாதிபதி ட்ரம்பைக் குறை கூறியதுடன், ''அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஒருபோதும் முகங்கொடுத்திராத ஒரு மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு விடையிறுக்கத் தவறியதற்காக'' வெள்ளை மாளிகையை தாக்கும் அளவிற்குச் சென்றார்.

### ரஷ்ய-விரோத பிரசாரத்தில் உள்ள அரசியல்

''ரஷ்யாவின் உலகளாவிய ஏகாதிபத்திய ஊடுருவல்'' குறித்து எழுதும் McKew, உலகின் இரண்டு மிகப்பெரிய அணுஆயுதச் சக்திகளுக்கு இடையே தவிர்க்க முடியாமல் ஆயுத மோதலுக்கு இட்டுச் செல்லும் ஒரு ''புதிய பனிப் போரையும்'' கடந்து செல்லும் ஒரு நடவடிக்கைப் போக்கை அறிவுறுத்துகிறார்.



ஒபாமா நிர்வாகத்தின் இரண்டாவது பதவிக்காலத்தின் போது, அதுவும் குறிப்பாக உக்ரேனில் 2014 அமெரிக்க ஆதரவிலான அதிவலது ஆட்சிக் கவிழ்ப்பு சதிக்குப் பின்னர் இருந்து தொடங்கப்பட்ட மாஸ்கோவிற்கு எதிரான வெளியுறவுக் கொள்கை நடவடிக்கைகளுடன் ட்ரம்ப் வெள்ளை மாளிகையை இயைந்து நிற்கச்செய்வதற்காக, இராணுவ-உளவுத்துறை எந்திரத்தின் மிகவும் சக்தி வாய்ந்த பிரிவுகளது ஒரு முயற்சியை பிரதிநிதித்துவம் செய்கின்றதும், ஜனநாயகக் கட்சி மற்றும் பெரும்பாலான பெருநிறுவன ஊடகங்களால் ஆதரிக்கப்படுகின்றதுமான ரஷ்ய-விரோத பிரசாரத்தில் உள்ள அரசியல் பிரச்சினைகளை உலக சோசலிச வலைத்தளம் பல முறை மீண்டும் மீண்டும் விளங்கப்படுத்தி உள்ளது.





சிரியாவில் ஒரு முழு அளவிலான ஆட்சி மாற்ற நடவடிக்கையை மேற்கொள்வதற்காக அந்நாட்டிற்குள் பினாமி உள்நாட்டுப் போரைத் தீவிரப்படுத்தும் அவற்றின் திட்டங்களை அந்நாட்டிற்குள் ரஷ்யாவின் தலையீடு முறியடித்தது என்பதற்காகவே, ரஷ்ய-விரோத பிரசாரத்தை முன்னெடுக்கும் ஆளும் வர்க்கத்தின் கன்னைகளும் மற்றும் உளவுத்துறை முகாமைகளும் குறிப்பாக கோபமடைந்துள்ளன. லிபியாவில் கடாபி மற்றும் ஈராக்கில் சதாம் ஹூசைனுக்கு என்ன கதி ஏற்பட்டதோ அதே கதியை சிரியாவில் அசாத் சந்திக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். புட்டின் மீதான அவர்களின் வெறித்தனமான வெறுப்பு, ரஷ்ய ஜனாதிபதி குறித்தும் அவர்கள் அதேபோன்ற ஆசைகளை மனதில் கொண்டிருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

ரஷ்ய-விரோத பிரசாரத்தின் ஒட்டுமொத்த கட்டமைப்பும் மோசடியானதாகும். இராணுவ-உளவுத்துறை முகாமைகள், ஜனநாயகக் கட்சி மற்றும் ஊடகங்களும் முன்னர் குடியரசுக் கட்சி வலதுகளுக்கு உரித்தான தனிச் சிறப்பான போலி மோசடிகளை உருவாக்கும் நன்கு-ஸ்தாபிக்கப்பட்ட வடிவத்தையே பின்தொடர்கின்றன. கிளின்டனின் Whitewater மோசடி, ஒபாமா ஒரு முஸ்லிம், ஹிலாரி கிளின்டனும் பெங்காசியும் போன்ற இத்தகைய போலி பிரசாரங்கள், பின்னர் அவற்றின் சொந்த உத்வேகத்தைப் பெற்றுக் கொள்ளும் என்ற ஊகத்துடன் தொடங்குகின்றன.

ரஷ்ய ஊடுருவல் அமெரிக்க ஜனநாயகத்தைப் ''பலவீனப்படுத்துவதாக'' குற்றஞ்சாட்டுவதில் என்ன உள்ளடங்கி உள்ளது? வாக்கு எண்ணிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை. 2000 இல் புளோரிடாவில் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிமன்றத்தால் ஜனநாயக-விரோத நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதைப் போல, எந்த வாக்களிப்பும் நிராகரிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, உண்மையான தகவல்கள் பெயர் வெளியிடாமல் விக்கிலீக்ஸுக்கு விநியோகப்பட்டது, அது அந்த ஆவணங்களை வெளியிட்டு, ஜனநாயகக் கட்சியின் தேசிய குழு பேர்னி சாண்டர்ஸ் பிரசாரத்தை அடிபணிய செய்ய வேலை செய்தது என்பதையும், ஹிலாரி கிளின்டன் வோல் ஸ்ட்ரீட் பார்வையாளர்களுடன் உடந்தையாய் இருந்து, ஒரு புதிய கிளின்டன் நிர்வாகம் பெரிய நிதிய நலன்களின் பைகளில் இருக்கும் என அவர்களுக்கு மறுஉறுதி வழங்கியதையும் எடுத்துக்காட்டியது.

அந்த வெளியீடுகள் நிச்சயமாக கிளின்டனை சேதப்படுத்தியது தான், என்றாலும் அந்தப் பெண்மணி நிதிய செல்வந்த தட்டின் ஒரு ஊழல்பீடித்த கைப்பாவை என்று ஏற்கனவே அவரைக் குறித்து அமெரிக்கர்கள் என்ன அறிந்திருந்தனரோ அதை மட்டுமே அந்த வெளியீடுகள் உறுதிப்படுத்தின.

**தேர்தல்களில் தலையீடு செய்வதைப் பொறுத்த வரையில், இந்த பழக்கத்தில் அமெரிக்க ஆளும் வர்க்கமே நிறைய பயிற்சிகளினூடாக திறமை பெற்றுள்ளது**

ஏனைய நாடுகளின் தேர்தல்களில் தலையீடு செய்வதைப் பொறுத்த வரையில், இந்த பழக்கத்தில் அமெரிக்க ஆளும் வர்க்கமே நிறைய பயிற்சிகளினூடாக திறமை பெற்றுள்ளது. ஒரு விடயம் சிறப்பாக குறிப்பிடுவதற்கு தகுதி உடையதாகும்: 1996 ரஷ்ய தேர்தலில், பொரிஸ் யெல்ஸ்டின் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, வெள்ளை மாளிகையின் வழிகாட்டுதலின் பேரில், அமெரிக்க அரசியல் நடவடிக்கையாளர்கள் தலையீடு செய்தனர். அந்த நடவடிக்கையின் தொடக்கத்தில், கருத்துக் கணிப்புகளின்படி ஒரு இலக்கத்தில் இருந்த யெல்ஸ்டின், அதிகரித்தளவில் மக்களெதிர்ப்பை முகங்கொடுத்திருந்தார். யெல்ஸ்டின் ஒரு அமெரிக்க கொடியைப் பிடித்திருப்பதைக் காட்டும் படத்துடன் ஜூலை 1996 டைம்ஸ் இதழ், ''மீட்பதற்கான இழுவைகள்: யெல்ஸ்டின் வெற்றிக்கு அமெரிக்க ஆலோசகர்கள் எவ்வாறு உதவினார்கள் என்பதைக் குறித்த ஒரு இரகசிய கதை'' என்று எழுதி, அந்நடவடிக்கையை தொகுத்தளித்து.

2016 தேர்தலில் கிளின்டன், வோல் ஸ்ட்ரீட் மற்றும் இராணுவ-உளவுத்துறை எந்திரத்தின் வேட்பாளராக போட்டியிட்டதாலும் மற்றும் தொழிலாள வர்க்க அதிருப்திக்கு முறையிடாததாலும் தோற்று போனார். இது, சமூக சமத்துவமின்மையின் அதிக வளர்ச்சியை ஒபாமா மேற்பார்வை யிட்டு வந்த அதேவேளையில் தசாப்தங்களாக நடந்து வந்த பொருளாதார மந்தநிலை, கூலி வெட்டுக்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய எட்டாண்டுகளுக்கு பின்னர் நடந்தது. ட்ரம்ப் நிர்வாகத்தின் முதல் மாதங்களில் இந்த வலதுசாரி நோக்கு நிலை தான் ஜனநாயகக் கட்சியைத் தொடர்ந்து வழி நடத்திக் கொண்டிருந்தது.

மருத்துவ காப்பீடு மீதான அவரின் தாக்குதல்களுக்காகவோ, புலம்பெயர்ந்தவர்கள் மீதான அவரின் தாக்குதல்களுக்காகவோ, உலகெங்கிலும் அவர் இராணுவவாதத்தைக் கொண்டு மிரட்டுகிறாரே என்பதற்காவோ, அல்லது மக்கள் வாக்குகளை இழந்து உரிமையும் கோர முடியாத ஒரு சிறுபான்மை ஜனாதிபதியாக உள்ள அவர் அந்தஸ்தைக் குறித்தோ கூட ஜனநாயகக் கட்சியினர் ட்ரம்புக்கு எதிராக போராட்டத்தில் இறங்கவில்லை. மாறாக, அவர்கள் அமெரிக்க வரலாற்றின் மிகவும் வலதுசாரி ஜனாதிபதியான ட்ரம்ப், ரஷ்யாவுடனான ஓர் இராணுவ மோதலுக்கு போதுமானளவிற்கு பொறுப்பேற்கவில்லையே என அவரை வலதிலிருந்து கண்டித்து, தாக்குவதை தேர்ந்தெடுத்துள்ளனர்.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir





# சுதந்திர வேட்கை

அத்தியாயம் - II

## புதிய அனுபவங்கள்

விடுதலைப் புலிப் போராளிகள் என்று கூறக்கூடிய இளைஞர்களின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டிலே மிகக் குறைவே. ஆனாலும், அந்தச் சிறிய தொகையினரிடையே கூட, வழிநடத்தல், ஒன்றுபடுத்தல், ஒழுக்கத்தை வலியுறுத்தல் ஆகியவற்றால், தமது தலைமைச் சிறப்பை பிரபாகரன் நன்கு வெளிப்படுத்தினார். ஆண்டுக் கணக்கான அனுபவம் அப்போது இல்லாததாலும் நாம் ஒரு சிறிய குழுவாக இருந்தாலும் எமக்கு நல்ல பெயரே நிலவியது. ஆகவே, எவர் எவருக்கு என்னென்ன பதவி, பொறுப்பு, கடமை என்று இருந்தாலும், ஒரு சமத்துவம், உண்மையான உறவு, பாசம் ஆகியவை வரகலவாக்கத்தில் வசித்த எம் மிடையே இழையோடி இருந்தன. பெரும்பாலான வீடுகளில் இருப்பதுபோல சமையல் அறையே நாம் கூடும் இடம். கூடி உண்ணும்போது நாம் பெற்ற மகிழ்ச்சியே தனியானது. பாலா, பண்டிதர், சங்கர், ரகு, பேபி, நேசன் நான் எல்லோரும் கூட்டுச் சமையலில் ஈடுபடும்போது ஒரே சிரிப்பும், பகிடியும் கும்மாளமுமாக இருக்கும். பாலா மீன் வெட்டிக் கொடுப்பார். அதன் பின் சமையலறை மூலையில் அரிசி மூடை மீது அமர்ந்தபடியே பகிடி விடுவார். போராளிகளின் வெடிச் சிரிப்பில் இருந்து பாலியல் ரீதியான பகிடிகள் என்று புரிந்து கொள்வேன். நான் ஈர வெங்காயம் உரிப்பேன். நேசன், தரையில் அமர்ந்து தேங்காய் துருவுவார். தலைமைச் சமையல்காரர் என்ற தோரணையில் பண்டிதர் மண்ணெண்ணெய் அடுப்புடன் போராடுவார். பண்டிதர் குறிப்பிடும் அளவுகளில் ரகுவும் சங்கரும் காய்கறி நறுக்கிக் கொடுப்பார்கள். சில சமயம் சிறீ இறைச்சி காய்ச்சும் பொறுப்பைத் தாமே ஏற்பார். அவருடைய கறி, தனிச் சுவையாக இருக்கும். பிரபாகரனும் அடிக்கடி இந்தக் கும்மாளத்தில் கலந்து கொள்வார். அவருடைய கோழிக்கறி தனிச் சுவையானது. இவை எல்லாம் ஒரு சாதாரண நடைமுறை போலப்பட்டாலும், பிரபாகரன் தமது போராளிகளுக்கு வழங்கிய பயிற்சியின் வெளிப்பாடே இது. சமையற் தகைமை உடையவர்களாக இருக்கின்றமை கெரில்லாப் போராளிகளின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்பதை பிரபாகரன் அவர்களுக்குப் புகட்டியிருந்தார். சமையல் முடிந்து சமையல் அறை துப்புரவாக்கப்பட்ட பின், எல்லோரும்போய்க் கழுவிக் குளித்து விட்டு வருவோம். தரையிலே பாய் விரிக்கப்படும். வட்டமாக சப்பணம் கட்டி உட்காருவோம். சமைத்ததைப் பகிர்ந்து புசிப்போம். பிரபாகரனும் சுவைத்து உண்பார். அவரும் அவருடைய போராளிகள் அனைவரும் தரமான சமையலாளர்களே. ஆனாலும், பண்டிதரே அனைவரிலும் சிறந்த சமையற்காரர் என்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட உண்மை.

சாப்பிட வேண்டுமானால் சமைக்க வேண்டும். அதற்கு முன் சந்தைக்குப் போக வேண்டும். மேற்குலகில் என்றால், உணவை மொத்தமாக வாங்கிக் குளிர் சாதனப் பெட்டியில் சேமித்து வைக்கலாம். இந்தியாவில் அப்படி அல்ல. உடன் மீன், இறைச்சி, காய்கறி ஆகியவற்றை அன்றாடம் வாங்க வேண்டியது தேவையாகும். ஆனபடியால், திரு.திருமதி பாலசிங்கமும் பண்டிதரும் தினமும் சந்தைக்குப் புறப்படுவோம். மற்றவர்களில் யாராவது விரும்பினால், அவர்களும் கூடி வருவார்கள். முற்பகல் வெய்யிலில் சந்தைக்குப் புறப்படுவோம். ஒரு கிலோமீற்றர் நடந்து, பேருந்துத் தரிப்பை அடைவோம். இடக்கு முடக்கான பெரிய சாம்பல் - பச்சை நிறப் பேருந்தைக் கண்டதும் எம்மில் ஒருவர் குறுக்கே நின்று மறிப்பார். பாலாவும் நானும் பேருந்தில் திறந்த ஜன்னல் பக்கமாக அமர்வோம். பேருந்து நாட்டுப் புறத்துக்குள் நின்று நின்று போகும். கடைசியில் பேரூர் சந்தையில் நிற்கும். அங்கே பெரிய சனக் கூட்டம். எமது செலவுத் திட்டத்தின்படி ஆளுக்கு பத்து ரூபா. நியாயமான விலையில் புத்தம் புது மீனை பாலா வாங்கிவிடுவார். இதனால், பண்டிதருடைய பொறுப்பு சுமை இறங்கிவிடும்.

தமிழ்நாட்டில் நண்பகலுக்கு மேல் பொழுது நன்றாகச் சாயும் வரை வெய்யிலில் வெளியே வராமல் வீட்டுக்கு உள்ளே இருப்பது புத்திசாலித்தனமானது. கட்டாயத் தேவை இருந்தாலன்றி, பெரும்பாலான மக்கள் நிழலில் ஒதுங்கி விடுவார்கள். பொதுவாக ஒரு குட்டித் தூக்கம் போடுவார்கள். நாமும் தூங்கி விடுவோம். ஆனால், பண்டிதர், அதிகம் கணிதம் தெரியாவிட்டாலும் காசுக் கணக்கைத் திரும்பத் திரும்ப சரிபார்த்துக் கொண்டிருப்பார். இயக்கத்தின் நிதிக் கணக்கைக் கூட்டுவதும், கழிப்பதும் சரி பார்ப்பதும் புத்தகத்தில் குறிப்பதுமாக அதிக நேரம் மூழ்கிப் போய் இருப்பார்.

பகல் வெயில் கொதி அடங்கி, கதிரவன் செந்நிறம் பாரித்து அடங்கத் தொடங்க மாலை வேளையின் மென் குளிரை அனுபவிக்க வேண்டும் என்ற புது உற்சாகம் எமக்குள் ஊறும். எல்லோரும் கூட்டாக வாரம் ஒரு தடவை சினிமாவுக்குப் போவோம். பிரபாகரனும் கூட வருவார். தமிழ் நாட்டில் பொதுவான பொழுது போக்கு, தமிழ் சினிமா தான். சனக் கூட்டம் அங்கேதான் போய்க் கொண்டிருக்கும். சினிமாவின் உள்ளடக்கத்தில் அல்ல. அதன் கற்பனைக் காட்சியிலே தான் மக்களுக்குக் கவர்ச்சி. அழகான சினிமா நட்சத்திரங்கள், மறைமுகமான பாலியல் சேட்டைகள் புரிவார்கள். வெளிவெளியான பாலியல் வெளிப்பாடு அடக்கப்பட்ட சமூகத்தில், அந்த அதீத கற்பனை உணர்ச்சி கிளுகிளுப்பேற்றும். மக்கள் மயங்கிப் போவார்கள். இதுவே லட்சக் கணக்கில் மக்களை சினிமாவுக்கு சுண்டியிழுக்கும். ஆனால், பிரபாகரனுக்கும் அவருடைய போராளிகளுக்கும் ஆங்கிலப் படங்கள் தான் பிடிக்கும். குறிப்பாகப் போர்ப் படங்கள்.

நாம் சினிமாவுக்குப் போகாவிட்டால், இந்திய வீடுகளுக்கே தனிச் சிறப்பான மொட்டை மாடியில் கூடுவோம். அங்கே முகில் இல்லாத வானத்தையும் முடிவுற்ற பிரபஞ்ச வெளியையும் பார்த்தபடியிருப்போம். எண்ணுக் கணக்கற்ற அத்தனை நட்சத்திரங்களுக்குள் எவ்வளவு சின்னஞ்சிறியவர்கள் நாம் என்ற எண்ணம் பொறிக்கும். இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி நாம் அறிந்தது கைம் மண்ணளவே என்பதையும் உணர்வோம். தத்துவ மெய்ஞ்ஞான சஞ்சரிப்பில் ஈடுபாடு இல்லாத போராளிகளுக்கு, வாழ்வின் புதிர்கள் பற்றிய அவர்களுடைய வினாக்களுக்கு பாலா சுவையாகப் பதிலளிப்பார்.

தமிழ் ஆடவர்களிடையே பிரபலமான இன்னொரு பொழுது போக்கு சீட்டு ஆடுவது. பிரபாகரன் இதைத் தடை செய்திருந்தார். ஆனால், பாலா இளவயதில் தீவிரமாக சீட்டு ஆடியவர். பிரபாகரன் வீட்டில் இல்லாத தருணங்களில், போராளிகளை பாலா வலிந்து இழுத்து விட்டு இரகசியமாக 'கடதாசி விளையாடுவார்' எதிர்பாராமல் பிரபாகரன் திரும்பி வந்தால், தம்பி உரக்கச் சிரித்து விட்டு, பெடியளைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதற்காக விளையாட்டு விளையாட்டாக பாலாவைக் கண்டிப்பார்.

ஏற்கனவே நான் குறிப்பிட்டமை போல இயக்கத்தின் நிதி நிலை இக்கட்டானதாகவே இருந்தது. உணவுக்காக ஆளுக்குப் பத்து ரூபாய் மட்டுமே செலவிடலாம். போராளிகள் ஒவ்வொருவரும் இரண்டு மாற்றுடைகள் மட்டுமே வைத்திருக்கலாம். ஆண்டுக்கு இரண்டு தடவைகளே புதுத்துணி. வாரம் ஒரு தடவை சினிமா பார்க்க ஒவ்வொருவருக்கும் கைச் செலவுக்குப் பணம் தரப்படும். மதுவிலும் புகைத்தலிலும் மட்டும் செலவே இராது. ஏனென்றால் இயக்கப் போராளிகளுக்கு அவை முற்றாகத் தடை செய்யப்பட்டு இருந்தன.

இருந்த போதிலும் என்மட்டில் தாராளமாகவே நடந்து கொண்டார்கள். நான் அவர்களுடைய 'செல்லப் பிள்ளை'. கடைத்தெருவிலும் சேலை வாங்கித் தருவார்கள். கேட்டது எல்லாம் கிடைத்தது. பாலாவுக்குப் புதிய கண்ணாடி கிடைத்தது. பாலாவுடைய நரை முடியைப் பார்த்துக் கவலைப் பட்டார்கள். சாயம் பூசுமாறு அவரை நச்சரித்து இசைய வைத்து விட்டார்கள். உணவுக்கான மேலதிகச் செலவில் மிகச் சிக்கனமாகவே இருந்தார்கள். ஆனாலும், என்மீதுள்ள பரிவால், அவ்வப்போது வெளியே சாப்பிடப் போவோம். பிரபாகரனும் அதற்கு இணங்குவார். வெவ்வேறு வகை உணவுகளைச் சுவை பார்ப்பதில் அவருக்கு ஆர்வம். அதிலும் வெளிநாட்டு உணவு வகைகளில் தனி ஈடுபாடு உண்டு.

இந்தப் பயணத்தின் போதுதான் உண்மையான போர் ஆயுதங்களுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளோடும் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தோடும் நான் சம்பந்தப்பட்டபோது, எனக்கு உயிர் ஆபத்தைத் தேடிக் கொள்கிறேன் என்பதையும் நன்கு அறிந்திருந்தேன். ஒருவர் தமது உயிரை இழக்க நேரலாம் என்பதற்கு அவர் தயார் இல்லை என்றால் ஆயுதப் போராட்டத்தில் அவர் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முடியாது. நான் ஆயுதங்களைத் தொட்டுத் தூக்கியபோது, போராட்டத்தில் அது ஒரு தேவையான பங்கு என்றாலும், தற்காப்புக்கும், விடுதலைக்குமான ஊடகமாகவே நான் ஆயுதத்தை மதித்தேன். தமிழ் மக்களின் போராட்டத்தில் ஆயுதம் மிகவும் முக்கியமானது. பிரபாகரன், ரகு, பண்டிதர், பேபி எல்லோருமே பாதுகாப்பு நோக்கத்திற்காக றிவோல்டர் பிஸ்ரல் தரித்திருந்தார்கள். அவர்களிடம் கனரகத் துப்பாக்கிகளும் இருந்தன.

அன்றிக்கும் இலக்குப் பயிற்சி தரத் தீர்மானித்தார்கள். அதற்கு, முதலில் மறைவிடங்களில் இருந்து துப்பாக்கிகளை மீட்டு வர வேண்டும். இதற்காக ரகுவும் பண்டிதரும் போனார்கள். நாம் சந்திக்க வேண்டிய இடத்துக்கு அவர்கள் வந்தபோது இரண்டு அப்பாவி இளைஞர்களையே அவர்களில் கண்டேன். புதினத் தாளிலே சுற்றிய இரண்டு பொதிகள் கையிலே தொங்க, எதிலுமே அக்கறை இல்லாதவர்கள் போல, அமைதியாக வந்தார்கள். நன்கு மறைக்கப்பட்ட ஆயுதங்களே அந்தப் பொதிகள். நான் எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். தேடப்பட்ட 'இரண்டு பயங்கரவாதிகள்' சென்னைக்கு சில மைல் வெளியே, தானியங்கித் துப்பாக்கிகளோடு தங்கள் இலக்குப் பயிற்சிக்காகச் சென்று கொண்டிருக்கின்றமையைப் பொதுமக்கள் பார்த்திருந்தால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று ஒரு கணம் சிந்தித்தேன்.

(தொடரும்...)

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



21



# புருவமுடி திருத்தம் செய்வதால் பெண்களுக்கு ஆபத்துக்கள்!

பெண்கள் தங்களின் கண்களை அழகு படுத்துவதற்காக புருவத்தைச் சீரமைப்பார்கள். ஆனால், அதனால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

புருவ முடிகள் வளரும் இடம் பிராணன் இயங்கும் இடமாகக் கருதப்படுகிறது. இறப்பு நெருங்கும் போது புருவ முடிகளைத் தொட்டாலே கையில் வந்து விடும். அந்தளவுக்கு உயிருக்கும் புருவ முடிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

> *புருவ சீரமைப்பால், பெண்களின் பிராண சக்தி குறைந்து, ஆயுள் நாள் குறையும் என ஆய்வுகள் கூறுகின்றன.*

இப்போது பெண்கள் பலர் புருவ முடிகளை அழகாக்க நினைத்து அடிக்கடி புருவ முடியைத் திருத்தம் செய்கின்றனர். இது உயிர் நிலையோடு தொடர்பான வர்ம இடங்களைப் பலவீனப்படுத்தும்.

பின் அந்த பலவீன நிலை பெண்களுக்குக் குணமாக்க முடியாத பல்வேறு பிரச்சினை களை ஏற்படுத்தும்.


புருவ சீரமைப்பால், பெண்களின் பிராண சக்தி குறைந்து, ஆயுள் நாள் குறையும் என ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும், பெண்களுக்குப் பிராண சக்தி குன்றிய மற்றும் ஆரோக்கியம் குறைவான குழந்தைகளை பிறக்கும் வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நம் உடலின் முக்கிய சக்தி கண்களுக்கு அருகில் இருக்கிறது. இதனால், அந்த இடங்களில் உள்ள முடியை எடுக்கவே கூடாது. இது பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். வர்மங்களில் நிலை கொண்டிருக்கும் மின்காந்த சக்தியை எந்த வழியிலும் சிதைக்கக் கூடாது .

புருவங்களின் அழகைப் பாதுகாக்க விரும்புவர்கள் சுத்த மான விளக்கெண்ணெயைக் கண் புருவங்களில் தீட்டலாம்.

இதனால் ஆயுளையும், புருவங்களின் அழகையும் நீண்ட நாள் பாதுகாக்க முடியும்.



# கர்ப்பிணிப் பெண்களுக்கு

கர்ப்பமான பெண்களின் உடலில் நீர்ச்சத்து மிகவும் அவசியம் என்று மகப்பேறு மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

எனவே, கர்ப்பிணிப் பெண்களின் உடலில் கோடை காலத்தில் நீர்ச்சத்து குறைவாக இருக்க அதிக வாய்ப்புள்ளது. அதனால் அவர்கள் அதிக நீர்ச்சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஏனெனில், கோடை காலத்தில் கர்ப்பிணிப் பெண்களின் உடம்பில் உள்ள நீர்ச்சத்துக்கள் அனைத்தும் வாந்தி மற்றும் வியர்வை வழியாக வெளியேறி விடும். இதனால், அவர்களின் உடல் பலவீனமாக வாய்புள்ளது.

கர்ப்பிணிப் பெண்களின் உடம்பில் நீர்ச்சத்து அதிகமாக இருந்தால், குழந்தையின் அசைவு நன்றாக இருக்கும். அதனால் குழந்தையின் உடலில் ரத்த ஓட்டமும் சீராக இருக்கும். இதனால் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும்.

## கர்ப்பிணிகள் சேர்த்துக் கொள்ள வேண்டியவை

★அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும்.

★மோர், இளநீர், பழச்சாறு, கஞ்சி போன்றவற்றைக் குடிக்க வேண்டும்.

★மாதுளை, தர்ப்பூசணி, தோடம் பழம்(ஒரேஞ்) போன்ற நீர்ச்சத்து உள்ள பழங்களைச் சாப்பிட வேண்டும்.

## கர்ப்பிணிகள் தவிர்க்க வேண்டியவை

★இரசாயனம் கலந்த குளிர்பானங்கள் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

★ஐஸ்கிறீம், சிப்ஸ், வறுத்த பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.

★உடல் சூட்டை ஏற்படுத்தும் உணவுகளைச் சாப்பிடக் கூடாது.

★கர்ப்பிணிகள் இறுக்கமான ஆடைகளைப் பயன்படுத்தக் கூடாது.





# அம்மா – மகள் உறவில் விரிசலைத் தவிர்க்க....

அம்மா மற்றும் மகள் என்ற உறவு மிகவும் புனிதமானது. ஆனால், நட்பாக இருக்கும் இந்த உறவில்கூட சில தடுமாற்றங்கள் ஏற்படலாம்.

எதிர்பார்ப்புகள் என்பது அம்மா மற்றும் மகளிடம் மட்டுமல்ல அனைவரிடமும் இருக்கக் கூடிய இயல்பான குணங்கள் தான். தமது மகள்மாரை வருத்தத்துக்கு உள்ளாக்கும் ஒருசில விடயங்களை அம்மாக்கள் தனது குழந்தைகளிடம் கூறக் கூடாது.

★உங்கள் மகள் படிப்புப் போன்று ஏதேனும் ஒரு விடயத்தில் பலவீனமாக இருந்தால், அவளது பலவீனத்தை உணர்த்தும் வகையில் பேசக் கூடாது.

★பெண்களுக்கு தியாகம் எனும் குணம் அவசியமாக இருக்கலாம். ஆனால், அனைத்துச் சூழ்நிலைகளிலும் இந்தக் குணத்தைச் செயற்படுத்துவது கடினம். எனவே, அனைத்து விடயங்களிலும் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து தனக்கு வேண்டிவற்றை இழக்க வேண்டும் எனப் பிள்ளைகளிடம் கூறக்கூடாது.

★மகளின் திருமணத்தில் ஒவ்வோர் அம்மாவுக்கும் அதிக ஈடுபாடு இருக்கும். ஆனால், மகளுக்கு திருமணத்தில் ஆர்வம் வரும்வரை அமைதியாக இருக்க வேண்டும். அதற்காக மகளிடம் தொந்தரவு செய்யக் கூடாது.

★பொது இடங்களில் அம்மாக்கள் மகள்மாரை மற்றவர்கள் முன்பு திட்டக் கூடாது. ஏனெனில் மற்றவர்கள் முன் திட்டுவது அவர்களுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

★அம்மா அழகாகவும், மகள் அவரைவிட அழகில் குறைவாகவும் இருந்தால், அதை உணர்த்தும் விதமான செயல்களில் தாய்மார் ஈடுபடக் கூடாது.



# மோதிர விரலின் சிறப்பு



மோதிர விரலின் அடி முதல் நுனி வரை பிரபஞ்சமே இருக்கிறது.

சில குறிப்பிட்ட விஷயங்களை இந்த விரலில் செய்வதனால், ஒரு பரிமாணத்திலிருந்து மற்றொரு பரிமாணத்துக்குச் செல்ல முடியுமாம்.

மோதிர விரலைப் பற்றி யோகத்தில் முழுமையான அறிவியலே இருக்கிறது.

நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அதற்கு மோதிர விரல் ஒரு சாவி போல் செயற்படும் என்கிறார்கள்.

# சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஏழாலையூர் பண்டிதமணி கந்தையா



இன்று நடைபெறும் சைவ சித்தாந்தச் செம்மல் பண்டிதமணி அமரர் மு.கந்தையா அவர்களது நூற்றாண்டு அகவை நிறைவு விழாவை முன்னிட்டு இந்தச் சிறப்புக் கட்டுரை 'காலைக் கதிரில்' பிரசுரமாகிறது.

பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் குருவாக வந்து தீட்சை கொடுத்து ஆட்கொள்வான் என்பது யாம் அறிந்தது.

சகலராகிய எமக்கு பக்குவம் வாய்ந்த மற்றொரு ஆன்மாவை இடமாகக் கொண்டு மானிடனாக வந்தே ஆட்கொள்கிறார். இறைவன் இடமாகக் கொண்டு ஆட்கொள்கிற குறிப்பிட்ட அந்தப்பக்குவ ஆன்மாவுக்கு இறைவன் தன்னை இடமாகக் கொண்டுள்ளமை தெரிந்தும் இருக்கலாம் தெரியாமலும் இருக்கலாம். இவ்வாறிருக்கும்போது பண்டிதரையாஅவர்கள் எவரையும் குருவாகக் கொள்ளவுமில்லை,எவரையும் சீடனாகக் கொள்ளவுமில்லை என்று சில குறைகுடங்கள் குலுங்கினால் அதை யாரும் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. குருவால் தீட்சைமுறைகளில் ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றால் ஆட்கொள்ளப்படும் சீடன் அதை உணர்ந்து கொள்வான்.

ஆனால், அதன்பின் சீடன் குருவை சிவனாய் வழிபட்டு ஏதாவது ஒரு விதத்திலாவதுதொண்டுசெய்துஓதல்,ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், ஞானநிட்டை கூடல் ஆகியவற்றை அக்குருவிடம் பயின்று (பயில்தல் என்பது பாடம் கொள்வதே என்பது மட்டுமல்ல) குருசீடத் தொடர்பை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் வந்தது போய் விடும் ஆபத்துண்டு. வந்தது போய்விட்டது என்று மாணிக்கவாசகர் கவன்றதைத் திருவாசகத்தில் ஆங்காங்கே காண்கிறோம். ஆனால், இவர் அவரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார் என்பதேஉண்மை. இவ்வாறு வலுப் பெற்றுக் கொண்ட குரு சீடத் தொடர்பு அத்துவித முக்திக்கு வழிகாட்டும் என்பது சித்தாந்த சாத்திர முடிவு.

பண்டிதரையாவை குருவாகப் பெற்ற பாக்கியம் பெற்றவர்கள் எவராவது இருப்பின்,அவரின் வாழ்நாளில் அவருக்குத் தொண்டு செய்யமுடியவில்லையே என்று கவலை கொள்வதை ஒருவிதத்தில் போக்கிக் கொள்ளலாம். அதாவது அவர் செய்ய விளைந்த, செய்ய ஆரம்பித்த,செய்துமுடிக்காத, முயன்றும் செய்து பயன் காண முடியவில்லையே என்று அங்கலாய்த்த பல விடயங்களை நாம் அறிவோம். குருவுக்குச் செய்யும் பணியாக அவற்றைச் செய்ய முயல்வோம், முயற்சி திருவினையாக்கும். அவற்றில் இன்னொன்றை இங்கு குறிப்பிடலாம் எனநினைக்கிறேன்.

1. சில தலைமுறைகளுக்கு முன் இலங்கைத்தமிழர்கள்அத்தனைபேரும் சைவர்களாகவே இருந்தார்கள். இவர்களுக்கு இந்துக்கள் என்று நாமம் சூட்டப்பட்டதன் ஆபத்துநீக்கப்படவேண்டும்.

2. சிவனை முழு முதற் தெய்வமாக அடி மனதில் பூரணமாக ஏற்றுக் கொண்ட மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அத்தனை சமய நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து தமக்குள் அனைவராலும்ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைமை நிறுவனத்தை 'உலக சைவசித்தாந்ததலைமையகம்'போன்ற ஒரு பெயருடன் இயங்க வைத்தல்.

3. தாம் முற்பட்டு ஆக்கிக் கொண்டிருந்த திருக்கேதீச்சர மான்மியம் போன்ற சில நூல்களை முடித்து அச்சேற்றல். ஆங்காங்கே அவ்வாறான சிலரின் முயற்சியால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சில மன்றங்கள் இவ்வாறான பணிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சிக்குரிய விடயம். குருத்தொண்டு சிறக்க, வாழ்க சிவனடியார்கள்.

இந்த உலகில் பிறக்கும் எந்த ஒரு ஜீவனும் மற்றொரு ஜீவனுக்கு அல்லது ஜீவன்களுக்கு உணவாகவோ வேறு ஒரு விதத்திலோ மிகப் பயனுள்ளதாகவே வாழ்ந்து மடிகின்றன. மனிதனாகப் பிறக்கும் ஜீவன்களுள் நூற்றுக்கு 90 வீதமும் தமக்காகவே வாழ்ந்து மடிகின்றனர். பிறப்புகளில் சிறப்பான மிக மேன்மையான மனிதப்பிறவியைப் பெற்ற நாம், அந்தப் பேற்றைப் பெற்றமைக்கான காரணத்தை நினைத்தும் பாராமல் அரும்பெரும் பாடுபட்டுப் பெற்ற இப்பிறவியை ஏனோதானோ என்று வாழ்ந்து அநியாயமாக்கி விடுகிறோம். பாவ புண்ணியங்களான பிராரத்தை இன்பமாகவும் துன்பமாகவும் அனுபவித்து முடிப்பதற்குப் பதிலாக, இன்பத்தின்போது மகிழ்ந்து, இன்னும் அவ்வின்பத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பியலைந்து வாழ்வை வீணாக்கிக் கொள்கிறோம். துன்பத்தின்போது எமது முன்னைய தீவினைகள் என்னும் சுமை எம்மை விட்டு நீங்குகின்றன என அறிந்து மகிழாமல், அத்துன்பத்துக்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவர்களை, எதிரிகளாக்கி அவர்களைத் துன்பப்படுத்துவதில் நாள்களை ஓட்டி வினைகளை அதிகரித்துப் பிறவிப் பெருங் கடலுள் மூழ்குகிறோம். ஆயினும், பத்துச் சதவீதமான மனிதர்கள் உலகத்துக்குப் பயனுள்ளவர்களாய் வாழ்ந்து, அவர்கள் மறைந்தபின்பும் ஆண்டுகள் பலவாகியும், அவர்களின் நினைவுகள், சாதனைகள், புகழ், நல்வாழ்வு நெறிகள் என்பன உலகத்துக்குப் பயனுள்ளதாகவும் ஆன்மீக முன்னேற்றத்தைத் தருவதாகவும் அமைந்துசிறப்படைந்தமைகண்கூடு.

எமது சமயக் கொள்கைகளிலும், அவற்றைஅனுட்டித்துக் கொள்வதிலும் உள்ளஅக்கறையின்மையும்,உண்மையான கடவுள் நம்பிக்கை இன்மையுமே சைவசாத்திரங்களில் கூறப்பட்ட வழி சமயாசார வாழ்வை அனுட்டித்து, துன்பத்தில் மட்டுமன்றி, எந்நேரமும் இறைவனை மனத்திலிருத்தி வழிபட்டு, அதன் நிமித்தம் குருதரிசனத்தைப் பெற்று குருவருளால் திருவருளைப் பெற்றுத் திருவருளால் சிவன்தாழ் அடைவது, மனிதப் பிறவியைப் பெற்று,அதிலும் சைவனாகப் பிறந்து சைவாசார வாழ்வு வாழ்பவனுக்கு ஒன்றும் எட்டாக்கனியல்ல என்பதைத் தனது நூல்கள், பிரசுரங்கள், கட்டுரைகள், கண்டனங்கள் மற்றும் தாம் வாழ்ந்த சைவாசார வாழ்க்கை முறையால் உலகுக்கு விளக்கிக் காட்டி, பலருக்கும் அவ்வாறான வாழ்க்கை நெறியில் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் உண்டாக்கியும், அதில் அவரவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை, ஐயங்களை, தெளிவின்மைகளைப் போக்கி, நற்குருவாய் வழிகாட்டிச் சிவமாய் ஆகியவர் நமது பண்டிதரையா அவர்கள்.

சைவர்களே! சைவம் என்பது சைவ நெறி. இன்றைய பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் காட் டப்படும் கற்கைநெறியல்ல. இது சைவர்களாகிய நாம் நன்கு அறிந்து புரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயம். பாடசாலைச் சமய நூல்களும், பல்கலைக்கழகப் பாடவிதானமும் நமது சைவசமயத்தைப் பிதிபலிப்பனவாகக் கூட இல்லை என்பது பண்டிதரையாவின் ஆழ்ந்த மன வேதனையாக இருந்தது.

அவ்வாறாயின் சைவசமயக் கொள்கைகளை அறிந்து அவற்றை அனுட்டிப்பது எப்படி என்ற வினா எழுகிறது. வேத, ஆகம, சைவசித்தாந்த அறிவு. இதைப் பெறுவது எப்படி? இதற்கு அவர் தரும் பதில் – சிவ வழிபாடு மட்டுமே எமது பக்கப் பணி. மிகுதி அவன் பார்த்துக் கொள்வான். எமது மூதாதையர்கள் அதிகமாய் அனைவரும் உரிய வயதில் சமய தீட்சை பெற்றுவிடுவார்கள். இயன்ற வரை சந்தியா வந்தன அனுட்டானங்கள் செய்து கொள்வார்கள். காலையில் சிவ வழிபாடு முடித்தே அடுத்த காரியங்களில் ஈடுபடுவர். அதே பழக்க வழக்கங்களைத் தமதுபிள்ளைகளுக்கும் ஊட்டினர்.

இவ்வாறான பரம்பரை ஒழுக்குகளின் சிதறல்களே ஆறுமுகநாவலர், ம.க.வேற்பிள்ளை, சிவபாதசுந்தரனார், கொழும்பு திருவிளங்கம், ஸ்ரீமதி சதாசிவம் முதலான பலர்.

இவ்வாறு தத்தம் வீடுகளில் சைவ பாரம்பரியத்தை ஏற்படுத்தியதோடு சைவக் கோயில்களும்,மடங்களும் கூட சைவபோதனைகளில் ஈடுபட்டுவந்தன.

அந்நியராட்சியின்போது ஏற்பட்ட கிறிஸ்தவ போதனைகள், பாடசாலைகளில் கிறிஸ்தவ பாடநெறி போன்றவற்றைப் பின்பற்றி வந்ததே இன்றைய இந்து பாடநெறி. இவ்வாறான இந்துப் பாடநெறியை இந்துபோட் இராசரத்தினம் முதலான பலரும்,அவர்களைத் தொடர்ந்து பண்டிதரையா போன்றவர்களும் இதைக் கடுமையாகக் கண்டித்தனர்.

அவ்வாறு கண்டித்தமைக்கான காரணங்கள் பல. அதில் உலகம் முழுவதும் வளர்ந்துவிளங்கிய சைவசமயத்தை ஆறு கூறுகளாக்கி அக்கூறுகளின் சேர்க்கைக்கு இந்துசமயம் எனப் பெயரிட்டு, சைவத்தை அந்த ஆறு கூறுகளில் ஒன்றாக்கிய அவ்விடயத்தை, எமது கல்லூரிகளின் பாட நூல்களிலும் பல்கலைக்கழகப் பாடவிதானத்திலும் உள்வாங்கிக் கொண்டது சைவ அழிப்பு நடவடிக்கைகளில் ஒன்று, எனப் பண்டிதரையா அவர்கள் தாம் மறையும் வரை மனவேதனையுடன் கண்டித்துக் கொண்டிருந்தார்.



பண்டிதமணி அமரர் மு.கந்தையா அவர்களது பட்டமளிப்பு விழாவின் பின் எடுத்த புகைப்படம்

தான் சிறுவனாக இருந்தகாலத்தில், சிவன், அம்பாள், பிள்ளையார், முருகன், வீரபத்திரர், வைரவர் கோவில்களை விட சைவர்கள் வணங்கும் வேறு கோவில்களைக் காண்பது அரிது என்றும், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலவிஷ்ணு கோவில்கள் இருந்தனவேயன்றி,கிருஷ்ணர் கோவில்கள், இராமர் கோவில்கள்,அனுமர் கோவில்கள், ஐயப்பன் கோவில்கள், அப்பா கோவில்கள், அம்மா கோவில்கள் என்று சைவர்கள் பித்துப் பிடித்து அலையும் நிலை இருக்கவில்லை என்றும் கூறி அங்கலாய்த்துப் போவார்கள்.

ஆனால், பண்டிதரையா ஆற்றிய சொற்பொழிவு வகுப்புக்கள்,பிரசுரங்கள் கண்டனங்கள், மூலம் இந்தஆபத்திலிருந்து தப்பிய சைவர்கள் இன்று ஏராளம்.

**திருமதி க. சொர்ணலிங்கம்**
**– இரத்மலானை –**

அவரின் கொள்கைளைப் பின்பற்றி அதை நிலை நாட்டவும், அதற்காகப் போராடவும் முன்னிற்பவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கவலையை விட்டுக் காரியத்தில் இறங்குவோம். உண்மை வெல்லும் வெற்றி நிச்சயம், சைவம் ஓங்கும்.

## ஏழாலை இலக்கிய கலாநிதி கந்தையாவின் நூற்றாண்டு அகவை விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 02

ஏழாலை இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையாவின் நூற்றாண்டு அகவை நிறைவு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் வே. கனக சபாபதி தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான முத்தமிழ்க் குருமணி சகல கமசங்கிரகர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் திருமுறை ஓதல், வரவேற்பு நடனம், வரவேற்புரையைத் தொடர்ந்து, ஆசியுரையை நல்லை ஆதீன சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்குவர். வாழ்த்துரையை அகில இலங்கை திருமறைக் கலாமன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் நிகழ்த்துவார். தொடர்ந்து பண்டிதரின் புத்தகக் கண்காட்சியும் இடம்பெறும்.

'சைவ நீதி' சிறப்பு மலர் வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முது நிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் நிகழ்த்துவார். தொடர்ந்து பண்டிதமணியின் 'திருமுறைத் தேம்பிழி' நூல் வெளியீட்டுரையை சைவப் புலவர் சித்தாந்த செம்மணி செ.நவநீதகுமாரும், சித்தாந்த சிறப்பிதழ் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சைவப்புலவர் எஸ்.ரமணராஜாவும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவிகளின் இசை நிகழ்வு, ஏழாலை அபிநயா கலாலய மாணவிகளின் நாட்டியாஞ்சலி, தனி நடனம், கருணாகரப் பிள்ளையார் சாது சங்கமமட அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் "மங்கையர்க்குத் தனி அரசி" நாடகம் என்பன இடம்பெறும்.

காலைக்கதிர்
Kalaikkathir







# அழிவுக்கு வழிவகுக்கும் பவளப் பாறைகள்

தற்போதைய கால கட்டத்தில் அதிகளவான கார்பன் வெளியேற்றம் பவளப்பாறைகளின் அழிவுக்கு வழி வகுப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய பவளப் பாறை அடுக்குகளில் மூன்றில் இரண்டு பகுதி, இரண்டு ஆண்டுகளில் நிறம் மாறி வெளுத்துப் போயுள்ளன என ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

பவளப் பாறைகள் அடுத்த நூற்றாண்டுகளுக்கும் தொடர்ந்து இருக்கும் என்று நம்புவதாக ஜேம்ஸ் குக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தலைமை ஆய்வு ஆசிரியரான பேராசிரியர் டெர்ரி ஹியூஸ் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய நிலை மையில், காபன் வெளியேற்றம் தொடருமானால், அதிகமாக பவளப் பாறைகளின் நிறம் வெளுத்துப் போகும் நிலை தோன்றலாம் என விஞ் ஞானிகள் கூறியுள்ளனர்.

காபன் வெளியேற்றத்தால் மட்டுமல்லாமல் ஒரு வகை நட்சத்திர மீன்களாலும் பவளப் பாறைகள் சேதப்படுத்தப்படுகின்றன.

கரீபியன் பகுதியில் அழிந்து வரும் பவளப் பாறைகள் மிகப் பெரிய அளவில் விரைவாகத் தங்களை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய திறனை வெளிக்காட்டியுள்ளன என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கை அமைப்புக்களின் விரைவான மாற்றங்களுக்கேற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்கின்ற திறனுடைய பவளப் பாறைகளின் மூலம், எதிர் கால இந்தப் பவளப்பாறை அடுக்குகள் வரையறுக்கப்படும் என்று சஞ்சிகை ஒன்றில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பவளப் பாறைகள் மட்டுமன்றி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் எனின் மிகவும் குறைந்த அளவு கார்பன் வெளியேற்றத்துக்கு விரைவில் மாற நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


இதற்கு பரிஸ் ‘பருவ நிலை மாற்ற ஒப்பந்தம்’ போன்ற சர்வ தேச ஒத்துழைப்பு அவசியம்.

# இலட்சியப் புகைப்படத்தை எடுக்க இவ்வளவு காலமா?

ஒரு பல்கடை அங்காடியின் முகாமையாளர் அவரின் கனவு புகைப்படத்தை எடுப்பதற்காக 4 வருடங்கள் 10 ஆயிரம் மைல்கள் மற்றும் 50 ஆயிரம் தடவைகள் முயற்சித்து இறுதியில் அந்தப் புகைப் படம் எடுத்த சம்பவம் மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

கேரி ஜோன்ஸ் என்ற புகைப்பட கலைஞர் மீன் கொத்தி பறவை நீரில் இருந்து வெளியில் வரும் அந்த கணத்தின் காட்சியை புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார்.

கடைசியாக அவரின் இலட்சியத்தை 4 வருடங்கள் கழித்து 50 ஆயிரம் தடவைகள் தவறவிட்டு வெற்றியடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# எதியோப்பியாவில் புதைந்திருந்த நகரம்

எதியோப்பியாவில் பூமிக்குள் புதைந்த நகரம் தொல்பொருள் நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த நகரத்தின் பெயர் ஹர்லா. இது செங் கடல் பகுதியில் இருந்து 120 கிலோ மீற்றர் தூரத்திலும், கட்டிஸ் அபாபா நக ரில் இருந்து 300 கி.மீற்றர் தொலைவிலும் உள்ளது.

தோண்டப்பட்ட இந்த நகரத்தில் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மசூதி உள்ளது. மேலும் இங்கு இஸ்லாமியர்கள் இடுகாடு மற்றும் நினைவு கற்களும் உள்ளன.


கண்ணாடிப் பீங்கான் உடைந்த பாத்திரங்கள், பாறை துகள்கள் மடகஸ்கர், மாலைதீவுகள், ஏமன் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள் உள்ளிட்டவை கிடைத்துள்ளன.

இதன் மூலம் இந்த நகரம் எதியோப்பியாவின் வர்த்தக மையமாகத் திகழ்ந்திருக்க வாய்ப்பு உள்ளதாகக் கருதப் படுகிறது.

மேலும், கடந்த கி.பி 10 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டுக்கு இடைப் பட்ட காலத்தில் இந்த நகரத்துக்கும், இந்தியாவுக்கும் இடையே வர்த்தக தொடர்பிருக்கலாம் என்றும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

மேலும், எதியோப்பியாவில் இருந்து தான் இஸ்லாம் மதம் உருவாகி இருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.







# படுத்துக் கொண்டு மணல் தேவதைகள் வடிவமைக்கும் கின்னஸ் முயற்சி

அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள ஸ்டீர்ன்ஸ் பார்க் கடற்கரையில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மணல் தேவதைகள் வடிவமைக்கும் கின்னஸ் முயற்சி நடைபெற்றுள்ளது.

இதில் பங்கேற்றவர்கள் கை, கால்களை நீட்டி படுத்தபடி, மணலில் முடிந்த அளவு புதைந்து தேவதை வடிவத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதன்படி, மொத்தம் ஆயிரத்து 414 பேர் பங்கேற்றனர். இதில், 27 பேரின் மணல் தேவதைகள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டன. முடிவில், ஆயிரத்து 387 மணல் தேவதைகள் ஒரேசமயத்தில் வரையப்பட்டு புதிய கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது.

இதற்கு முன் பிரிட்டனில் கடந்த 2015 ஆம் ஆண்டு பீம்பிரோகிஷயரில் 352 பேர் சேர்ந்து மணல் தேவதையை வடிவமைத்தமையே சாதனையாக இருந்தது. அது அமெரிக்காவில் முறியடிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் பாரதி

32

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

இனிவரும் நூற்றாண்டில் அழியும் உலகமொழிகளில் தமிழும் ஒன்று என சில காலமாகச் சொல்லிவருகிறார்கள்.

கடந்த காலங்களில் உலக மொழிகள் பல பேச்சு, எழுத்து வழக்கில்லாமல் போனமையால் மறைந்துவிட்டன. சில மொழிகளுக்கு வரி வடிவம் இல்லை.

ஆனால், தொன்மையான தமிழ்மொழிக்கு வரி வடிவம் இருக்கிறது. ஈழத்தமிழர்கள் பூமிப்பந்தெங்கும் புலம்பெயர்ந்து வாழத்தலைப்பட்ட பின்னர் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்க மற்றும் மத்தியகிழக்கு, ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் பேசப்படுகிறது.

எனினும் அண்மைக்காலங்களில், எதிர்காலத்தில் அழியும் மொழிகளில் தமிழும் ஒன்றென்று



பேசப்பட்டதற்குக் காரணம் என்ன..?

இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் அடுத்த தலைமுறை தமிழில் எழுதாது, பேசாது என்ற பொதுவான காரணம் சொல்லப்படுகிறது. இந்த அச்சத்தால் வெளிநாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புகள், தமிழ்ப்பாடசாலைகள், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் தமிழை வாழ வைக்கக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

''**தமிழினி மெல்லச்சாகும்**'' என்று பாரதியும் உரைத்திருக்கிறார் என்று பலரும் மேடைகளில் பிதற்றி வருகின்றமையையும் அவதானிக்க முடிகிறது.

பாரதி அப்படிச்சொன்னாரா...? என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர்கள் தயாரில்லை. மேடைகளில் முழங்கும்போது பாரதியே சொல்லியிருக்கிறார் ''தமிழினி மெல் லச்சாகும்'' என்று மேலோட்டமாகச் சொல்கிறார்கள்.

ஆனால், பாரதி என்ன சொன்னார் என்பதை இங்கு கவனிப்போம்.

பாரதி இயற்றியிருக்கும் **தமிழ்த்தாய்** என்ற கவிதையில் வரும் வரிகள் இவை:-

**''புத்தம் புதிய கலைகள் - பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
**மெத்த வளருது மேற்கே - அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.**
**சொல்லவும் கூடுவதில்லை- அவை**
**சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை**
**மெல்லத்தமிழினிச்சாகும் - அந்த**
**மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்''**

**என்றந்தப்பேதை உரைத்தான் - ஆ !**
**இந்த வசையெனக் கெய்திடலாமோ?**
**சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!**

**தந்தை அருள்வலியாலும் - இன்று**
**சார்ந்த புலவர் தவவலியாலும்**
**இந்தப் பெரும் பழி தீரும் புகழ்**
**ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.**

----இதுவே பாரதி எழுதியிருக்கும் கவிதை.

இதனை சரியாகப் படித்துப் புரிந்துகொள்ளாமல், '' தமிழினி மெல்லச்சாகும்'' என்று சொல்லி, தமது வாதத்துக்கு பாரதியையும் துணைக்கு அழைத்துக் கொள்கிறார்கள்.

பாரதி தமிழுக்காக தான் என்ன செய்வேன் என்றுரைத்தமையுடன் நிற்கவில்லை. ''**சென்றிடுவீர் எட்டுத்திக்கும்**'' என்றும் அறைகூவல் விடுத்து ''**கலைச்செல்வங்களைக் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**'' என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அத்துடன் நிறுத்தவில்லை. பேதைகளுக்கு மேலும் ஒரு விடயத்தை வலியுறுத்துகிறார்.

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்;**
**பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்**
**இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு,**
**நாமமது தமிழரனெக் கொண்டு இங்கு**
**வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர் !**
**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்.''**

இலங்கையின் மூத்த தமிழ் அறிஞராகவும் சிறந்த கல்விமானாகவும் விளங்கிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை (1902 - 1968) அவர்கள் வாழ்ந்த காலத்திலும், ''தமிழினி மெல்லச்சாகும்'' என்ற பிதற்றல்கள் ஒலித்திருக்கின்றன.

பருத்தித்துறை, புலோலி கிழக்கில் 1902 ஆம் ஆண்டில் பிறந்திருக்கும் கணபதிப்பிள்ளை அவர்கள் பற்றி விரிவான கட்டுரையை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதி (2017 ஆனி) இதழில் **ஈழக்கவி** எழுதியுள்ளார்.



பன்மொழிப் புலமைமிக்கவரான பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, 1936 இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகவும், தமிழ்த் துறைத் தலைவராகவும் நியமனமாகி, 1947 இல் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டவர். பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார்.

இவரது முயற்சியால் லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக் கலைத் தேர்வு ஏற்படுத்தப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைத் தேர்வையும் தொடக்கி வைத்த பெருமையும் இவரைச்சாரும்.

பாரதியின்பால் அபிமானம் கொண்டிருந்த மூத்த அறிஞராகவும் பேராசிரியர் அறியப்பட்டிருக்கிறார் என ஈழக்கவி எழுதியுள்ளார்.

சிறுவர் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பாரதியாரின்




பாப்பாப் பாடல்களுக்கும் அருமையான விளக்கம் கொடுத்திருக்கிறார் என ஈழக்கவி பதிவு செய்கின்றார்.

அவர் வாழ்ந்த காலத்திலும், ''**மெல்லத்தமிழ் இனிச்சாகும்**'' என்று யாராவது பேசினால் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பொங்கி எழுந்து விடுவார். புதிய துறையில் எல்லாம் தமிழ் வளரவேண்டும் என்பதும் பேராசிரியரின் இலட்சிய வெறி. ஆங்கிலேயரின் சிறந்த படைப்புகளை யாராவது அவ்வப்போது மொழிபெயர்த்து வெளியிட்டால் அந்த முயற்சியை அவர் பாராட்டுவார். ஆங்கில மொழியில் உள்ள இலக்கிய நூல்களைப்போல ஐரோப்பிய மொழிகளில் உள்ள படைப்புகளை எல்லாம் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் என்பதை வற்புறுத்துவார் பேராசிரியர்'' என்று ஈழக்கவி பதிவு செய்திருக்கிறார். அதற்கு ஆதாரமாக முன்னாள் மகாஜனக் கல்லூரி அதிபரும் தமிழ் அறிஞருமான எழுத்தாளர் த. சண்முகசுந்தரம் எழுதியிருக்கும் **கலைப்பருவி கணபதிப்பிள்ளை** என்ற நூலையும் சுட்டிக்காண்பிக்கின்றார் ஈழக்கவி.

இதிலிருந்து எமக்குப் பாரதியின் சிந்தனைகள் இலங்கையில் எவ்வாறு, எத்தகைய தாக்கத்தையும் செல்வாக்கையும் கொண்டிருந்தன என்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ்நாட்டில் பாரதி வாழ்ந்த காலத்திலேயே இலங்கையில் வாழ்ந்த அறிஞர்தான் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை. இவரும் சுவாமி விபுலாநந்த அடிகளைப் போன்று இலங்கையில் பாரதியின் சிந்தனைகளைப் பரப்பிய முன்னோடியாவார்.





இலங்கையில் பாரதியின் வாரிசுகள் பலர் தொடர்ந்தும் பாரதியின் சிந்தனைகளைத் தமது வாழ்வோடு பிணைத்துக்கொண்டே வாழ்ந்திருக்கின்றனர்.

இந்திய தமிழ்ச் சினிமா, இந்தியத் தமிழ்த் தொலைக்காட்சிகளில் உச்சரிக்கப்படும் தமிழைப் பார்த்துவிட்டு, ''தமிழைக் கொல்கிறார்கள்'' என எம்மவர் விமர்சிக்கின்றமையையும் அவதானிக்கின்றோம். இத்தகைய ஊடகங்களில் நல்ல தமிழைத் தேடவேண்டிய துர்ப்பாக்கியம் நீடிப்பதனாலும், ''தமிழினி மெல்லச்சாகும்'' என்று பேசத்தலைப்படுகின்றனர்.

தமிழர் புகலிடம் பெற்ற அந்நிய நாடுகளில் ஆங்கிலமும் ஐரோப்பிய மொழிகளும் பிரதான மொழிகளாக இருப்பதனால், தமிழில் எழுதுவதும் பேசுவதும் அருகிவருகிறது. அதனால், புகலிடத்தில் தமிழ்ப்பாடசாலைகள் தோன்றுகின்றன.

ஆஸ்திரேலியாவில் விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் நகரில் **பாரதி பள்ளி** என்ற பாடசாலை இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இயங்குகிறது. சில வருடங்களுக்கு முன்னர் **பாப்பா பாரதி** என்னும் பாலகர்களுக்கான நிகழ்ச்சிகள் அடங்கிய இறுவட்டும் மூன்று பாகங்களில் வெளியிடப்பட்டது.

பாரதி பள்ளியை மெல்பனின் உருவாக்கிய எழுத்தாளரும் கலைஞரும் சமூகப்பணியாளருமான




**மாவை நித்தியானந்தன்**, அதன் முதல் வளாகத்தை மெல்பனில் ஆரம்பித்த வேளையில், தமது ஆசானாக விளங்கிய மூத்த கவிஞரும் தமிழ் அறிஞருமான **அம்பி** அவர்களையே அழைத்துப் பேச வைத்தார்.

ஈழத்து இலக்கிய உலகில் கவிதைக்கு வளம் சேர்த்த கவிஞர்களில் அம்பி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்.

பாரதியின் சிந்தனைகளின் தொடர்ச்சியாக அவரும் புலம் பெயர்ந்து வந்திருக்கும் எமது தமிழ் மக்களுக்காக பின்வரும் கவிதையை இயற்றியிருக்கிறார்.




**ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத் தட்டு**
**வீடு நின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்**
**தேடியதெல்லாம் விட்டுத் திசைபல செல்லும் வேளை**
**பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே**
**ஓர் தலைமுறையின் பின்னே உன்னடி உறவென்றேனும்**
**ஊரிலே அறியாப்பிள்ளை உலகரங்கினில் யாரோ**
**தாரணி மீதில் நானோர் தமிழனென்றுறுதி செய்யின்**
**ஊர்பெயர் உடைகள் அல்ல ஒண்டமிழ் மொழியே சாட்சி**
**சாட்சியாய் அமையுஞ் சொந்தச் செந்தமிழ் மொழியே முன்னோர்**
**ஈட்டிய செல்வம் எங்கள் இனவழிச் சீட்டாம்**
**ஏந்த நாட்டிலே வாழ்ந்தபோதும் நடைமுறை வாழ்வில் என்றும்**
**வீட்டிலே தமிழைப்பேணும் விதிசெயல் கடமை ஐய !**
**வீட்டிலே தமிழைப்பேசும் விதி செயல் கடமை ஆமாம்**
**பாட்டனாய் வந்து பேரன் பரம்பரை திரிதல் கண்டே**
**ஈட்டிய செல்வம் போச்சே, இனவழி போச்சே என்று**
**வாட்டு நெஞ்சுணர்வை வெல்ல வழி பிறிதொன்றுமில்லை.**

-- கவிஞர் அம்பி

இவ்வாறு பாரதியின் கனவுகள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் தொடருகின்றன.

(தொடரும்)

### போதைப்பொருள் வியாபாரம் ஒடுக்க முடியாததாக வளர்ந்திருக்கிறது

தேசிய அளவிலும் உலக நாடுகளின் எல்லைகளுக்கு இடையேயும் போதைப்பொருள் சந்தையை ஊக்குவிக்கும் கும்பல்களால் போதைப்பொருள் வியாபாரம் ஒடுக்க முடியாததாக விரிந்து வளர்ந்திருக்கிறது. கணினி வலைத்தளங்கள் வழியாக புதிய போதைப்பொருள்கள் விற்கப்படுகின்றன. விளையாட்டுகள் பெயராலும் நலவாழ்வு என்ற போர்வையிலும் போதைப் பொருள்கள் ஊக்குவிக்கப்படுகின்றன என கர்தினால் டர்க்சன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### வயது முதிர்ந்தவர்கள் இளையோருக்கு நிறைய வழங்க முடியும்

வயது முதிர்ந்தவர்கள் தங்களின் ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதை நிறுத்திவிடக் கூடாது. அவர்கள் என்றும் இளையோருக்கு ஆன்மீகத் தாத்தாக்களாக வாழுமாறு கடவுள் அவர்களை அழைக்கின்றார். இறைவாக்குப் பணியை ஆற்றுவதற்கு வயது முதிர்ந்தவர்களின் அனுபவங்களையும் அவர்களின் நேர்மறைக் கனவுகளையும் எதிர்பார்த்திருக்கும் இளையோருக்கு அவர்கள் தங்களிடமுள்ள சிறப்பானவற்றைக் கொடுக்க வேண்டுமென திருத்தந்தை வேண்டியுள்ளார்.

# கியூடெக் கரித்தாஸ் நிறுவன செயற்படுத்தலில் சர்வமத பிரதேச ஆய்வரங்கு!

### யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகிறார்

HUDEC CARITAS





சர்வமத பிரதேச ஆய்வரங்கு ஒன்று எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் கே.கே.எஸ். தள்செவன ஹோட்டலில் நடைபெறவுள்ளது என யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் 'காலைக்கதிர்' பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் பகுதிக்குத் தெரிவித்துள்ளார். நோர்வே 'கரித்தாஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கொழும்பு தேசிய கரித்தாஸ் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள சர்வமத பிரதேச ஆய்வரங்கின் செயற்படுத்துநராக யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் செயற்படுகிறது. யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் என அவர் மேலும் தெரிவித்தார். கண்டி, அனுராதபுரம், மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 125 பேர் மேற்படி சர்வமத பிரதேச ஆய்வரங்கில் கலந்து கொள்கின்றனர். இதில் பௌத்த மத குருக்கள் மற்றும் மக்கள், இந்து மத குருக்கள் மற்றும் மக்கள், கிறிஸ்தவ மத குருக்கள் மற்றும் மக்கள், கத்தோலிக்க மத குருக்கள் மற்றும் மக்கள், இஸ்லாமிய சமய மத குருக்கள் மற்றும் மக்கள் அடங்குவர்.

ஏற்கனவே, இயங்கி வந்த மேற்படி குழுவினர் இன்னும் சிறப்பாக தம் பணிகளை எவ்வாறு முன்னெடுக்கலாம், பிராந்திய சமாதானத்தையும் ஒற்றுமையையும் இன்னும் கட்டியெழுப்ப எவ்வாறு செயற்படலாம் என்பன குறித்து மேற்படி சர்வமத பிரதேச ஆய்வரங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும்.

## உண்மையின் எண்ணங்கள்

*இலங்கை மண்ணில் என்றுமில்லாதவாறு இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் கட்டி எழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும் வேளை இப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சீஸ் அடிகளார் பாராட்டப்பட வேண்டியவர். அவரின் திட்டமிடலிலும் செயற்பாட்டிலும் நடைபெற்ற இனங்களையும் மதங்களையும் ஒற்றுமையிலும் சமாதானத்திலும் இணைக்கும் செயற்பாடுகள் பற்றி 'காலைக்கதிர்' பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் பகுதியில் நிறையவே அறிக்கையிட்டுள்ளோம். அது போன்ற ஒரு செயற்பாடாகவே சர்வமத பிரதேச ஆய்வரங்கு ஒன்று எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் கே.கே.எஸ். தள்செவன ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக அறிகிறோம். ஏற்கனவே பிராந்திய ரீதியில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டி எழுப்ப செயற்பட்டு வந்த இக்குழுவினர் இன்னும் இப்பணியை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என மேலும் சிந்திக்கின்றமை பாராட்டப்பட வேண்டியது. இவர்களின் பணி மேலும் சிறக்க, இலங்கை மண்ணில் வாழும் இனங்களும் மதங்களும் இன்னும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ, இறை வரம் வேண்டுவோம்.*

## 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### கொழும்பு பேராயர் யாழில் வலியுறுத்து

13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என யாழ் பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கொழும்பு பேராயர் கருதினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா 23 ஜூன் 2017 அன்று நடைபெற்றது. யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற மேற்படி பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் மேதகு கருதினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு கடந்த 1958ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச்சிங்கள சட்டமே காரணம். தமிழர்கள் தம்மை இரண்டாம் தர பிரஜைகளாக கருதும் நிலையையும் இந்த தனிச் சிங்கள சட்டமே உருவாக்கியது. இந்நிலையில், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண்பது அவசியமாகும். இனப்பிரச்சினைக்கு தீர்வாக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுக்கான வழியைத் தேட வேண்டும் - என அவர் மேலும் குறிப்பிட்டார்.








# தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு இணையும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்

தீவிரவாத முயற்சிகளும் வெறுப்புச் செய்திகளும் பரவுவதைத் தடுக்க முகநூல், மைக்ரோசொவ்ட், டுவிட்டர் மற்றும் யூடியூப் ஆகிய தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து முயற்சிகள் எடுக்கின்றமையை குறித்து ஐ.நா. உயர் அதிகாரி ஒருவர் தன் மகிழ்வை வெளியிட்டார். தனி மனிதருக்கும் பொது வாழ்வுக்கும் இடையே நிலவும் தகவல் பரிமாற்றத்தில் வெறுப்புச் செய்திகளையும் தவறான வதந்திகளையும் பரப்பும் முயற்சிகளைத் தடை செய்வதற்கு தகவல் தொழில் நுட்பத்தில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள் இணைந்து முயற்சிகள் மேற்கொள்வது குறித்து ஐ.நாவின் உதவித் தலைமைச் செயலர் தன் மகிழ்வைத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத அமைப்புக்களின் மறைமுகமான செய்திப் பரிமாற்றங்கள் மற்றும் வெறுப்பைத் தூண்டிவிடும் வகையில் பரப்பப்படும் செய்திகள் ஆகியவற்றைத் தடைசெய்வதற்கு 'தீவிரவாதத்திற்கு எதிராக உலக வலைத்தள அமைப்பை' உருவாக்கும் முயற்சியில் முன்னணித் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்துள்ளன என ஐ.நா. செய்திக்குறிப்பொன்று கூறுகிறது.

# தேங்கிப் போகும் கிறிஸ்தவர் உண்மையான கிறிஸ்தவரல்லர்

கிறிஸ்தவர் என்பவர் ஒரே இடத்தில் முடங்கிப் போய் விடுபவர் அல்லர் மாறாக கடவுளில் நம்பிக்கை கொண்டு அவரால் வழிநடத்தப்பட தன்னையே அனுமதிப்பவர் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஆற்றிய திருப்பலியில் இறைவன் ஆபிரகாமை அழைத்த நிகழ்வை மையப்படுத்தி வழங்கிய மறையுரையில் திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

தேங்கிப்போகும் கிறிஸ்தவர் உண்மையான கிறிஸ்தவராக இருக்க முடி யாது எனக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் ஆபிரகாமின் எடுத்துக்காட்டை முன்வைத்து நம் பாது காப்பான நிலைகளைவிட்டுவெளியே வந்து முதல் அடிகளை எடுத்து வைக்க வேண்டும் என்றார். வருங்காலத்தைக் குறித்துத் தெளிவற்ற நிலைகள் இருப்பினும், இறைவன் மீது நம்பிக்கை வைத்து அனைத்தையும் துறந்து அவர் காட்டும் வழியில் செல்வதே உண்மை கிறிஸ்தவர்களின் அடையாளம் எனவும் கூறினார் திருத்தந்தை. இறைவனின் வாக்குறுதியை நம்பி, அது நிறைவேறுவதை நோக்கி எவ்வாறு ஆபிரகாம் முன்னோக்கி நடந்தாரோ, அதேவண்ணம், நம் ஒவ்வொரு நாள் விடியலிலும் பயணம் தொடர்கிறது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு கிறிஸ்தவரும் மற்றவர்களை ஆசீர்வதிப்பவர்களாகச் செயல்படவேண்டும், ஏனெனிற் ஆசீர்வதித்தல் என்பது கிறிஸ் தவத்தின் ஒரு கூறு எனவும் எடுத்துரைத்தார்.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

## மாகாணசபைக்குப் போகும் ஆசையில் அதைக் கலைக்கச் சொல்லுகினமாம்!

''ஊரிலை கொளுத்திற வெய்யிலும், நாட்டிலை நடக்கிற அரசியலும் எங்களை வாட்டி வதைக்காமல் ஓயப்போறதில்லை'' என்று சலித்தபடி கச்சான் வியாபாரத்தை ஆரம்பித்தாள் செல்லாச்சி.

அப்போது கோவிலடியில் கூட்டம் கூடி, ஏதோ நடப்பதைப் பார்த்த ஏரம்பர் ''அடிபாடு மாதிரி இருக்கு'' என்று சொன்னார்.

இதைக்கேட்ட வாத்தியார், ''கூட்டத்திலை ஜீவனும் ரூபனும் நின்று வேடிக்கை பார்க்கினம் போல இருக்கு. அவர்கள் வந்தால் தெரியும் தானே'' என்றார்.

கோவிலடியில் கூட்டம் கலையவே, ஜீவனும் ரூபனும் சந்தியடியில் வந்தமர்ந்தனர்.

''இந்தா ஜீவன், இதைப்பிடி'' என்று சொல்லியபடியே ஒருகைபிடி கச்சானை அள்ளி ஜீவனிடம் கொடுத்தாள் செல்லாச்சி.

இந்த உபசரிப்பு எதற்கென்று புரியாமல் விழித்தபடியே கச்சானை வாங்கினான் ஜீவன். மற்றவர்களும் நெற்றிகளைச் சுருக்கினர்.

இதைக்கண்ட செல்லாச்சி, ''மாகாணசபைப் பிரச்சினை நடந்த போது ஜீவன்' சுரேஷ் பிறேமச்சந்திரனின் சகோதரர் கலாநிதி சர்வேஸ்வரன் அமைச்சராகப் போறார் என்று சொன்னவன் எல்லே.அந்தத் தீர்க்கதரிசனத்துக்குத்தான் இந்தப் பரிசு '' என்று சிரித்தபடியே சொன்னாள்.

இதைக்கேட்டு சந்தியடியில் மெல்லிய புன்னகை பரவியது.

''வடக்குமாகாண சபையிலை எல்லோருமாகக் குத்தி முறிஞ்சதிலை, தனியரசாக வெளிக்கிட்ட தமிழரசுக் கட்சிக்காரரை விட,மற்றப் பங்காளிக் கட்சிகளுக்குத்தான் இலாபம் அதிகம் கிடைச்சிருக்குப்போல இருக்கு'' என்றான் ரூபன்.

''இதிலை கனபேருக்கு ஆப்பிழுத்த குரங்கின் நிலையாம்.எப்பிடியும் தீர்வு என்று ஒன்று வரத்தான் போகுது. அதுக்கு எதிர்ப்பில்லாமல் முதலில் செய்ய வேணும்.பிறகு அந்தத் தீர்வை, சனத்துக்குப் பெரிய விசயம் நடந்த மாதிரிக் காட்டி, தங்கடை பக்கம் இழுத்து விடலாம். அதுக்குப் பிறகு பங்காளிகளை அடிச்சுத் துரத்தி விட்டு, அமைப்பைக் கைப்பற்றி , 'ஏகப்பிரதிநிதிகளாக' முடி சூடலாம் என்று ஒரு சிலர் திட்டம் போட்டவையாம். அதெல்லாம் தவிடு பொடியானது போதாது என்று, கஷ்டப்பட்டுக் காத்துக் கழட்டின பங்காளிக் கட்சிகளுக்கு மீண்டும் காத்து அடிச்சு விட்டாச்சே என்றுதானாம் பல தலைகள் தொங்கிப்போய்க் கிடக்கின்றன'' என்றான் பேப்பர்தம்பி.

''நிதானமில்லாமல் கோபத்திலை வீசப்படுகின்ற வார்த்தைகளும், முட்டாள்தனமான கருத்துகளும், அவற்றை வெளிவிடுகிறவையின் திட்டம் தவிடுபொடியானதால் எவ்வளவு குழப்பத்திலையும் , மூர்க்கத்திலையும் இருக்கினம் என்று காட்டுது'' என்று நிலைமையைச் சொன்னார் வாத்தியார்.

''இதுக்குள்ளை சிலர் எப்பிடியாவது மாகாணசபையைக்கலைச்சு,மறுபடியும் தேர்தல் வந்தால் தாங்கள் கதிரையைப் பிடிக்கலாம் என்பதற்காக, 'கலையுங்கோ... கலையுங்கோ'என்று கத்திக் குழறுகினமாம்'' என்று காதில் விழுந்ததைச் சொன்னாள் செல்லாச்சி.

''இதெல்லாம் இருக்கட்டும் , கோவிலடியிலை என்னடாப்பா பிரச்சினை?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''அது பொடியள் தண்ணியடிச்சுப் போட்டு, அட்டகாசம் செய்யிறாங்கள்.. அளவாகக் குடிக்கத் தெரியாமல், மண்டிப்போட்டு, நிக்கேலாமல் ஆளையாள் இழுபறிப்படுறாங்கள் '' என்று சொன்னான் ஜீவன்.

''யாழ்ப்பாணத்திலைதான் மதுவகை அதிகமாக விக்கிறதாகச் சொல்லுகினம். ஆனால், இங்கை கனபேருக்கு ஒழுங்காகத் தண்ணியடிக்கவே தெரியாது. அதிலும் இளம்பொடியள் 'சந்தோசத்துக்குத்தான் தண்ணியடிக்கிறம்' என்று சொல்லுவாங்கள். ஆனால், குடிச்சு முடிச்சுப் போட்டு' அடிதடி, அடிச்சுடை' என்று ஏதாவது துன்பத்தை வாங்கிச் சுமக்கிறாங்கள் '' என்று வேதனையாகச் சொன்னார் வாத்தியார்.



''அதுதான் அரசாங்கமே குடிக்கக் கூடாது என்றும் சிகரெட் புகைக்கக் கூடாது என்றும் சாராயப் போத்தலிலையும் சிகரெட் பெட்டியிலும் போடுது தானே. அதுக்குப் பிறகும் குடிச்சுப் புகைச்சுச் சீரழியிறதுக்கு யார் என்ன செய்யிறது?'' என்று சலித்தார் ஏரம்பர்.

''இப்பிடி எழுதிறதுதான் உலகத்திலேயே மிகப் பெரிய பகிடி.வெளிநாட்டிலையும் குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள். அப்ப ஏன் அங்கேயெல்லாம் சாராயப் போத்திலிலை 'குடி குடியக் கெடுக்கும்' என்று எழுதுவதில்லை?. அந்த அரசாங்கங்களுக்கு அது தெரியாதா?. போத்திலிலையும், பெட்டியிலையும் எழுதினால் காசு கொடுத்து வாங்கின பிறகுதானே அதைப் பார்க்கிறான். அதைப்பார்த்துப்போட்டு உடனே கடையிலை கொண்டுபோய் திருப்பிக் கொடுத்து விடுவான் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா?'' என்று கேட்டான் ரூபன்.

''உண்மையில்இப்படிஎழுதுவதும்,சாராயம் அதிகம் விக்குது என்று கூச்சல் போடுவதும் சும்மா சம்பிரதாயமே தவிர வேறில்லை. அளவாகக் குடிக்கிறவனுக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. அளவே தெரியாமல் குடிப்பவனுக்கு சொன்னாலும் விளங்காது என்பதுதான்நிலைமை''என்றான்ஜீவன்.

''குடி, குடியைக் கெடுக்காது என்று சொல்லுறியளோ?'' என்று கோபமாகக் கேட்டார் ஏரம்பர்.

''குடியை, அதாவது குடும்பத்தைக் கெடுப்பது கோபம், களவு, வஞ்சனை, பொய்மை, செய்நன்றி மறத்தல், பிறன்மனைவிழைதல் போன்ற பலவும் இருக்கு. இவையெல்லாம் குடிக்காமலும் வரும்.உண்மையில் எங்களுக்கு மதுவுடன் நட்பாக இருக்கத் தெரியவில்லை. தெற்கிலை மகள் மதுவை கிளாஸிலை ஊற்றிவைக்க,தகப்பன் எடுத்துக் குடிக்கிறது நடக்கிறது. மதுவைக் காட்டிக் காட்டி ஒளிக்கும் போது காணாததைக் கண்டது போலத் தான் குடிக்கத் தோன்றும்.'' என்று சொல்லி மூச்சு வாங்கினார் வாத்தியார்.

''அப்ப இதுக்கு என்னதான் தீர்வு?'' என்று கேட்டார் ஏரம்பர்.

கைகளை பின்னாள் ஊன்றிச் சாய்ந்தபடி சொல்லத் தொடங்கினார் வாத்தியார்.

''சம்பிரதாயத்துக்காகவோ அல்லது தாங்கள் உத்தமர் என்று நடிக்கிறதுக்காகவோ மதுவை எதிர்க்காது, அதிகமாகக் குடித்து விட்டு உளறுபவனை, பிரச்சினைப்படுபவனை மறுதலிக்க வேண்டும். குடிப்பதில் ஒரு வரையறை, ஒரு நாகரிகம் வர வேண்டும். சாராயம் என்பது கொடியது என்று புளுகாமல், கணக்குவழக்கு இல்லாது குடிப்பவனை விலக்கி வைக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார் வாத்தியார்.

''இங்கே படிச்சவன் குடிச்சா 'பார்ட்டி', படிக்காதவன் குடிச்சா குடிகாரன் என்றுதானே நிலைமை இருக்கு. குடியினால் பொது இடங்களிலை, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த வெளிநாடுகளில் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்கள் சரியாகவும் கடுமையாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றன. மது அருந்துதல் அவரவர் வீட்டில், அறையில் செய்யப்பட வேண்டிய தனிப்பட்ட விசயம். அதனால் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுவதை ஏற்கவே முடியாது'' என்றான் பேப்பர்தம்பி.

''இதிலை இன்னொன்றையும் கவனிக்க வேணும். பதினெட்டு வயது நிரம்பாத, பாடசாலை மாணவர்களும் மது அருந்தத் தொடங்கியிருக்கிறார்கள். இதன் தொடர் நிகழ்வாக, பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிக்க வாய்ப்பு கூடியுள்ளது.''என்றான் ஜீவன்.

அதனைத் தலையாட்டி ஏற்றுக் கொண்ட ரூபன், ''அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர் மது அருந்திவிட்டு வேலைக்கு வருவது அதிகரித்து இருக்கிறதாம்.. அதிலும் குறிப்பாக, மாலை 5 மணிக்குப் பிறகு பணியாற்ற நேரும் ஊழியர்கள் இவ்வாறு குடித்துவிட்டு வேலைக்கு வருவது மிகமிக அதிகமாகிவிட்டதாகச் சொல்கிறார்கள்.. மதுபோதையுடன் வேலைக்கு வருவோர் மீது நடவடிக்கை எடுத்தால், தொழிலாளர் அமைப்புகள் எதிர்க்கின்றனவாம். இதில் கீழ்மட்ட ஊழியர் அல்லது உயர் அதிகாரி என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. என்று மக்கள் கதைக்கிறார்கள்'' என்றான்.

''இதுகளோடை மது அருந்தும் இடங்கள் இப்போது கணக்கு வழக்கில்லாமல் பெருகி இருக்கின்றன. இவற்றில் அனுமதி பெற்றவற்றைவிட அனுமதி பெறாமல் நடத்தப்படுபவை பலவும் இருக்கின்றன.தனிப்பட்ட சில செல்வாக்குகளால்தான் இவை இயங்கமுடிகிறது.'' என்றார் ஏரம்பர்.

இதற்கு பேப்பர்தம்பி, ''மதுக்கூடங்கள் ஏற்படுத்தி வரும் கேடுகள், மதுவைவிட அதிகம். மதுவினால் சாவதைக் காட்டிலும், இந்த மதுக்கூடங்களிலும்,அவற்றின் வாயிலருகிலும் விற்பனையாகும் தரமற்ற, கலப்பட உணவினால் செத்துக் கொண்டிருப்போரே அதிகம். அதிலும் தப்புபவர்கள் தொற்று நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் போடும் பிளாஸ்ரிக் குப்பைகள் சுற்றுச்சூழலுக்கு மற்றொரு கேடு.'' என்றான்.

''இதிலை இன்னொரு விசயத்தை விட்டிட்டம், இப்படியான இடங்கள் செயற்படுறதிலை இலஞ்சத்துக்கும் பெரிய பங்கு இருக்கெல்லே.அது சமூகத்துக்கு மிக மோசமான கேடாகும்'' என்றாள் செல்லாச்சி.

''அதுமட்டுமே'' என்று தொடங்கிய வாத்தியார், ''மதுக்கூடங்கள்இருக்கின்ற பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு இந்தக் குடிமகன்களால் ஏற்படும் தொல்லைகள் மிக அதிகம். இந்தக் குடிமகன்கள் மதுக்கூடத்திலிருந்து வீடு செல்லும்போதுதான் பெரும்பாலான தகராறுகளும் வீதி விபத்துகளும் நிகழ்கின்றன.'' என்று சொல்லி முடித்தார்.

''ஆனால், அரசுக்குப் பெரிய வருமானத்தைத் தருவது மது விற்பனை. யுத்தத்தால் பொருளாதாரம் அதல பாதாளத்தில் கிடக்கும் இலங்கைக்கு, மதுவினால் கிடைக்கும் வருமானம், குறிப்பிடத்தக்க பொருளாதார பலமாக இருக்கிறது என்பதையும் பார்க்கத்தானே வேணும். இப்படிப்பட்ட வருமானத்தை இழக்க எந்த அரசுக்குத்தான் மனம் வரும்'' என்று யதார்த்தத்தைச் சொன்னான் பேப்பர் தம்பி.

''அப்படி ஒரு கட்டாயம் இருந்தால், குறைந்தபட்சம் மது விற்பனை, மது அருந்துதல் ஆகியவற்றுக்குக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குவதும் கூட சரியான நடவடிக்கையாக இருக்குமே'' என்றான் ரூபன்.

''இலங்கை மாதிரியே ஏழை நாடாக இருக்கிற நேபாளத்தில், அந்த நாட்டுக் குடிமக்கள் எவருக்கும் பொழுதுபோக்க, அங்கு இருக்கும் சூதாட்ட விடுதிகளுக்குச் செல்ல அனுமதியில்லை. அதுபோல இங்கும் மக்களுக்கு ஏற்ற மாதிரி சட்டங்கள் கொண்டு வரலாம். அரசிடம் கட்டணம் செலுத்தி, குடிப்பதற்கு உரிமம் பெற்றவர்களுக்கு மட்டுமே மது விற்பனை செய்வதும்; மதுஅருந்தி, போதையுடன் பணிக்கு வந்தால் உடனே பணியிடை நீக்கம் செய்வதும்; ஆடம்பர விடுதிகள் உட்பட எங்குமே வெளியாட்களுக்கான மதுக்கூடங்கள் நடத்தப்படுவதற்கான உரிமம் நீக்கப்பட்டு ,மது அருந்துவது அவரவர் வீட்டுக்குள் அல்லது அறைக்குள் நடைபெற வேண்டிய தனிப்பட்ட விவகாரமாக மாற்றப்படுவதும்; போதையுடன் வீதிகளில் நடமாடுவோரும், வாகனங்களில் செல்வோரும் பிடிக்கப்பட்டு, போதை தெளியும்வரை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து, அபராதம் விதிக்கும் நடைமுறையும் இன்றைய குறைந்தபட்ச தேவைகள்.'' என்று கூறிவிட்டு எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

அவரை மற்றவர்களும் தொடரவே, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 18 பேர் அரசில் இருந்து விலகுவதற்குத் தீர்மானம்!



## காணி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை வகித்து வரும் இலங்கை சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 18 பேர் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் அரசில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளனர்.

-இவ்வாறு காணி இராஜாங்க அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் முடிவடைய உள்ளது.

இதனாலேயே அமைச்சர்கள் அரசில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அரசில் இருந்து அவர்கள் விலகிய பின்னர் எதிர் வரும் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறும். தொடர்ந்து, சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாடாளுமன்றத்தில் இயங்குவர்.-என்றார். (ச)

# சிங்கள மொழி பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, ஜூலை 02

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கான சிங்கள மொழி பயிற்சி வகுப்புகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியுள்ளன.

வகுப்புக்கள் பிரதி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடத்தப்படும். ஆறு மாதகாலப் பயிற்சியின் போது இரு தடவைகள் பரீட்சைகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

30 மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் ஓரிரு வெற்றிடங்கள் காணப்படுவதால் இணைய விரும்பும் இளைஞர், யுவதிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு முன்னர் வந்து இணைந்து கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# விளையாட்டு விழா

'நாவலர் சோலை' முன்பள்ளி விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, யாழ். நீராவியடி நாவலர் ஆச்சிரம வளாகத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த வித்தியாலய அதிபர் யோகானந்தம் ஜெகஆனந்தம் கலந்து கொள்வார். (ச)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 02

திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக் கழகமும் பாரதி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஒலிம்பிக் விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் செ.சிவகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி க.விஜிதரன், சிறப்பு விருந்தினராக முத்துத்தம்பி மகாவித்தியாலய பிரதி அதிபர் க.சதீஸ்வரன் கௌரவ விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன் ஆகியோர் கலந்து கொள்வார். (இ)

# பாடசாலைப் பாடத்திட்டத்தில் இனி பாலியல் கல்வியும்?

## அரச கணக்கீட்டு தெரிவுக்குழு ஆலோசனை

தேசிய கல்விக் கொள்கையை உருவாக்கும் போது பாடசாலைப் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியைக் கொண்டு வருகின்றமை தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்துமாறு அரச கணக்கீட்டுத் தெரிவுக்குழு தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பாடசாலை மற்றும் பாடசாலைக்கு வெளியில் நடக்கும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களால் பாடசாலையில் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றமையைத் தடுக்கும் நோக்கத்திலேயே தெரிவுக்குழு மேற்படி ஆலோசனையை வழங்கியுள்ளது.

இது சம்பந்தமாக அரச கணக்கீட்டு தெரிவுக்குழு, தேசிய கல்வி ஆணைக் குழுவுடன் பல முறை பேச்சு நடத்தியுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் சம்பந்தமான விடயங்களை விளக்கும் மாற்று வழிகள் மாத்திரமல்லாது, பாடத்திட்டத்திலும் அதனை உள்ளடக்க வேண்டும்.

பாலியல் விடயங்கள் சம்பந்தமாக தெளிவான அறிவு இல்லாமையினால் தான் மாணவர்கள் மற்றும் மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என அரச கணக்கீட்டுத் தெரிவுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

# மகா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, ஜூலை 02

தெல்லிப்பழை கிழக்கு கோவிற்புலம் அருள்மிகு பேச்சி அம்பாளுக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் ஏக குண்ட புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9 .07 மணி தொடக்கம் 10.55 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம சிவாச்சாரியார் 'ஆகமவித்தகர்'சிவஸ்ரீ.ஆ.மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கும்பாபிஷேகப் பெருவிழாவுக்கான எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும். (இ)

# இன்று மணிவிழா

நெல்லியடி, ஜூலை 02

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கத்தின் மணி விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெறவுள்ளது என்று விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ)

# ஆலய உற்சவங்கள்

பூநகரி, ஜூலை 02

பூநகரி வேரவில் அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான மகோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

★ ★ ★

வவுனியா, ஜூலை 02

வவுனியா குடியிருப்பு அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரதத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ)

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 02

தொல்புரம் , வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ)

# உயர்தர மாணவருக்கு கல்விக் கருத்தரங்கு

வவுனியா, ஜூலை 02

தமிழ்த் தேசிய மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இலவச கல்விக் கருத்தரங்கு (தமிழ்ப் பாடத்துக்குரியது) நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெறும்.

வவுனியா மாணவர்களுக்கு தமிழ்ப்பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களை நீக்குவதற்காகவே இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்படுகின்றது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)

# விசேட தேவையுடையோருக்கான திட்டம்; வடக்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை

## ஜெய்ப்பூர் நிறுவன 30 ஆவது நிறைவையொட்டி சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் செய்தி

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் மாகாண சுகாதார அமைச்சால் போரால் பாதிக்கப்பட்டு வலுவிழந்தோர் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் அங்கவீனர்கள் தொடர்பில் எமது அமைச்சால் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி விசேட தேவையுடையவர்கள் தொடர்பான திட்டம் ஒன்றை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத் தின் 30 ஆண்டுகள் சேவை பூர்த்தி தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடகச் செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டில் நிலவிய கொடிய போரால் காயமடைந்து அங்கங்களை இழந்தவர்கள் தொடர்பில் நாம் கூடிய கவனம் எடுத்துச் செயற்படுவது அவசியம். 1987 ஆம் ஆண்டில் வடக்கில் போர்சூழ்நிலை நிலவியபோது அங்கவீன மானவர்களுக்கு செயற்கை அவயவம் பொருத்தும் சேவையை வழங்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனம் நேற்று முதலாம் திகதி தனது 30 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. காலத்தின் தேவை கருதி போரால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கடந்த 30 வருடங்களாக அளப்பரிய சேவைகளை வழங்கி வரும் இந்த நிறுவனத்தை மனதாரப் பாராட்டுகின்றேன்.

தற்போது எமது அமைச்சும் பலவிசேடசெயற்திட்டங்களை அங்கவீனமாக்கப்பட்டவர்களுக்காக மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக எமது அமைச்சு போரால் காயமடைந்து முள்ளந்தண்டுவடம் பாதிக் கப்பட்ட வர்களுக்காக 'வைகறை' எனும் மருத்துவ புனர்வாழ்வு நிலையத்தை வவுனியாவில் ஆரம்பித்து சேவைகளை வழங்கி வருகின்றது. இதேபோன்று படுக்கையில் இருக்கும் நோயாளிகளின் நன்மைகருதி நடமாடும் மருத்துவ சேவை ஒன்றை வடக்கின் 3 மாவட்டங்களில் ஆரம்பித்துள்ளோம். இதற்கான நிதியுதவியை வெளிநாடுகளில் வாழுகின்ற எமது புலம்பெயர் உறவுகள் வழங்கி வருகின்றனர். ஏனைய மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றோம்.

சுகாதார அமைச்சால் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப் பட்டவர்களுக்கான மாதாந்த உதவு தொகை வழங்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நவீன வச திகளுடன் கூடிய விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு நெதர்லாந்து அரசு ரூபா 200 கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தில் அங்கவீனர்களாக 45 ஆயிரம் பேர் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. எனினும் அவர்களின் சரியான எண்ணிக்கை, அங்கவீனத்தின் தன்மைகள் தொடர்பில் எமது அமைச்சால் கணக்கெடுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. - என்றுள்ளது. (எ)

காலைக்கதிர் Kalaikkathir



# லெபனான் அகதிகள் முகாம்மீது தற்கொலைத் தாக்குதல்!



## இளம்பெண் சாவு

பெய்ருட், ஜூலை 02

லெபனான் நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள அல்-நவுர் அகதிகள் முகாமில் தற்கொலைப் படையைச் சேர்ந்த 5 பேர் நடத்திய மனிதக்குண்டுத் தாக்குதலில் இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார். 3 இராணுவ வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

சிரிய நாட்டின் எல்லையோரத்தில் உள்ள அர்சலான் என்ற இடத்தில் இந்த அகதிகள் முகாம் அமைந்துள்ளது. சிரியா உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு அடைக்கலம் தேடி வந்த பலர் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பகுதியில் சிரியாவில் இருந்து தப்பிவந்த ஐ.எஸ். தீவிரவாதிகளும் சிரியாவை சேர்ந்த போராளி குழுவினரும் பதுங்கிவாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை வேட்டையாடும் பணியில் லெபனான் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இராணுவ வீரர்கள் தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போது, அல்-நவுர் அகதிகள் முகாமுக்குள் பதுங்கியிருந்த தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் தங்கள் உடல்களில் கட்டியிருந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தனர். மேலும் சில தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசி ஆவேசமாகத் தாக்கினர்.

இதில் சிரியாவில் இருந்து அகதியாக வந்து அந்த முகாமில் தங்கியிருந்த ஓர் இளம்பெண் உடல் சிதறி உயிரிழந்தார்.

(ச)



## ஹொங்கொங் தலைவருடன் சீன ஜனாதிபதி சந்திப்பு!

ஹொங்கொங்கின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கெர்ரி லாம்மை (Carrie Lam) சீனஜனாதிபதி ஸி ஜின் பிங் நேற்றுச் சனிக்கிழமை நேரில் சந்தித்துள்ளார்.

பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஹொங்கொங் விடுதலை பெற்று நேற்றுடன் 20 ஆண்டுகள் பூர்த்தியடைந்தன.

இதனை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கொண்டாட்டவிழாவில் கலந்து கொள்ளவே சீன ஜனாதிபதி ஹொங்கொங் சென்றார்.

ஹொங்கொங் மக்கள் தற்போது சுதந்திரத்தை அனுபவிக்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது எனச் சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஸி ஜின்பிங் சீனாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இந்த நிலையில், அவர் ஹொங்கொங்குக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றமை இதுவே முதன்முறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரித்தானியாவிடம் இருந்து விடுவிக்கப்பட்ட ஹொங்கொங், சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டமையைத் தொடர்ந்து, ஒரே நாடு இரட்டை நிர்வாகம் எனும் கொள்கையின் அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### உலக நாடுகளை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்தால்

# வடகொரிய நாட்டுக்கு பதிலடி கொடுப்போம்!



## அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

வடகொரியாவின் பொறுப்பற்ற மற்றும் மிருகத்தனமான நடவடிக்கைகள் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. வடகொரியா தனது நடவடிக்கைகளை இனிமேலாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையேல் அதற்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.

-இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோரிடையே வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பேச்சு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடகொரியா மனித உயிர்களுக்கு மதிப்பு அளிப்பதில்லை. அந்த நாடு தொடர்பில் மிகவும் பொறுமையுடன் செயற்பட்டோம். வெளிப்படையாகச் சொல்லவேண்டும் எனில், பொறுமையை இழந்துவிட்டோம். வடகொரியாவின் செயல்கள் தொடர்பில் பொறுமை காத்து வந்த காலம் மாறிவிட்டது.-என்றார்.

இதன்போது தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவிக்கையில்-

''இந்த விடயம் தொடர்பில் வடகொரிய ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த வேண்டும். அத்துடன், பாதுகாப்புத்தொடர்பில் தென்கொரியா இனிவருங்காலங்களில் பல சீர்திருத்தங்களை உருவாக்கும். இதன் மூலம் நாட்டின் சுய பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.''- என்றார்.

உலக நாடுகளின் கடும் எதிர்ப்புகளை மீறி அணு ஆயுதச் சோதனைகளை வடகொரியா நடத்தி வருகிறது. இந்த நாட்டின்மீது ஐ.நா. பல்வேறு தடைகளை விதித்துள்ளது. ஆனால், இத்தகைய எதிர்ப்புகளை எல்லாம் பொருட்படுத்தாத வடகொரியா தொடர்ந்தும் அத்துமீறி செயற்படுகிறது.

இதனால், கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அமெரிக்கா- வடகொரியா இடையேயான மோதல் உச்சத்தை எட்டியுள்ளது.

இத்தகைய சூழலில் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் பேச்சு நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## தெருவிளக்குகளில் 'சார்ஜ்' செய்யும் மின்சாரக் கார்கள்!

லண்டனில் மின்சார கார்களுக்கு தேவையான மின்சாரத்தை 'சார்ஜ்' செய்யும் விதமாக தெருவிளக்குகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியா, ஜேர்மன் உட்பட மேலைத்தேய நாடுகளில் இ-கார்கள் எனப்படும் மின்சாரத்தினால் இயங்கும் கார்கள் உள்ளன. அவற்றில் மின்சாரம் 'சார்ஜ்' செய்யப்பட்டு கார்கள் இயக்கப்படுகின்றன.

(ச)

### தொலைபேசி உரையாடலை பாதியில் நிறுத்தி விட்டு

# பெண் நிருபரின் புன்னகையை பாராட்டிய அமெ.ஜனாதிபதி!



அயர்லாந்து நாட்டின் பிரதமருடனான தொலைபேசி உரையாடலைப் பாதியில் நிறுத்தி விட்டு, பெண் பத்திரிகையாளரின் புன்னகையை ஜனாதிபதி ட்ரம்ப் பாராட்டிய காணொலி சமூக வலைத்தளங்களில் 'வைரலாகப்' பரவி வருகிறது.

அயர்லாந்து நாட்டின் புதிய பிரதமராக லியோ வரத்கர்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், அவருக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொலைபேசியில் பாராட்டுத் தெரிவிக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனைப் பதிவு செய்வதற்காக வெள்ளை மாளிகையில் உள்ள 'ஓவல் அலுவலகத்தில்' இரண்டு நாட்டு பத்திரிகையாளர்களும் குழுமியிருந்தனர். அவர்களில் அயர்லாந்தின் ஆர்.டி.ஈ செய்திப் பத்திரிகையின் அமெரிக்க தலைமைச் செய்தியாளர் கெய்த்திரியோனா பெரியும் இருந்தார்.

லியோ வரத்கருடன் தொலை பேசி உரையாடலைத் தொடங்கிய ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்துச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் இருக்கின்றனர் என்று ட்ரம்ப், பிரதமர் லியோவிடம் கூறினார்.

அதன் தொடர்ச்சியாக கெய்த்திரியோனாவை ட்ரம்ப்கைகாட்டி அவரது மேசைக்கு அழைத்தார். அதனைத் தொடர்ந்து, தொலைபேசி அழைப்பில் இருந்த லியோவிடம், ''இவரது சிரிப்பு மிகவும் அழகாக உள்ளது; உங்களை நன்றாகக் கவனித்துக் கொள்வார் என்று நம்புகிறேன்''. - என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி ட்ரம்பின் இந்தக் காணொலி தற்பொழுது சமூக வலைத்தளங்களில் வெகுவாகப் பகிரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜி.எஸ்.டி. வரி முறை இந்தியாவில் அமுல்!

டில்லி, ஜூலை 02

நாடு முழுவதும் சரக்கு மற்றும் சேவை வரி எனப்படும் ஜி.எஸ்.டி. (GOODS and SERVICES TAX) வரி முறை நேற்று சனிக்கிழமை முதல் அமுலானது.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடந்த பிரம்மாண்ட விழாவில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இணைந்து இதனைத் தொடக்கி வைத்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய வரிச் சீர்திருத்தம் இதுவாகும்.

இந்த வரி அமுலுக்கு வந்தமையால் மாநிலம் மற்றும் மத்திய அரசு விதிக்கும் 17 விதமான வரி விதிப்பு முறைகள் ஒழிந்து ஒரு முனை வரி மட்டுமே வசூலிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றை வரி விதிப்பு முறையின் கீழ் வந்துள்ளனர்.

இந்தப் புதிய வரி விதிப்புக் காரணமாக ஒருமுகப்படுத்தப்படும் வரி விதிப்புகளால் வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து அரசின் வரி வருமானம் அதிகரிக்கும். கடந்த மூன்று ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி அரசு மேற்கொண்ட மிகச் சிறந்த பொருளாதாரச் சீர்திருத்தமாக இது கருதப்படுகிறது.



இதனைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில்-

ஜி.எஸ்.டி. அமுலாக்கம் ஒரு கட்சிக்கான வெற்றி அல்ல. இது அனைத்துக் கட்சியினரின் முயற்சிகளுக்கும் கிடைத்த ஒட்டு மொத்த வெற்றியாகும். இது தொடர்பில் நீண்ட காலம் யோசித்தோம். இது அனைத்து மாநில அரசுகளுடனும் மத்திய அரசு பல ஆண்டுகளாகப் பேச்சு நடத்தியமைக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

கூட்டாட்சி தத்துவத்துக்கு இது மிகச் சிறந்த உதாரணம் ஆகும். இந்தியாவின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் ஒருங்கிணைக்க சர்தார் வல்லபபாய் பட்டேல் மேற்கொண்ட முயற்சி தற்போது செயல் வடிவம் பெற்றுள்ளது.

## குடியரசுத் தலைவரும் பிரதமரும் நள்ளிரவில் தொடக்கி வைத்தனர்

லொறிகள் சுங்கச் சாவடிகளில் நீண்ட நேரம் காத்திருக்கின்றமை இதனால் முடிவுக்கு வந்துள்ளது. 31 மாநிலங்களும், அனைத்து யூனியன் பிரதேசங்களும் இதன் மூலம் ஒன்று பட்டுள்ளன. இது வெளிப்படையான வரி விதிப்பு முறையாகும். இது கறுப்புப் பணத்தை ஒழிக்கவும், ஊழலை ஒழிக்கவும் உதவும். நிர்வாகத்தில் புதிய கலாசாரத்தை ஏற்படுத்த உதவும், மேலும் அதிகாரிகளின் கெடுபிடிக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும்.

இதன் மூலம் வர்த்தகர்கள் அடையும் பலனைப் பொதுமக்களுக்கும் அடைவார்கள் என நம்புகிறேன். புதிய கண்ணாடிக்கு ஏற்ப கண்கள் தங்களை எப்படி மாற்றிக் கொள்கிறதோ அதைப் போல வர்த்தகர்கள் ஜி.எஸ்.டிக்கு ஏற்பத் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும்.- என்றார்.

பிரணாப் முகர்ஜி பேசுகையில்-

வர்த்தகர்கள் முறையாக வரி செலுத்தும்போது தான் அதன் பலன் நுகர்வோருக்குக் கிடைக்கும். இதனால் நுகர்வோர் நேர்மையான வர்த்தகர்களை ஊக்குவிக்க வேண்டும். ஜி.எஸ்.டி. அமுலாக்கத்தின் வெற்றியே அதைச் சிறப்பாக செயற்படுத்துவதில்தான் உள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, குடியரசு துணைத் தலைவர் ஹமீத் அன்சாரி, நிதியமைச்சர் அருண் ஜேட்லி, மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அறிவுக் கூர்மையில் ஐன்ஸ்டீனை விஞ்சிய இந்திய வம்சாவளி சிறுவன்!



பிரித்தானியாவில் வாழ்கின்ற இந்திய வம்சாவளி சிறுவனான அர்னவ் சர்மா அறிவுக் கூர்மையில் பிரபல விஞ்ஞானியான அல்பார்ட் ஐன்ஸ்டீனை விஞ்சியுள்ளார்.

தெற்கு பிரித்தானிய ரீடிங் டௌன் நகரைச் சேர்ந்தவர் அர்னவ் சர்மா (வயது-11). இவர் அறிவுக்கூர்மையைக் கண்டறிய உதவும் ''மென்ஸா'' தேர்வை எழுதத் தீர்மானித்தார். மிகக் கடினமான இந்தத் தேர்வில் வெளிப்படும் நுண்ணறிவுத் திறன் மூலம், ஒருவரின் அறிவுத் திறனை எளிதாக அறிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையில், இந்தத் தேர்வின் மூலம் அர்னவ் சர்மாவின் நுண்ணறிவுத்திறன் 162 எனக் கண்டறியப்பட்டது. மறைந்த விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன், பிரபல இயற்பியல் மேதை ஸ்டீஃபன் ஹொக்கிங் ஆகியோரின் நுண்ணறிவுத்திறன் 160 என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் அர்னவ் சர்மா தெரிவிக்கையில்-

'' தேர்வின்போது சிறிது படபடப்பு இருந்தது உண்மைதான். ஆனால், தேர்வுக்காக எந்த விதத் தயாரிப்பையும் நான் மேற்கொள்ளவில்லை'' -என்றார்.

இது தொடர்பில் அர்னவின் தாய் மீஷா தமீஜா சர்மா கூறுகையில்- ''அர்னவ் இரண்டரை வயதுக் குழந்தையாக இருந்தபோதே அவனது கணிதத் திறமை வெளிப்பட்டது. அப்போதே அவன் நூறு வரையிலான எண்களை மட்டுமல்லாது, அதற்கும் மேற்பட்ட எண்களையும் மளமளவென ஒப்புவிப்பான்'' -என்றார். (ச)

## 3 மாதங்களுக்குப் பின்னர் நளினி - முருகன் சந்திப்பு!

வேலூர், ஜூலை 02

3 மாதங்களுக்குப் பின்னர் நளினி-முருகன் ஆகியோருக்கு இடையில் நேற்று சனிக்கிழமை காலை 7.50 மணியளவில் வேலூர் சிறையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு அரை மணித்தியாலம்வரை இடம் பெற்றது எனத் தெரிவிக்கப் படுகிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்



டனை பெற்ற கைதியான முருகன், வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதே வழக்கில் கைதான முருகனின் மனைவி நளினி வேலூர் பெண்கள் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

நீதிமன்ற உத்தரவுப்படி 15 நாள்களுக்கு ஒரு முறை நளினியை முருகன் சந்தித்து அரை மணித்தியால நேரம் பேசி வந்தார். இந்த நிலையில், முருகன் அடைக்கப்பட்டுள்ள அறையில் இருந்து, 3 மாதங்களுக்கு முன்பு ஒரு கைபேசி சிக்கியதை அடுத்து, மனைவி நளினி உட்பட பார்வையாளர்களைச் சந்திக்க முருகனுக்கு சிறைத்துறை நிர்வாகம் தடை விதித்தது.

முருகனைச் சந்திக்க அவரது தாயார் சோமணி வெற்றிவேல் பலமுறை முயற்சித்தும் பலனளிக்கவில்லை. இந்த நிலையில் , சிறைத்துறை விதித்த 3 மாத தடை உத்தரவு நீங்கி உள்ளது.

இதையடுத்தே மேற்படி சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 12 சிங்கங்கள் சூழ்ந்திருக்கக் குழந்தை பெற்ற பெண்!

ராஜ்கோட், ஜூலை 02

குஜராத் மாநிலத்தில் 12 சிங்கங்கள் சூழ்ந்து இருக்க பெண் ஒருவருக்கு அம்புலன்ஸில் வைத்து பிரசவம் நடந்துள்ளது.

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில் 'கிர்' காடுகள் புகழ் பெற்றவை. இங்குதான் நாட்டிலேயே அதிக அளவு சிங்கங்கள் வாழ்கின்றன. இந்த வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்களில் பல மக்கள் வசிக்கின்றனர்.

இந்த நிலையில், கடந்த புதன் கிழமை இரவு லுன்சாபூர் கிராமத்தைச் சேர்ந்த மன்குபென் மக்வானா என்ற 32 வயது கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிரசவவலி ஏற்பட்டது. உடனே அம்புலன்ஸை வரவழைத்தனர். அதிகாலை 2.30 மணியளவில் கர்ப்பிணியான மக்வானாவை ஏற்றிக் கொண்டு வனப்பகுதி வழியாக வைத்தியசாலையை நோக்கி அம்புலன்ஸ் சென்றது.

அப்போது திடீரென்று சிங்கங்கள் வீதியில் நடமாடின. உடனே சாரதி அம்புலன்ஸை நடுவழியில் நிறுத்தி விட்டார். சிங்கங்கள் அம்புலன்ஸை சூழ்ந்து கொண்டன. மொத்தம் 12 சிங்கங்கள் இருந்தன. இதனால், அம்புலன்ஸில் இருந்த சாரதி , ஊழியர்கள் மற்றும் கர்ப்பிணியின் உறவினர்கள் ஆகியோர் அதிர்ச்சியில் உறைந்தனர். இந்த நிலையில், மேற்படி கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிரசவ வலி ஏற்பட்டது.

அம்புலன்ஸில் இருந்த ஊழியர்கள் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு மருத்துவர்களின் அறிவுரைப்படி பிரசவம் பார்த்தனர். 25 நிமிட போராட்டத்துக்குப் பின் ஆண் குழந்தை பிறந்தது.

இதனை அடுத்து, சிங்கங்கள் ஒதுங்கிக்கொண்ட பின்னர், அவர்கள் வைத்தியசாலைக்குச் சென்றனர்.

சிங்கங்களுக்கு மத்தியில் குழந்தை பெற்றெடுத்தமையை வாழ்நாளில் மறக்க முடியாது என்று தாயார் மக்வானா தெரிவித்துள்ளார். (ச)






# களத் தடுப்பின் போது எமது மனப்பாங்கில் மாற்றம் வேண்டும்

## மத்தியூஸ் கூறுகிறார்

காலி, ஜூலை 02

கடந்த 1992 ஆம் ஆண்டு, நியூ பிளைமவுத் நகர மைதானத்தில் ஸிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெற்றிருந்த ஒரு நாள் போட்டியொன்றில், அந்த அணியினால் முதலில் துடுப்பாடி பெறப்பட்ட 312 ஓட்டங்கள் என்கிற இலக்கினை விரட்டிய இலங்கை அணியானது, ஒரு நாள் போட்டிகளில் 300 இற்கு மேலான ஓட்டங்களினை எட்டிப் பிடித்த முதல் அணி என்னும் வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்திருந்தது.

இது நடந்து, 25 வருடங்களின் பின்னர் இதற்கு பரிகாரமாக ஸிம்பாப்வே அணியானது காலியில் இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில், இலங்கை அணியை வீழ்த்தி, இலங்கை மண்ணில் 300 இற்கு மேலான ஓட்டங்களை விரட்டி வெற்றி பெற்ற முதலாவது அணியாக தம்மைப் பதிவு செய்துள்ளது.

போட்டியின் இரண்டாம் இன்னிங்ஸ் தொடங்கி, இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்ததன் பின்னர், ஸிம்பாப்வே அணியானது இலக்கை எட்ட மேற்கொண்டிருந்த பிரயத்தனமானது மிகவும் அற்புதமாக அமைந்திருந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மாறியிருந்த சொலமன் மிர், தான் மொத்தமாக பெற்ற 112 ஓட்டங்களில் 87 ஓட்டங்களினை லெக் திசைகளில் மாத்திரம் லாவகமாக பந்துகளைத் தட்டிவிட்டு சேர்த்திருந்தார். இதனால், ஸிம்பாப்வே அணியானது இலகுவாக வெற்றியினை சுவைத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் போட்டியின் பின்னர் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஸிம்பாப்வே அணியினை பாராட்டும் விதமாக கீழ்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது சுழல் பந்து வீரர்களினை சமாளித்து, ரிவர்ஸ் ஸ்வீப் (அடிகள்) மூலமும், ஸ்வீப் (அடிகள்) மூலமும் ஓட்டங் களினை சேகரித்த ஸிம் பாப்வே துடுப்பாட்ட வீரர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றோம். அவர்கள் எமது சுழல் வீரர்களின் பந்து வீச்சுப் பாணிகளை முழுமையாக தமக்கு சாதகமாக்கியிருந்தனர். எது எவ்வாறு இருப்பினும், நாம் பந்து வீச்சிலும், களத்தடுப்பிலும் மிகவும் மோசமாக செயற்பட்டிருந்தோம். அவர்களது துடுப்பாட்டத்திற்குரிய பலனை அவர்கள் பெற்றுக்கொண்டனர் என்று தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில் இலங்கை அணியின் மோசமான களத்தடுப்பானது அனைவராலும் விமர்சிக்கப்பட்ட பேசுபொருளாக மாறியிருந்தது. இந்த நிலையில், இலங்கை அணி வீரர்களால் இந்தப் போட்டியிலும் மூன்று பிடியெடுப்புக்கள் தவறவிடப்பட்ட காரணத்தினால் இலங்கை அணியின் மீது விமர்சனங்கள் மேலும் தொடர வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கை அணியின் களத்தடுப்புக் குறித்து அணித் தலைவர் மத்தியூஸ் கடும் விசனத்தினையும் கோபத்தினையும் வெளிக்காட்டியிருந்தார்.

இதுதொடர்பில் மத்தியூஸ் தெரிவிக்கையில்-

நாங்கள் முக்கிய தருணங்களில் பல பிடியெடுப்புக்களை தவறவிட்டிருந்தோம். நாங்கள் களத்தடுப்பிற்காக கடுமையான பயிற்சிகளை முன்னர் மேற்கொண்டிருந்தோம். ஆனபோதிலும், முக்கிய தருணங்களில் நாம் தொடர்ந்தும் பிடியெடுப்புக்களை தவறவிடுவதானது எமது வெற்றியைக் கோட்டை விட காரணமாக அமைந்து விடுகின்றது. இந்த விடயங்களில் நாம் (அணியாக) நடந்து கொண்ட விதம் எனக்கு மிகவும் ஏமாற்றத் தையும், மனவேதனையை யும் அளிக்கின்றது என தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியானது ஸிம்பாப்வே அணியுடனான முதல் போட்டியில் தவற விட்ட பிடியெடுப்புக்களைப் பார்ப்போமாயின், அமில அபொன்சோ வீசிய போட்டியின் பத்தாவது ஓவரின் போது சொலமன் மிர் (17 ஓட்டங்களுடன் இருந்த போது) இன் பிடியெடுப்பினை நிரோஷன் திக்வெல்ல தவற விட்டிருந்தார்.

அத்துடன், லஹிறு மதுசங்க வீசிய போட்டியின் 16 ஆவது ஓவரின் போது சீன் வில்லியம்ஸ் (13 ஓட்டங்களுடன் இருந்த போது) இன் பிடியெடுப்பினை தனுஷ்க குணத்திலக்க தவறவிட்டிருந்தார்.

அதேபோல், அசேல குணரத்ன வீசிய போட்டியின் 29 ஆவது ஓவரில், மீண்டும் சொலமன் மிர் (94 ஓட்டங்களுடன் இருந்த போது) இன் பிடியெடுப்பு ஒன்றினை லசித் மலிங்க தவறவிட்டிருந்தார்.

மேலும், இந்தப் போட்டியில் அணியில் இணைக்கப்பட்டிருந்த அமில அபொன்சோ மிகவும் மோசமான பந்து வீச்சினை வெளிக்காட்டியிருந்தார். அவரின் மூலம், வெறும் 7.8 ஓவர்களில் 77 ஓட்டங்கள் வரையில் வாரி வழங்கப்பட்டிருந்தது.

ஸிம்பாப்வே வீரர்கள் சார்பில், அபொன்சோவின் ஓவரில் விக்கெட்டிற்கு பின்னால் அமைந்த திசையில் இலகுவாக 46 ஓட்டங்கள் வரையில் பெறப்பட்டிருந்தன. அணியில், எதிரணிக்கு தாக்குதல் தரும் விதமாக பந்து வீசும் ஆற்றல் கொண்டிருக்கும் லக்ஷன் சந்தகன் இருக்கும் போது அபொன்சோவிற்கு வாய்ப்பளித்தமை குறித்து பல கேள்விகள் எழுந்தன.

இது குறித்து மத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

சந்தகன் போட்டிக்கு முந்தைய நாளில் சற்று சுகவீனமுற்றிருந்தார். அதனால் அவருக்கு (பயிற்சி ஆட்டங்களிலிருந்து) முன்னரே வெளியேறும் நிலைமை ஏற்பட்டிருந்தது. எங்களது உடற்பயிற்சியாளர் அவருக்குப் போட்டியின் நாளில் பந்து வீச முடியும் என அறிவித்திருந்தார்.

எனினும், சந்தகன் எதிர்பார்த்த பூரண சுகத்தினை பெற்றிருக்காத காரணத்தினாலும், அபொன்சோ பயிற்சிகளிலும், உடற்தகுதியிலும் சிறப்பாக காணப்பட்டிருந்ததாலும் நாம் அபொன்சோவினை அணியில் இணைத்து விளையாடுவது சிறப்பானது என எண்ணியிருந்தோம் என குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாடும் ஒவ்வொரு வீரரும், அது பெரியவராக இருப்பினும் சரி அல்லது சிறியவராக இருப்பினும் சரி, தமது பயிற்றுவிப்பாளர் மூலம் சொல்லப்பட்ட, பிடியெடுப்புக்கள் போட்டியை வெற்றியாக்கும் என்னும் விசேட விதியைக் கற்றிருப்பார். ஆனால், சர்வதேச கிரிக்கெட் வீரர்களாக காணப்படும் இலங்கை அணி வீரர்கள் அந்த விதியை துரதிஷ்டவசமாக மறந்து விட்டனர் போலத் தெரிகின்றது.

இதுதொடர்பில் மத்தியூஸ் தெரிவிக்கையில்-

பிடியெடுப்புக்கள் போட்டியினை வெற்றியாக்கும் என்பது எமக்கு தெரியும். நாம் பிடியெடுப்புக்களை தவற விடும் வேளையில், போட்டியில் தோல்வியடைவோம். இந்த போட்டியின் கதை போன்று, பாகிஸ்தான் அணியுடனான போட்டியிலும் பிடியெடுப்புக்களை தவற விட்ட காரணத்தினால் தான் நாம் தோல்வியுற்றிருந்தோம்.

அத்தோடு, அணியில் மிகவும் சிறந்த களத்தடுப்பு வீரர்களாக காணப்படுபவர்களும் பிடியெடுப்புக்களை கோட்டை விடுவது மிகவும் ஏமாற்றம் தருகின்றது. எம்மிடம் பல இளம் வீரர்கள் காணப்படுகின்றனர். நாம் மைதானத்தில் களத்தடுப்பிற்காக நிற்கின்ற வேளையில், நேரான மனப்பாங்குடனும் உறுதியுடனும் காணப்பட வேண்டும். அதாவது, எமது மனப்பாங்கு களத்தடுப்பில் முழுமையாக மாறவேண்டும். என மத்தியூஸ் மேலும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலி மைதானத்தில் இரண்டாவது ஒரு நாள் போட்டி இடம்பெற இருப்பதால், இலங்கை அணிக்கு, ஸிம்பாப்வே அணியுடன் பெற்ற இந்த அவமானத் தோல்வியில் இருந்து மீள்வதற்கு ஒரு நாளே மீதமாக எஞ்சியிருக்கின்றது.

இது குறித்து மத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

நாங்கள் பயப்பட வேண்டிய எந்த அவசியமும் இல்லை. இன்னும் நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன. நாங்கள் சரியான மனநிலையை அடைந்து இரண்டாவது போட்டியில் சிறப்பாகச் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சாதனை படைத்தார் டோனி: இந்தியாவுக்கு அசத்தல் வெற்றி!

ஆண்டிகுவா, ஜூலை 02

மேற்கிந்திய தீவு அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணி 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய அணி, மேற்கிந்திய தீவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டி மழையால் பாதித்தது, இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இரு அணிகள் மோதும் மூன்றாவது ஒரு நாள் போட்டி ஆண்டிகுவாவில் நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய அணி 50 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக ரகானே 72 ஓட்டங்களும், டோனி 78 ஓட்டங்களும் குவித்தனர்.

251 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவு அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்களை எடுத்து தோல்வியைச் சந்தித்தது.

# கிராமியப் பாடசாலைகளின் வசதிகள் மேம்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதி



கொழும்பு, ஜூலை 02

முன்னணிப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக இருந்துவரும் போட்டிக்கு நிலையான தீர்வு கிராமியப் பாடசாலைகளை அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் மேம்படுத்துவதாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தக் கொள்கைக்கேற்ப செயற்பட்டுவரும் தற்போதைய அரசாங்கம், கிராமப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பல விரிவான நிகழ்ச்சித் திட்டங்களைமுன்னெடுத்துவருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பத்தேகமபுனிதஅந்தோனியார் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழில்நுட்ப பீடம் மற்றும் தொழில்நுட்பக்கூடத்தை மாணவர்களிடம் கையளித்தல் மற்றும் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கல்விக் கண்காட்சியைத்திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது அதில்கலந்துகொண்டுஉரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நகரத்திலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கருத்தின் காரணமாக பெற்றோர்களிடையே இந்தப் போட்டித்தன்மை ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அருகில் இருக்கும் பாடசாலையை சிறந்த பாடசாலையாக மாற்றி நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்க தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது எனக் கூறினார். (ம)

### சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னேஸ்வரன் நிரூபித்துக் காட்டட்டும் என்று சுமந்திரன் விடுத்த சாவலுக்கே இப்படிப் பதில்சவால் விடுத்திருக்கின்றார் சுரேஷ்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில், 'வடமாகாண முதலமைச்சரின் வீட்டிற்கு முன்னாலுள்ள வீதி ஒடுக்கமானது. அதில் நூறு பேரிருந்தாலும்பாரியஜனப்பிரளயம் போன்றே தென்படும். அதனைக் கண்டு தனக்கு மக்கள் சக்தியிருக்கிறது எனமுதலமைச்சர் நினைக்கக் கூடாது. அவ்வாறு நினைப்பாராகவிருந்தால் மாகாண சபையைக் கலைத்து விட்டுத் தேர்தலை நடத்திப் பார்க்கட்டும்' – எனத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் சுரேஷிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும், அரசாங்கம் மற்றும் கூட்டமைப்பினரை எதிர்த்தும் 'எழுக தமிழ்ப்' பேரணியொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற அந்த எழுக தமிழ்ப் பேரணியில் எத்தனை ஆயிரம் மக்கள் கலந்து கொண்டனர் என்பது சுமந்திரனுக்குத் தெரியும்.

வடமாகாண முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக சமூக வலைத்தளங்கள் மூலமாக இளைஞர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க உடனடியாகவே முதலமைச்சரின் இல்லத்திற்கு முன்பாகக் கூடிய இளைஞர் கூட்டத்தையும்–

இரண்டாம் நாளில் வடமாகாணம் தழுவிய ரீதியில் வெற்றிகரமாகக் கடையடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டமையையும்–

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றுகூடி முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்தமையையும் சுமந்திரன் போன்றவர்களுக்கு ஏற்றுக்கொள்வது கடினமாகத்தானிருக்கும்.

ஏனெனில், முதலமைச்சருக்கு ஆதரவான மக்கள் எழுச்சி அவர்களை மிரட்டியுள்ளது என்பது தான் உண்மை.

இதனால் தான் வடமாகாண முதலமைச்சர் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும், வடமாகாண சபையைக் கலைத்துவிட்டு அடுத்த தேர்தல் நடத்த வேண்டும் என்றெல்லாம் சுமந்திரன் கூறுகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் சுமந்திரன் முடிந்தால் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டு மாகாணசபைத்தேர்தலிலேயோ அல்லது வேறு தேர்தல்களிலேயோ போட்டியிட்டு வெற்றி கொள்ளட்டும்.

அவ்வாறு சுமந்திரன் வெற்றியடைந்த பின்னர் இவ்வாறு சவால் விட்டால் அவர் சொல்வதிலும் ஒரு அர்த்த மிருக்கும்.

எமது மக்களால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் விற்றுப் பிழைப்பவர்கள் என்று பெயரெடுத்த சுமந்திரன் போன்றவர்கள், வடமாகாண மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற முதலமைச்சருக்கு எதிராகச் சவால் விடுவது அர்த்தமற்ற, சிறுபிள்ளைத்தனமான செயல் எனவும் கடுமையாகச் சாடினார் சுரேஷ். (உ)

### அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பில் மக்களின் அடிப்படை உரிமைகளும் அரசியல் உரிமைகளும் பாதுகாக்கப் பட்டுள்ளனவா என்பதை மீண்டும் ஆராயுமாறும் மனித உரிமைகள் கவுன்ஸில் அரசுக்கு அறிவித்துள்ளது.

### கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதேஅவர்இவ்வாறுகூறினார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக தொடர வேண்டுமா? இல்லையா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு பதிலளித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழரசுக் கட்சி ஆதரவை விலக்கினால் சி.வீ.விக்னேஸ்வரன் முதல்வராக இருக்க முடியாது.

தமிழரசுக்கட்சியின் ஆதரவில் தான் இன்றும் அவர் முதல்வராக இருக்கின்றார். தமிழரசுக் கட்சி ஆதரவைவிலக்கிக்கொண்டால் அவர் முதல்வராக இருக்க முடியாது. அது அவருக்கும் தெரியும். – என்றார் சுமந்திரன் எம்.பி.

முதலமைச்சரை நீக்கத் தென்னிலங்கை சக்திகளுடன் இணைந்துசதிநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது எனச்சொல்லப்படுகிறதே என்றுகேட்டதற்குப்பதிலளித்த சுமந்திரன் –

முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொடுக்கப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய தேசியக் கட்சி மனோ கணேசன் மற்றும் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் அவருக்குச் சார்பாக அறிக்கை விட்டனர்.

இவர்கள் எல்லோரும் அவருக்கு ஆதரவாக இருக்கின்ற போது தென்னிலங்கைச் சக்திகள்என்றுமுதலமைச்சர்யாரைக் கூறினார்என்பது எனக்கு விளங்கவில்லை. – என்றார் சுமந்திரன்.

மேலும், தற்போது எவரும் கூறாத 13 ஆம் திருத்தம் தொடர்பாக வடக்கு முதலமைச்சர் ஏன் திரும்பத் திரும்பக் கூறுகின்றார் என்பது எனக்கும் கேள்விக்குறியாக இருக்கின்றது. ஏனெனில் இடைக்கால அறிக்கையில் 13 ஆம் திருத்தம் பற்றி ஒரு வசனம் கூட இல்லை. கொடுக்கப்படும் அதிகாரங்கள் அதி உச்சமாக இருக்கும்எனச்சொல்லப்படுகின்றது.

ஆகவே, இல்லாத ஒன்றை பற்றி அதில் என்ன உள்ளது என்பது பற்றி தெரியாத ஒருவர் எப்படிசொல்வது? அவ்வாறுஏன் சொல்கிறார் என்பது குறித்து எனக்கு விளக்கம் தெரியவில்லை.

இன்றைய (நேற்றைய) நாளிதழ் ஒன்றைப் படிக்கின்றபோது அதன் ஆசிரியர் தலையங்கத்தில் –

நேற்று முன்தினமிரவு (வியாழன் இரவு) நடந்த இராப்போசன விருந்தில் முதலமைச்சருக்குப் பக்கத்தில் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. அமர்ந்திருந்து எல்லாம் 13ஆம் திருத்தச் சட்டத்திற்குள்ளேயேமுடிந்துவிடும்எனக்கூறினார் எனவும் அதைக் கேட்டே முதலமைச்சர் இவ்வாறு 13 இற்குள் எல்லாம் முடிந்துவிடும் எனக் கூறுகின்றார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. –எனசுமந்திரன் எம்.பி குறிப்பிட்டார். (ம)

### புதிய....

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

நிலங்கள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கைதிகள் முன்றில் இரண்டு பகுதியினர் விடுவிக்கப்பட்டுள்ளனர். காணாமற்போனோர் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் மேலாக எமது பிரச்சினைக்கு தீர்வாக புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள்முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதற்காகவே தேசிய அரசிற்கு ஆதரவு கொடுக்கிறோம்.

இவ்வாறு பல்வேறு காரணங்களுக்காகத் தேசிய அரசாங்கத்தை அமைத்துச் செயற்பட்டு வருகின்ற நிலையில், அவற்றையெல்லாம்முறியடிப்பதுமுட்டாள்தனம். எதைச் செய்ய நினைத்தோமோ அல்லது எதை அடைய நினைத்தோமே அதற்கான வழியைத்தான் தற்போது அமைத்திருக்கின்றோம். அதற்கமையவே பயணிக்கின்றோம்.

எமது இலக்கை அடைய வேண்டுமாக இருந்தால் இந்த அரசிற்கு ஆதரவை வழங்க வேண்டும். அரசாங்கம்நிலைக்க வேண்டும்.

முக்கியமானதொரு நோக்கத்திற்காக இந்த அரசை நாங்கள் கொண்டு வந்துவிட்டு – ஒரு வழியை நாம் அமைத்துவிட்டு – இப்போது அதைத் தாக்கி வீழ்த்துவதென்பது எங்களுடைய முகத்தில் நாங்கள் கரியைப் பூசுகிற செற்பாடாகத்தான் இருக்கும். அதற்காகத்தான் தற்போதும்நாங்கள்அரசிற்குஆதரவை கொடுத்து வருகிறோம்.

எமக்குச் சாதகமான நடவடிக்கைகளுக்காகப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்ற நிலையில், அரசுக்கான ஆதரவைநாம் விலக்கிக்கொண்டால், முழு உலகினதும் குற்றச்சாட்டு எங்களையும், எங்கள்மக்களையும்நோக்கியதாகவே இருக்கும். இந்த விடயத்தில் நாம் கவனமாக இருக்கின்றோம்.

எமக்கு சாதகமான விடயங்களுக்காக அரசை நாம் ஆதரிக்கின்றஅதேவேளை,சமகாலத்தில் நடைபெறுகின்றஎமக்குஎதிரான விடயங்களுக்கு நாம் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம்.அவற்றை நாம் ஆதரிக்கவில்லை.

குறிப்பாக, அத்துமீறிய தென்னிலங்கை மீன்பிடி, பௌத்த விகாரைகள் அமைப்பது, அரசமைப்பு விடயத்தில் அரசு கால தாமதம் செய்வது போன்றன உள்ளிட்ட பல விடயங்களை நாம் எதிர்த்து வருகின்றோம். – என்றார் சுமந்திரன் எம்.பி. (ம)

### ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை ஜனாதிபதியின் செயலாளராகப் பணியாற்றி வந்த பி.பி.அபேகோன் நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்தார். தமது சொந்தக் காரணங்களுக்காக அவர் பதவி விலகினார் என்று கூறப்பட்டாலும், ஜனாதிபதியுடன் அவருக்கு சுமூகமான உறவு நிலவாத காரணத்தினாலேயே அவர் தமது பதவியைத் துறந்தார் எனச் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை –

இதுவரை கிழக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றி வந்த ஒஸ்ரின் பெர்ணான்டோ கடந்த 22 ஆம் திகதி அப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தார். அந்த இராஜினாமாவைக் கடந்த 27 ஆம் திகதி ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன,நேற்றுமுன்தினம் இரவு அவரைத் தமது செயலாளராக நியமிக்கும் கடிதத்தில் ஒப்பமிட்டார் என அறியவந்தது.

1963 முதல் 1962 வரை பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்த ஒஸ்ரின் பெர்ணான்டோ 1967 இல் சிவில் சேவையில் இணைந்தார்.

மாத்தளை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உதவித் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றிய அவர், 1975 முதல் 1981 வரையிலான காலப் பகுதியில் நுவரெலியா அரச அதிபராகவும், பொலன்னறுவை மேலதிக அரச அதிபராகவும் பணிபுரிந்தார்.

1986 முதல் 1988 வரை புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராகக்கடமையாற்றிய அவர், அத்தியாவசியச்சேவைகள் ஆணையாளராகவும் பணியாற்றினார்.

1988 முதல் 1991 வரை வடக்கு – கிழக்கு நிதித் திட்டத்துக்கான சிரேஷ்ட அதிகாரியாகக் கடமை புரிந்த அவர், 1991 – 1992 இல் அரச இரத்தினக்கல் கூட்டுத் தாபனத்தலைவராகவும், 1992–1993 இல்தபால்மாஅதிபராகவும்பணியாற்றினார்.

பல்வேறு அமைச்சுக்களில் உயர்பதவியிலிருந்தஅவர், ரணிலின் முன்னைய அரசில் – 2001 டிசெம்பர் முதல் 2003 நவம்பர் வரை – பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார். பின்னர் ஏப்ரல் 2004 வரை பிரதமரின்ஆலோசகராகப்பணியாற்றினார்.

2015 ஜனவரி மாதம் முதல் புதிய ஜனாதிபதியின் ஆலோசகராகப் பணிபுரிந்து வந்த அவர், 2015 பெப்ரவரி முதல் கடந்த மாதம் வரை கிழக்கு மாகாண ஆளுநராகவும்செயற்பட்டார்.(உ)

### சிறைக் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பைத் தெரி வித்து அவர்களைச் சாதாரணசட்டத்திற்குள்கொண்டு வந்திருந்தேன். என்னுடைய வாழ்நாள் முழுவதும்நான்பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரானவன்.

இந்தநிலையில், அவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் கண்டிக்கப்படவேண்டியது. சிறைச்சாலையில் இவ்வாறு தாக்குவது இது முதல் சம்பவம் அல்ல. ஏற்கனவே இருவர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். – என்றார். (ம)

### முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை விதிக்கும் சட்டமூலம் எதிர்வரும் வியாழனன்று நாடாளுமன்றுக்கு வருகின்றது.

இந்தச் சட்ட மூலத்துக்கான பிரேரணையைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆள்களைக் காணாமலாக்குகின்றமையைக் குற்றமாக்கும் விசேட சட்ட மூலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட விருக்கின்றது. (உ)

### ஆளும் தரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் தரப்பு எம்.பிக்கள் அனைவரும் இக் கூட்டத்தில் பங்கேற்பர் என்றும் –

சில, பலமுக்கியதீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்மலானை விமான நிலையத்திலிருந்தே விமானத் தைக்கடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அமெரிக்கத் தூதரகத்தில் உயர் அதிகாரிகள் நீண்ட நேரத்துக்கு உள்ளே தங்கியிருப்பதைத் தவிர்த்து வருகின்றனர் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விஜேதாச ராஜபக்ஷவின் கருத்துகளை அடியோடு மறுக்கிறார் அமைச்சர் மனோ!

கொழும்பு, ஜூலை 02

அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், பௌத்த விகாரைகள் விவகாரங்களில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தொடர்ச்சியாக தெரிவித்துவரும் கருத்துகளை ஏற்க முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் கருத்துகள் சிறுபான்மை மக்களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும் நமது அரசில் இருந்து அந்நியப்படுத்துகின்றன.

கடந்த தேர்தல் காலங்களில், தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களையும் புறந்தள்ளிவிட்டு விஜேதாச ராஜபக்ஷவுக்கு விருப்பு வாக்குகளை அளித்த கொழும்பு வாழ் சிறுபான்மை வாக்காளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகள் விவகாரம் எனது அமைச்சின் கீழ் வருகிறது. எனவே, அமைச்சருக்கு எந்த ஓர் அரச சார்பற்ற சமூக அமைப்பு தொடர்பில் முறைப்பாடு இருக்குமானால் அதை அவர் என்னிடம் தெரிவிக்க வேண்டும்.

எவராவது சட்டத்தை மீறி இருப்பார்களேயானால், அதை நான்சட்டப்படி கையாள்வேன். அதைவிடுத்து எனது வரையறைக்குள் நுழைந்து, அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும், நாட்டின் தேசிய ஐக்கியத்துக்கும், தேசிய நலனுக்கும் ஊறுவிளைவிப்பதாக பொதுப்படையாக கூற வேண்டாம் என்றும், உண்மையில் சில மத அமைப்புகளும், அரசியல்வாதிகளும்தான் தேசிய ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்கிறார்கள் என்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் கூறி வைக்கிறேன்.



பௌத்த விகாரைகள் விவகாரங்களில் அரசு தலையிட முடியாது என எப்படி அவர் கூற முடியும்? உண்மையில் இன்றைய அரசமைப்பில், பௌத்தத்துக்கு இருக்கும் முன்னுரிமை அப்படியே இருக்கப்போகிறது. இது எனக்கும், விஜேதாச ராஜபக்ஷ உட்பட வழிகாட்டல் குழுவின் எல்லா அங்கத்தவர்களுக்கும் தெரியும்.

ஆனால், இது ஒரு குடியரசு. நாட்டின் அதியுயர் அதிகாரம் மக்களுக்கே இருக்கிறது. அந்த மக்களே அரசையும், நாடாளுமன்றத்தையும் தெரிவு செய்கிறார்கள். அரசமைப்பின் பிரகாரம் அரசுக்கும், நாடாளுமன்றத்துக்கும் மேலே மதத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ள, ஈரான் போன்ற ஒரு நாடு அல்ல, இலங்கை.

உண்மையில் சட்டத்தை பௌத்த துறவிகள் மீறுவார்களேயானால், அவர்களுக்கு எதிராக இலங்கை வரலாற்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் பண்டாரநாயக்க ஒரு பிக்குவால் படுகொலை செய்யப்பட்ட போது, அந்த கொலைகாரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை இலங்கை அரசு எடுத்திருந்தது.

1971, 1989 ஆம் ஆண்டு காலகட்டங்களில் இலங்கை அரசு பயங்கரவாதம், பௌத்த விகாரைகளுக்குள் நுழைந்தது. இவை வரலாற்றுச் சான்றுகள். எனவே, புதிய வரலாறு தேவையில்லை.

கடந்த காலங்களில் உள்நாட்டு சமூக அமைப்புகள் துரோகிகளாகவும், வெளிநாட்டு சமூக அமைப்புகள் எதிரிகளாகவும் சித்திரிக்கப்பட்டார்கள். அதை நான் பதவி ஏற்ற பிறகு மாற்றியுள்ளேன்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகள் கடந்த காலங்களில் பரவலான பணிகளைச் செய்துள்ளன. கஷ்ட காலங்களில் அவர்களுடன் இணைந்து நான் செயற்பட்டுள்ளேன். அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ற சமூக அமைப்புகளை புறந்தள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகளை பயங்கரவாதம் என விமர்சித்திருப்பார் லெனின்!

கொழும்பு, ஜூலை 02

ரஷ்யாவின் தத்துவஞானி விளாடிமிர்லெனின்உயிருடன் இருந்திருப்பாரானால், தற்போது பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகளை பயங்கரவாதம் என்று விமர்சித்திருப்பார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் சுகாதார அமைச்சுக்குள் பிரவேசித்து கலகம் விளைவித்த சம்பவம் தொடர்பிலேயேஇந்தக்கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

**அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

லெனினின் கூற்றுப்படி ஒரு குழந்தைத் தனமான ஒழுங்கற்ற செயற்பாடே பயங்கரவாதமாகும்.

எனவே, பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடும் அவ்வாறே இருந்தது.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தச் செயற்பாடு குறித்து வருத்தம் வெளியிட்டுள்ளமை வியக்கத்தக்க செயலாகும்.

குடிதண்ணீருக்காக போராட்டம்நடத்தியவர்களைக்கொலை செய்த ரத்துபஸ்வல சம்பவத்தில் தொடர்புடைய அவர் பல்கலைக்கழக மாணவர்கள் விடயத்தில் ஒருவர் கூட கொல்லப்படவில்லை என் பதை கண்டு வருத்தம் கொண்டவராகவே தமது கருத்தை வெளியிட்டுள்ளார் என்றும் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானிலுள்ள இலங்கையர்களுக்கு ஆபத்து!

கொழும்பு, ஜூலை 02

ஜப்பானில் வாழும் இலங்கையர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் மோதல் நிலை ஏற்பட்டதை அடுத்து அங்கு வசிக்கும் இலங்கையர்களுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் திருவிழா என்ற நிகழ்விலேயே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

குடிபோதையில் இரண்டு குழுவுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தீர்க்கும் நடவடிக்கையில் ஜப்பான் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதன்போது இலங்கையர்கள் சிலர் ஜப்பான் பொலிஸார் மீது கடுமையான தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனையடுத்து ஜப்பானில் வாழும் இலங்கையர்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக, தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஜப்பான் பொலிஸ் குழுவொன்று மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில், விசா இன்றித் தங்கியிருந்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜப்பானில் வாழும் இலங்கையர்கள் தொடர்பில் விசேட விசாரணைமுறை ஒன்றை ஜப்பான் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தீர்வை தாமதப்படுத்தினால் வேலைநிறுத்தம்; பெற்றோலிய தொழிற்சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 02

அரசு இணக்கம் தெரிவித்ததற்கு முரணான வகையில் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதில் அசமந்தப் போக்கையே முன்னெடுக்கின்றது. எனவே, இந்த நிலை நீடித்தால் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம் என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்க தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க தலைவர் டி.ஜே.ராஜகருணா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு அரசு தாமதப்படுத்தி வருகின்றது.

கடந்த காலங்களில் நாம் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என அறிவித்த போது எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படும் என கூறிய அரசால் இன்று வரை எவையும் அறிவிக்கப்படவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்யக்கூடாதென்றும் திருகோணமலை துறைமுகத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பொருளாதார எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைதூய்மைபடுத்தும் செயற்பாடுகளை அரசே முன்னெடுக்க வேண்டும்என்றுவலியுறுத்தியுமே இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எனவே, அடுத்த வாரத்திற்குள் தீர்வு கிட்டாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** கம்பர்மலை, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும், **வவுனியாபிரதேசத்தில்** தேக்கவத்தை பிரதேசத்திலும், **மன்னார் பிரதேசத்தில்** மடுக்கரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# டெங்கால் மொறட்டுவை பல்கலையில் கல்விச் செயற்பாடுகள் 2 வாரங்கள் நிறுத்தம்!

டெங்கு காய்ச்சல் தொற்று காரணமாக மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி நேற்றுத் தொடக்கம் இரண்டு வார காலத்திற்கு கல்வி நடவடிக்கைகள் இடம்பெறா என மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஆனந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைமாணவர்கள்பெரும்பாலானவர்கள் மத்தியில் பரவிச் செல்லும் காய்ச்சல் நோய் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கான ஏது நிலைகள் உயர்ந்துள்ளன எனப் பேராசிரியர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பல்கலைக் கழகத்தின் ஏனைய பணிகள் வழமை போன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் 87 மாணவர்கள் வரை டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு மாணவி மரணித்துள்ளார் எனவும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் சமிந்த கித்சிறி தெரிவித்தார்.

தற்போது நிலவும் பிரச்சினைக்குத் துரித தீர்வு காணுமாறு மாணவர்கள் நேற்றுக் காலை அமைதி வழிப்போராட்டத்திலும் ஈடுபட்டனர். (உ)









நாவலர் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நாவலர் திருவுருவச்சிலையை வடக்கு முதலமைச்சர் நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.



யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களை மீளக் குடியேற்றுவது தொடர்பான விசேட உயர் மட்டக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில்நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.அரசஅதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், எம். பிக்கள் மாவைசேனாதிராஜா, அங்கஜன் இராமநாதன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# வாய்த் தர்க்கம் கைகலப்பானது: வவுனியாவில் ஒருவர் படுகாயம்

வவுனியா – கோவில்புதுக்குளத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கோஷ்டி மோதலொன்றில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.ரஜீவ்காந் (வயது 32) என்பவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத் தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஒரு மணிநேரம் வரை பதற்ற நிலை காணப்பட்டது. எனினும், வவுனியா தமிழ் மொழிமூல அவசர பொலிஸ் சேவைக்குத் தகவல் வழங்கிய போதிலும் அவர்கள் சம்பவ இடத்திற்குச் செல்லவில்லை எனத் தெரியவருகின்றது. இதனால் மக்கள் பொலிஸார் மேல் கடும் விசனம் வெளியிட்டனர். (ம-100)

# புதிய அமைச்சர்கள் நியமனத்தை அடுத்து செயலாளர்கள் பொறுப்புக்களில் மாற்றம்

வடக்கு மாகாணசபைக்கு இரண்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமையை அடுத்து அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்புக்களும் மாற்றப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் கல்வி, விவசாய அமைச்சர்கள் பதவி விலகியதை அடுத்து அந்த இரு அமைச்சுக்களையும் முதலமைச்சர் பொறுப்பேற்றிருந்தார். அதன் பின்னர் புதிதாக சர்வேஸ்வரன், அனந்தி ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதையடுத்து அமைச்சர் அனந்தியின் அமைச்சுச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர். வரதீஸ்வரனின் பொறுப்புக்களும், வடக்கு முதலமைச்சரின் அமைச்சுச் செய லாளர் திருமதி ரூபினிவரதலிங்கத்தின் பொறுப்புக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி முதலமைச்சரின் அமைச்சுச் செயலரிடமிருந்து சமூக சேவைகள், மகளிர் விவகாரம், புனர்வாழ்வு, தொழில்துறை ஆகிய அமைச்சுப் பொறுப்புக்கள் ஆர்.வரதீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆர்.வரதீஸ்வரனிடம் இருந்த விவசாயம், நீர்ப்பாசனம் ஆகியன முதலமைச்சரின் அமைச்சுச் செயலருக்கு மாற்றப்பட்டுள்ளன.

# புதிய மாநாட்டு மண்டபம் முல்லை செயலகத்தில் திறப்பு

முல்லைத்தீவு, ஜூலை 02

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாநாட்டு மண்டபக் கட்டடம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவினால் நேற்றுக்காலை 9 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாநாட்டு மண்டபத்தின் பெயர்ப் பலகையை அமைச்சர் வஜிர அபேவர்தன திரைநீக்கம் செய்து கட்டடத்தினைத் திறந்து வைத்து கருத்துரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, வளாகத்தில் அமைக்கப்பெற்ற சிற்றுண்டிச் சாலையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அவர்கள் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், பொலன்நறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜெஜரட்ண, வட மாகாண சபை பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர் சிவநேசன், பிரதேசசெயலாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை





எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.